# பனி மலர்

(புனைகதை)

முதுமுனைவர்

**இரா. இளங்குமரனார்**

பதிப்பாசிரியர்

**முனைவர் பி. தமிழகன்**

# பனிமலர்

## (புனைகதை)

முதுமுனைவர்

**இரா. இளங்குமரனார்**

பதிப்பாசிரியர்

**முனைவர் பி. தமிழகன்**

**வெளியீடு**

**திருவள்ளுவர் நிலையம்**

7, இராமன் தெரு, திருநகர், மதுரை - 625 006.

## நூல் விளக்கம்


| | |
|---|---|
| நூலின் பெயர் | **பனிமலர்** |
| ஆசிரியர் | முதுமுனைவர் **இரா. இளங்குமரனார்** |
| மொழி | தமிழ் |
| தாள் | மேப்லிதோ |
| புத்தக அளவு | தெம்மி (1/8) |
| பக்கங்கள் | 96 |
| படிகள் | 500 |
| விலை | உருவா. 50 |
| உரிமை | ஆசிரியர்க்கு |

கணினி அச்சும் & அச்சாக்கமும் : **தி பிரிண்டிங் அவுசு,**
6, ரேசுகோர்சு ரோடு,
திருச்சி - 23, தமிழ்நாடு, இந்தியா
தொலை பேசி : 0431-2420121

வெளியீடும், நூல் கிடைக்குமிடமும் : **திருவள்ளுவர் நிலையம்**
7, இராமன் தெரு, திருநகர், மதுரை - 625 006.

முனைவர் **பி. தமிழகன்**
2, பிச்சையம்மாள் நகர், காசாமலை, திருச்சி - 23.

# பனிமலர்

நாற்பத்தைந்து ஆண்டுகளின் முன்னே மாதந்தோறும் திருக்குறள் தொடர் பொழிவு ஒன்பது இடங்களில் செய்தேன். அவ்விடங்களுள் ஒன்று திருவானைக்கா! அங்கே **திருவாவடுதுறைத் திருமடம்!** அதில் பொழிவு, அப்பொழிலவ அறிந்து, பூவாளூர் **தியாகராசர் வழிவழிப் பேரன் திருமூலநாதன்** தன் பெற்றோர்களோடு எய்தினான். நான்கு அகவை ஆகாதவன்; திருக்குறள் முற்ற ஓதிய கவனகன் என்பதை அறிந்தேன். திங்கள் தோறும் அவனை முற்படச் சில அதிகாரங்களைச் சொல்லச் செய்து என் பொழிவைத் தொடரும் வழக்கத்தைக் கொண்டேன்.

அங்குக் காரைக்குடிக்காரர் **முத்தையா** என்பாரின் பேரன் **மீனாட்சிசுந்தரம்** என்னும் சிறுவனும் தாத்தாவுடன் வந்தான். திருமூலநாதன் திருக்குறள் ஒப்பிப்பதை அறிந்து, "தாத்தா நான் அடுத்த கூட்டத்தில் திருக்குறள் சொல்கிறேன்" என்றான். திருமூலநாதன் ஒப்பிப்பது கண்டு மனப்பாடம் தொடங்கியவன் அவன்! அப்பொழுது அவன் **அகவை 2; மாதம் 8,** என்றார் தாத்தா. அவன் சொல்லியவாறே முதல் மூன்று அதிகாரங்கள் சொன்னான். தொடர்ந்து மனப்பாடம் செய்தான், ஒப்பித்தான். மனப்பாடம் நிறைந்த வயது அறியேன். பின்னே ஒருநாள் முத்தையா அவர்கள் அவன், ஆங்கிலத்திலும் திருக்குறளைச் சொல்வான்; மேலும் **சிவஞான போதமும் மனப்பாடம் ஆக்கிவிட்டான் என்றார்.**

தஞ்சை - கரந்தையில், **கோபிசிங்** என்பார் மகளார் **பிரதீபா** பள்ளியில் படிக்கும் போதே கவனகம் முடித்ததும், திருக்குறளை விரைந்து சொல்லி **40 மணித் துளிகளில் முடிக்கத் திறம் பெற்றதும் அறிவேன்.**

திருக்குறள் கவனகர் பெ. **இராமையனார்** தம் கேள்விப் புலனால் திருக்குறள் கவனகம் செய்து தமிழகப் பரப்பெல்லாம்

பரப்பியதும், அவர் மகனார் **கனக சுப்புரத்தினம்** அக்கலையை மலையகம் முதலாக உலகப் பரப்பலை மேற்கொண்டதையும் அறிவேன். அவர் கவனகம் கண்ட இளஞ்சிறுவர் பள்ளி மாணவர் **கலை. செழியனார்** திருக்குறள் கவனகத்தொடு எழுபது கடந்த **கவனகக் கலை வல்லுநராய்த் திகழ்தலை அறிவேன்.**

**இராமையனார்க்கு** முன்னுறத் திருக்குறள் கவனகராகத் திகழ்ந்து **தென்காசி, மதுரைத்** திருக்குறள் கழகங்களை நிறுவியதுடன் 31 கழகங்களை நிறுவி, **தந்தை பெரியார் கூட்டிய மாநாட்டில்** தாமும் தம் மகன் **இராமதாசுமாகக்** கலந்து கவனகம் செய்தவர் **தி.ப.சுப்பிரமணியதாசர்** வரலாற்றைப் பதிவாக்கியுள்ளேன். 2001-இல் தென்குமரி, திருவள்ளுவர் சிலை, திறப்பின் போது, திருக்குறள் பரப்பலே வாழ்வாக உடைய முனைவர் **மோகனதாசர் கவனகச் செல்வங்களோடு அரங்கமேறியதை நேரில் கண்டுளேன்;** வழக்குரைஞர் பட்டம் பெற்றும் வணிகராக விளங்கும் **தென்னிலை இராம. கோவிந்தனார்,** வைரிசெட்டிப்பாளையம் வேளாண்மையர் **இராமலிங்கம்** என்பார், திருமழபாடி முனைவர் திரு. அ.ஆறுமுகனார் அரும்பாவூர் மருத்துவர் திரு.க.கோபாலர் எனப் பல்லாயிரவர் இளையரும் முதியரும் திருக்குறள் கவனகராக விளங்குகின்றனர். பதினாறு வயதிலே நோபல் பரிசு பெற்றிருக்கிறாரே மலாலா என்னும் ஒரு செல்வி. **வள்ளலார்** தம் ஒன்பதாம் அகவையில் பொழிவு செய்த சென்னை இலிங்கியார் தெரு, **சோமு** என்பார் வீடு, **வள்ளலார் மாளிகை, மறைமலையடிகள் நூலகமென** மல்லிகேசுவரர் திருக்கோயில் முன் உள்ளது, கல்வெட்டும் உள்ளது. அவர் பாடிய **கந்த கோட்டம்** கந்தசாமி கோயிலாக விளங்குகிறது. அருட்பா - மருட்பா வழக்கில் ஊன்றிய **ஆறுமுக நாவலர்** ஒன்பதாம் அகவையில் எழுத்தாணி பிடித்தவர், தந்தையார் விட்ட குறையைத் தொட்டவர்.

சமயம் சார்ந்த ஞானசம்பந்தர், குமரகுருபரர், நம்மாழ்வார் மிக இளமையிலேயே,

"இளமையில் சிறந்த வளமையும் இல்லை" (நற்றிணை) என்பதை மெய்ப்பித்தவர். இத்தகையர் உள்ளுறையே குயிலன், குயிலியர் படைப்பு. "நான், காரைக்கால் அம்மையார்" என்ற அறிவரை நேரில் கண்டுளேன். பனிமலர் செவ்வேள், வெள்ளி, கனி, மருதி முதலோரும் என்னுள் உள்ளவரே; வாழ்த்துரைப்போர் கண்முன் காட்சி தருபவரே!

பொருந்திய காட்சியமைப்பு, உரையாடல், மேற்கோள் பாடல் ஆகியவை என் எண்ணத்தின் வண்ணமே! இவ்வளவும் கூறியது வெறும்புனைவன்று இக்கதை, வாழ்ந்து கொண்டு இருப்பவர் என் உள்ளகமாக இருந்து குரல் கொடுப்பவர்களே என்பதற்காக. "இளமைக்காதல் முதிர்தல் கொடை", சுடர்த்தொடி கேளாய் என்னும் கலித்தொகைப்பா.

வெள்ளி, மருதி, கருப்பாயி நல்லையாவும், யான்கண்டவரே! மகளை மொட்டையிட்டுச் சிறைவைத்ததும் புனைவில்லை. யான் அறிந்து கண்ணீர் வடித்த காட்சியே.

தவத்திரு தனிநாயக அடிகள் கொண்ட உலகளாவிய தமிழுலா, என் அயலகத் தமிழுலாக்கள் பன்னிரண்டு, பொழிவுகள் நூற்று எழுபத்திரண்டின் தூண்டலே நிறைவில் உள்ள தமிழுலா.

தமிழ்ப்புனைகதை எனினும், இலக்கியச் செறிவு வாய்ந்தது. ஊடு ஊடு தக்க பாடலுடையது. பாடல்களோ எளியவை. பொழுது போக்க எழுதியதன்று; பொருளுரையாகத் தீட்டியது.

இப்புனைகதையை எழுதியவுடன் என்றும் போல் ஆர்வத்தால் படித்து நல்லுரை வழங்கிய என் மகளார் கலைமணியார்க்கு இனிய வாழ்த்துக்கள்.

இதனைத் தம் படைப்பாக எண்ணிப்பதிப்பவர், என்றும் என் நன்றிக்குரிய முனைவர் பி. தமிழகனார். அச்சிடுபவர் திருச்சிராப்பள்ளி அச்சுக் குழுமத்தார், அவர்களுக்குத் தொடர் நன்றி.

இன்ப அன்புடன்,

**இரா. இளங்குமரன்.**

# நல்ல வெளிச்சத்தை நோக்கிய நகர்வு

சிறுவன் திருமூலநாதன் தன் நான்காம் அகவையிலேயே திருக்குறளை முற்றோத முடிகிறது. திருமூலநாதன் திருக்குறளை ஒப்பித்தல் கேட்டு, இரண்டு வயது எட்டுத்திங்களில் மனப்பாடம் தொடங்கிய மீனாட்சி சுந்தரம் படிப்படியே மனப்பாடம் முடித்து ஆங்கிலத்திலும் படித்துச் சிவஞானபோதமும் மனத்தில் வரப்பெற முடிகிறதென்றால், அந்த வகையில் பனிமலர்க் கதையில் வரும் குயிலனும் ஒரு பிஞ்சு மேதையே. அவனைச் சுற்றிக் கதை அமைந்துள்ளது.

பனிமலர் செவ்வேள் போல் இணையர் அமைவது அருமை. அவர்கள் அனைவரையும் தமராக எண்ணும் இயல்பினராதலால் படிப்பார் நெஞ்சில் நிறைவர். தாமரைக் கண்ணியார், கனியார், மருதியார் போலக் கடமை உணர்வும் மனித நேயரும் இருந்தால் வையகம் தழைத்து ஓங்காதா! வெள்ளியாரையே உருக வைத்துவிட்டதே குயிலனின் அன்பு. குயிலனின் தந்தையும் நல்லவரே. அவர் இன்னா செய்ததற்கு நாணியது போல், குற்றம் செய்தவர் யாவரும் அஞ்சி நாணினால், பாரில் அல்லது எதுவும் தொடராதே. அன்பால் கூடிய கூட்டம். அன்பே இறை என்று கொண்ட அருட்கூட்டத்தார் கதையில் வரும் அனைவரும்.

அப்பாவிடம் ஈராண்டுகள் மாணவியாகப் படித்தேன். அப்போது மாணவர்கள் அனைவரும் தமிழ் வகுப்பு என்று ஆர்வமாக எதிர்பார்ப்பதைக் கண்டேன். அந்த ஆர்வமும் எதிர்பார்ப்பும் என்னையும் தொற்றிக் கொண்டது. வந்தவுடன், ஆரம்பிப்பதே ஏதோ ஊரை, காட்டை, இடத்தை அழகுறச் சொல்லி, நிகழிடத்திற்கு அனைவரையும் உடன் அழைத்துப் போவார்கள். அப்படியே ஒவ்வொரு சொல்லையும் உள்வாங்கி, அதில் ஆழ்ந்து, ஊறிப் போயிருக்கும்போது, “இன்று இதுதான் பாடம்” என்று முடிப்பார்கள். கதையாகக் கேட்டு, உள்ளிருத்திய பாடம், பாடலாகப் படிக்கும்போது நயமும் கருத்தும் பசுமரத்தாணி போல்

பதிந்துவிடும் இந்தக் கதையைப் படிக்கும் போது அந்த நினைவுதான் மனத்துள் நிறைந்து இருந்தது.

முன்னுரையைப் படித்தபோது திருக்குறள் பற்றிய நூல் என எண்ணிவிட்டேன். உள்ளே போனபின்தான், கதை என்பது தெரிந்தது. அருமையாகப் பாடல்களை இடத்திற்குத் தகக் கூறும் குயிலனின் தேர்ச்சி அளப்பரியது. இலக்கியத்தில் ஊன்றிக் கால் பதித்த குயிலன் கூறும் பாடல்கள் எல்லாமும் படிப்பாரை வயப்படுத்துவன. சின்னஞ் சிறுவன் வாய் உதிர்க்கும் சொற்கள் பூச்சொரியல் போல் கேட்பார் உள்ளத்தை உவகையடையச் செய்வதுதானே, குயிலனும் குயிலியுமாகத் தமிழுலாச் செல்வது அளப்பரிய மகிழ்வூட்டும் செயலாகும்.

கதை என்றால் தமிழ், ஆங்கிலம், வடமொழி, இந்தி, தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிக்கலவைச் சொற்கள் இருந்தாக வேண்டும் என்ற அடிப்படை இலக்கணம் வைத்துக் கொண்டுதான் எழுதுகிறார்கள். பேச்சு வழக்குப் போல் எழுத வேண்டும் என்பதும் எழுதப்படாத சட்டம். தூய தமிழில், பிறமொழிக் கலப்பின்றிக் கதை எழுத வேண்டும் - முடியும் - என்பதற்கு அப்பா எழுதும் கதை எடுத்துக் காட்டு. எளிமையான சொற்களால், எல்லோருக்கும் புரிந்த எடுத்துக் காட்டுப் பாடல்களால், நயமான பேச்சால், அறிவுரை என்று கூறாமல் கதை மாந்தர் நடப்பால் நல்லது செய்யலாம், நல்லது கூறலாம், நன்னெறிப் படுத்தலாம் என்பதன் வழிகாட்டி நூல்தான் அப்பாவின் கதைகள். அல்லவை நீக்கி எழுதவே ஆகாத இந்தக் கால நிலையில், அறம் கூறும் கதை அமைப்பது, **நல்ல வெளிச்சத்தை நோக்கிய நகர்வு.** மொழிப்பற்று வளரவும் மொழியை வளர்க்கவும் இது மாதிரி நூல்கள் பல வரவேண்டும்.

**புலவர் கலைமணி சான்கிறித்தோபர்**

# தனிப்பெருஞ்சிறப்பு

சேலம் மாவட்டம் - **கொங்கணாபுரம்** - அப்புத் தோட்டம் - கொடை மாட்சி அறக்கட்டளைப் பதின்மம் - மேல்நிலைப்பள்ளியில் (ஆகநல்பள்ளி) **மூன்று நாள் தங்கல்** (6-8-2019) **ஆறுபொழிவுகள்** - என வாய்த்த வாய்ப்பு, **"அருவி நீராடல், பொய்கையில் நீந்தல், பூங்காவில் உலாவல்"** என இன்பம் சேர்த்தன! வண்டி வைத்து அழைத்து, வண்டியில் கொண்டு வந்து விடுத்து, தங்குதல் - உணவு என, எச் செலவுமின்றிக் **கொடை மாட்சிப்பள்ளி** என்பதை மெய்பித்ததால், **தமிழால் வந்தது தமிழுக்கே** என்னும் என்கொள்கைப்படி, நூலாக்கம் பெற்றது இது எனத் **தாளாளர் வள்ளல் ஆய்** முதல் அனைவர்க்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். **'ஆய்'** அவர்கள், **'அமெரிக்கா'**வில் இருந்தாலும் அவர் தம் தம்பியார் அவர்கள் பொறுப்பாகவும் விருப்பாகவும் செயல்பட்டமையை **மற்றை மற்றை நிறுவனங்களும் மேற்கொண்டால், மேலும் மேலும் சிறப்புறும்!**

அங்குப் பயிலும் அனைத்து மாணவர்களும், ஒருங்கே அமைந்து **திருக்குறள் போற்றி 108-ம் கூறி ஒருமையுறும் காட்சியும், மாட்சியும், தமிழ்கூறும் நல்லுலகில் எங்கும் காணரிய தனிப்பெருஞ் சிறப்பினதாம்!**

வாழிய நலனே! வாழிய நிலனே!

இன்ப அன்புடன்
**இரா. இளங்குமரன்**

# பொருளடக்கம்


| வரிசை | உள்ளுறை | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆள் காத்திருக்கிறது | 1 |
| 2. | நீ என்ன காவலாளியோ? | 4 |
| 3. | குயில் இசை பாடுமா? | 8 |
| 4. | நாளைக்குப் பேசலாம் | 11 |
| 5. | அறம் நுழையாப் பள்ளி | 14 |
| 6. | பாடு! - பாடாதே! | 17 |
| 7. | உயிரின் வேண்டுதல் | 21 |
| 8. | மணி ஒலித்தது | 25 |
| 9. | குட்டையன் என்னும் மொட்டையன் | 28 |
| 10. | இன்றைக்கு மட்டுமில்லை என்றைக்கும் | 31 |
| 11. | எதிர்பாராதது எய்தும் | 34 |
| 12. | பனிக்கனி | 37 |
| 13. | மணிமங்கலம் | 40 |
| 14. | முத்துவிழா | 44 |
| 15. | இது சரியா? | 48 |

| | | |
|---|---|---|
| 16. | வாய்பேசவில்லை | 51 |
| 17. | சிக்கெனப் பிடித்தேன் | 54 |
| 18. | இயற்கைப் பாடம் | 57 |
| 19. | சூடும் சூடும் | 60 |
| 20. | வாய்திறந்தது வழி திறந்தது. | 64 |
| 21. | வளர்ந்து விட்டாய் | 68 |
| 22. | ஆணுரிமை பேசுவதில்லை | 72 |
| 23. | தொடக்கவுரை | 76 |
| 24. | தேன்நிலவு | 79 |
| 25. | தமிழுலா | 84 |

# 1. ஆள் காத்திருக்கிறது

**பனிமலர்**, மருத்துவமனையில் இருந்து வீட்டுக்கு வந்தார். வீட்டு வாயில் முன் இருந்த பூவரசு மரத்தின் அடியில் சாய்ந்து கொண்டு ஒரு பெண் இருந்தாள். அவள் மடியில் தலைவைத்து ஒரு சிறுவன் படுத்திருந்தான். அவள் பக்கத்தே ஒரு பெட்டியிருந்தது. இவற்றைப் பார்த்துவிட்டு வீட்டுள் சென்றார்.

வேலையாள் **வெள்ளி**, பனிமலர் முன் வந்து, "அம்மா, அந்தப் பெண் செங்கற்பட்டாம். உங்களைப் பார்க்க வந்தவள் மருத்துவமனைக்கு வந்தால் இடைஞ்சலாக இருக்கும் என்று, வீட்டுக்கு வரும் போது பார்க்கலாம் என உட்கார்ந்திருக்கிறாள்" என்றாள்.

அப்பொழுது வாயில் பக்கம் தலைகாட்டினாள் செங்கல்பட்டுக்காரி தன் மகனோடு.

பனிமலர் கை காட்டி உள்ளே அழைத்தார். வணங்கிக் கொண்டு வீட்டுள் வந்தாள். சிறுவனும் வணக்கமிட்டான்.

"நீங்கள் மருத்துவமனையில் இருந்து வந்திருக்கிறீர்கள்; உணவை முடியுங்கள், அதன்பின் வருகிறேன். அந்தப் பூவரச மரத்தின் அடியில் இருக்கிறேன்" என்றாள்.

"நீ சாப்பிட்டாயா?"

"பையன் பசி தாங்கமாட்டான். ஆதலால் பக்கத்துக் கடைக்குச் சென்று சாப்பிட்டு விட்டு வந்தோம்" என்றாள்.

"அப்படியானால் உன் பெட்டியை எடுத்துக் கொண்டு வண்டி நிறுத்தும் இடத்தின் பக்கத்திலுள்ள அறையில் போய் இரு. நான் அழைக்கும்போது வா " என்றவர் சிறுவனை அழைத்து, சில **மாச்சில்களை** வழங்கி, "அம்மாவுடன் போய் இரு." என்று சொல்லியவர், வெள்ளியிடம் தண்ணீர்க்குவளை அங்கே வைக்கச் சொன்னார். பின்,

"உன் பெயர் என்ன" என்றார்.

**"கருப்பாயி"**

"பெயர்க்கும் தோற்றத்திற்கும் நிறத்திற்கும் பொருந்தவில்லையே! தோற்றம் பொன்னம்மாள்! பெயர் கருப்பாயி!"

"இந்த நிறமும் தோற்றமும் தான், என் துயர்க்கு மூலமாக அமைந்தது" என்று தழுதழுக்கக் கூறிவிட்டுப், பனிமலர் கூறிய அறைக்குக் கருப்பாயி மகனுடன் சென்றாள். வெள்ளி வேலை முடித்து வீட்டுக்குப்போனாள். மருத்துவமனைக்குப் பனிமலர் புறப்படுமுன் வந்து விடுவாள்! பனிமலர் தம் கையால் தமக்கும் தம் கணவர்க்கும் வேண்டிய உணவை ஆக்கிக் கொள்வார். பெரிதும் பழங்கள், பருப்புகள், உலர் பொருட்கள் என எளிமையாகக் கணவரும் அவரும் முடித்துக் கொள்வர். அவ்வீட்டில் இருப்பவர்கள் அவர்கள் இருவருமே. வெள்ளிக்குச் சமையல் வேலை இல்லை. கூட்டிப் பெருக்கல், துணி துவைத்து ஒழுங்குறுத்தல் ஆகியவற்றை மட்டுமே செய்பவள்! **தம்மிடமும், தம் கணவரிடமும், வெள்ளியிடமும் வீட்டுத் திறவு கோல் இருக்கும். அவ்வளவு நம்பிக்கையானவள்.**

பனிமலர் கணவர் பொறிஞர் **செவ்வேள்** தம் பணி முடித்து வீட்டுக்கு வந்தார். இருவரும் வண்டி ஓட்டப் பழகியவர்கள். வண்டியை நிறுத்திய செவ்வேள், பக்கத்து அறையில் ஒரு பெண்ணும் பையனும் படுத்திருக்கக் கண்டார். அங்கே செல்லாமல், பனிமலர் உண்ணக் காத்திருப்பார், என எண்ணி வீட்டுள் சென்றார்.

"எனக்கு வேலை நெருக்கடி, நீங்கள் உண்ணாமல் காத்துக் கொண்டிருப்பீர்கள் என்று வந்தேன்" என்றார்.

"வேலை நெருக்கடியானால், எனக்குச் சொல்லிவிட்டு ஏதாவது கடையில் உண்டு, வேலையை முடித்துவிட்டு வரலாமே!"

"வெளியூர்க்குப் போனால் அல்லாமல், நாம் இருவரும் சேர்ந்து உண்ணாமல் தனியே உண்டது உண்டா?" **"நான் தண்ணீரில் கிடக்கும் தவளை!** அதனால் ஏதாவது உண்டு கொள்ளலாம். நீங்கள் எனக்காக ஓடி வரவேண்டுமா?

"நமக்குத் திருமணம் நடந்து **இருபத்தைந்தாம் ஆண்டு விழாவும் கொண்டாடி விட்டோம்!** நீங்கள், நான் ஊரில் இருக்கும்

போது, நானில்லாமல் மாச்சில்லாவது உண்டதுண்டா?" என்றார் செவ்வேள்.

அவர் கையைப் பற்றி நீர்க் குவளையைத் தந்தார். தட்டும் குவளைநீரும் துடைப்புத் துணியும் உண்ணும் மேடையிலேயே வைத்திருந்தார் பனிமலர். இருவரும் கையலம்பித் துடைத்துக் கொண்டு அவரவர்க்கு வேண்டியதை அவரவரே எடுத்துப் போட்டுக் கொண்டு உண்டனர்.

"பக்கத்து அறையிலே ஒரு பெண்ணும் பையனும்" என்றார் செவ்வேள்.

"செங்கல்பட்டாம்! குடும்பச் சிக்கல்போல் உள்ளது. யாரோ என்னைப் பார்க்கச் சொல்லியிருக்கிறார்கள்."அவள் பெயர் கருப்பாயியாம். நீங்கள் வந்தபின் கேட்கலாம் என அங்கே இருக்கச் சொன்னேன். பையனும் அவளும் கடையில் சாப்பிட்டு விட்டதாகச் சொன்னாள், என்றார்.

"நமக்குச் செங்கல் பட்டில் யாரும் இல்லையே!

"நமக்கு இல்லை என்றாலும் நம்மை அறிந்தவர் இருக்கலாம் அல்லவா. உங்களையோ என்னையோ அறிந்தவர் விடுத்திருக்கலாம்."

"நான் விரைந்து அலுவலகம் செல்ல வேண்டும். ஆண்டுக் கணக்கு முடிக்கும் காலம். உங்களுக்கு வாய்த்தால் கேளுங்கள். நாம் இரவு கலந்து பேசலாம்."

"உங்களுக்கு அகவை ஆகிறது என்பதை மறந்துவிடுகிறீர்கள். வேலையை அள்ளிப் போட்டுக் கொள்கிறீர்கள்."

"அகவை ஆவது உங்களுக்கும் இல்லையா? நீங்களும் பொறுப்பை அள்ளிப் போட்டுக் கொள்கிறீர்கள் இல்லையா?"

"நாமே பேசிக் கொள்ள வேண்டியதுதான்"

"அதுதான் ஆள் காத்திருக்கிறதே" என்று புன்முறுவலோடு செவ்வேள் விடைபெற்றார். வண்டி புறப்படும் வரை நின்று கையசைத்துவிட்டு வீட்டின் உள்ளே வந்தார் பனிமலர்.

கருப்பாயி மகனோடு பனிமலரின் அறை வாயில் முன் நின்றாள்.

# உ. நீ என்ன காவலாளியா?

"உள்ளே வா" என்றார் பனிமலர்.

மகனோடு உள்ளே போனாள் கருப்பாயி.

"இவன் பெயரென்ன?"

"குயிலன்."

"குயில் இசைபாடுமே! நீ பாடுவாயா?"

– தலையாட்டினான்

"நான் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவர் வீட்டில் சமையல் செய்தேன். குயிலனோடு முதல்நாள் போனேன். அந்த அம்மையார் இவனைக் கூப்பிட்டுப் பக்கத்தில் வைத்துக் கொண்டு பள்ளிக் கூடம் போகிறாயா" என்றார்.

"இல்லை" என்றான்.

"முதல் பள்ளிக் கூடம் இந்த வீடு: நீ அம்மா வேலைக்கு வரும்போது கூட வந்துவிடு" என்று சொன்னார்.

இவன் "எப்போது என்னைப் பள்ளிக்கு வைக்கப்போகிறீர்கள்" என்று கேட்டுக் கொண்டே இருந்தான். அந்த அம்மையார் **தாமரைக் கண்ணியார், ஆத்திசூடியை,**

"அறம் செய விரும்பு"

"ஆறுவது சினம்"

"இயல்வது கரவேல்"

என்று வரிசையாகச் சொல்ல இவனும் சொல்லி மனப்பாடம் ஆக்கிவிட்டான். அதன்பின், **கொன்றைவேந்தன், நல்வழி, திருக்குறள்** எனப் பலவற்றைச் சொல்ல இவனுக்கு மனப்பாடமாகிவிட்டது. **திருவருட்பா, தாயுமானவர் பாடல்கள்** சிலவும் கற்றான். மனப்பாடம் செய்யும் போதே **தமிழ் எழுத்தையும், எண்ணையும்** எழுதக் கற்பித்துவிட்டார். எனக்கு வேலை - சம்பளம். இவனுக்குப் பணம்

கட்டாமல் கல்வி! **அவற்றை எல்லாம் இழந்துதான் இந்தப்பாவி கண்ணீரும் கம்பலையுமாக உங்களைத்தேடி வந்தேன்"** என்றாள் கருப்பாயி. அவள் கலக்கத்தைக் கண்ட குயிலன் கலங்கினான். அவனை அணைத்துக் கொண்டு, கருப்பாயியை, முகத்தைக் கழுவி விட்டுவா என்று குழாய் இருக்கும் இடத்தைக் காட்டினார்.

"உன்னை இங்கே போகச் சொன்னவர் யார்?"

"செங்கல்பட்டு **மகளிர் காவல் நிலையத்தில்**, உங்களை இளமையில் அறிந்த **மருதி** என்பார் தாம் விடுத்தார்."

"ஏன் காவல் நிலையம் போனாய்?"

"என்வாயால் சொல்ல முடியாது: **"குயில் இங்கே இரு"** என்று சொல்லிப் பனிமலர் காலில் விழுந்தாள்; விழாமல் தடுத்த அவர், **"ஒரு நிமிடம் உள்ளறைக்கு நீங்கள் வாருங்கள்"** என்றாள். மார்பு மறைவிடம் எல்லாம் புண்ணும் தழும்பும் வட்டம் வட்டமாக!

பனிமலர், **"காட்டுப்புலியால் நேராத கொடுமை; வீட்டுக்குள்ளா?"** என்றார்.

குடிக்கும் அவரை "அருகே வரக்கூடாது" என்றதற்காக என் கையைக் கயிற்றால் கட்டி விட்டுப் புகைக்கும் பீடி சுருட்டால் சுட்ட சூடுகள்;

பனிமலர் துடித்துப் போனார்; கண்ணைத் துடைத்துக் கொண்டே வெளியே வந்தார்.

குயிலன் என் அழுகை, துயரம் கண்டு "அம்மா அம்மா" என்று கதறி **"அப்பா அம்மாவைச் சுடாதே"** என்றபோது, "வாடா வா; **நீ காவலாளியா"** என்று அவன் தொடையில் சுட்ட **புண்ணும் தழும்பும்** இவை" என்று காட்டினாள். அதைக் கேட்டவுடன் பனிமலர், தாங்காமல் குயிலனை அணைத்து மடியில் வைத்துக் கொண்டார்.

குயிலன் தலையை வருடிக் கொண்டு சிந்தித்த அவர், "மகளிர் காவல் நிலையம் நீயே போனாயா? உன் கணவரால் போனாயா?"

"நான்தான் போனேன்."

இனி, இவருடன் என்னால் வாழ முடியாது, இந்த ஊரிலும் இருக்க முடியாது. யான் இருக்கும் இடம் தேடி அவர் வரக்கூடாது" என்னும் தற்காப்புக் காகவே சென்றேன்.

மருதி அம்மையார் காவல் துறையினர் என்றாலும், தாய்போல் அரவணைத்தார். நிகழ்ந்த அனைத்தையும் பதிவு செய்து கொண்டார்.

"நாங்கள் மண விலக்குத் தர முடியாது. பாதுகாப்புத் தரலாம். மண விலக்கு முறை மன்றம் சென்று சட்டப்படி பெற வேண்டும்". என்று சொல்லி, அவர்தாம் உங்களைக் காணச் சொன்னார்.

"நீ என்ன படித்திருக்கிறாய்."

"பத்தாம் வகுப்பு"

"அப்பா அம்மா இருக்கிறார்களா?"

"அப்பா, நான் ஒன்பது படிக்கும் போதே இறந்துவிட்டார்."

"அம்மா மறைந்தும் மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. உறவு என்று சொல்லிக் கொள்ளச் செங்கல்பட்டில் யாரும் வேறு இல்லை. நான் திண்டிவனத்தில் இருந்து, "சமையலாள் தேவை" என்னும் விளம்பரம் கண்டு வேலைக்கு வந்தேன். அவரூர் உறவு அது.

"என்ன எதிர்பார்த்து இங்கு வந்தாய்?"

"எங்காவது சமையல் வேலை செய்து கொண்டு, இவனைப் படிக்க வைக்க வேண்டும்."

"எங்கள் இருவர் உணவுக்குத் தொடக்க நாள் முதல் சமையலாள் வைத்ததில்லை. வெள்ளி தான் வீட்டைக் கூட்டிப் பெருக்கிப் பார்த்துக் கொள்கிறாள். என் மருத்துவம் தோல் மருத்துவம். "அன்னை மருத்துவமனை" என்பது பெயர். இதே மணிமங்கலம் சாலையில் உள்ளது. அங்கே மருந்து தருதல், வருபவரை வரிசையாக அமரச் செய்தல் ஆகிய பணிக்கு ஓர் இளம்பெண் உள்ளாள். அவட்கு அடுத்த மாதம் திருமணம். அதற்குப் பின் அவள் கணவனூர் சென்றுவிடுவாள். அவள் இருக்கும் வரை அவளோடு இருந்து சீட்டைப் படித்து மருந்து தருதல், கணக்குவைத்தல், வருபவரை வரிசைப் படுத்தல்,

அவ்வரிசையில் பார்க்கவிடுதல் என்னும் நடைமுறையைப் படித்துக் கொள். குயிலன் படிக்கப் பக்கத்தேயே **தமிழ் வழிப் பள்ளி உள்ளது.** அதில் சேர்த்துவிடலாம். அவர் வந்தபின் கலந்து கொண்டு முடிவு செய்வோம்" என்றார்.

"இன்று வெள்ளியுடன் இங்கேயே இரு. வெள்ளி உங்களைப் பார்த்துக் கொள்வாள். நான் மருத்துவமனைக்குச் செல்லும் பொழுதாயிற்று. எனக்குத் துள்ளுந்து உள்ளது. ஐந்து நிமிடங்களில் போய் விடுவேன்," என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார். வெள்ளி வந்தும், இவர்கள் பேச்சுக்குத் தடையாகக் கூடாது என அமைந்து, வெளியே இருந்தாள்.

**வெள்ளிக்கு அவளுண்டு அவள் வேலையுண்டு. எதிலும் தலையிட மாட்டாள். பனிமலரையும் செவ்வேளையும் கண்டு, கைக்கொண்ட கடைப்பிடி அது.**

ଔ♦ଡ଼

# 3. குயில் இசை பாடுமா?

செவ்வேளைப் பிரியாமல் எப்பொழுதும் வீட்டில் இருக்க விரும்பும் பனிமலர், **"அவர் வேலைமேல் சென்றது நல்லதே"** என்று உள்ளுள் நினைந்தார். கருப்பாயிக்காக உருகினார். தொடக்கப் பள்ளியில் உடன்பயின்ற மருதியின் நினைவாற்றலையும் வழிகாட்டலையும் எண்ணி மகிழ்ந்தார். இவ்வெல்லாவற்றையும் தலையில் **நண்டாக ஊர விடாமல் ஒதுக்கித் தள்ளிப் பனிமலராக மருத்துவமனையுள் புகுந்தார்.**

**உடல், விந்தையானது, புடைப்பானில்** காற்றுப் போக ஓர் ஊசித் துளை போதும்; பேருந்துச் சக்கரம் என்றாலும் ஒரு வலிய ஆணி ஏறினால் போதும்; காற்றுப் போய்விடும்; **ஒன்பான் துளை உடல் இது;** காற்றுப் போகிறது; தானே வருகிறது; தூய்மைப்படுத்துகிறது; உச்சி முதல் உள்ளங்கால் வரை குருதியை ஓட வைக்கிறது. **இதைப்போலத் தானியங்கி ஏதும் உண்டா?**

உடலின் முதல் தோற்றம், தோல்பை தானே; அப்பைக்குள் தானே பொறிபுலன் இயக்க உறுப்புகள் யாவும். தோல் தானே தோற்றப் பொலிவு; அத் தோலில் உண்டாகும் நோய்கள் எத்தனை; முதுமையே நோய்; அதைத் தோல்தானே பறையறைந்தாற் போல் வெளிப்படக் காட்டுவது.

பொன் மெருகேற்றினால் போன்ற தோற்றத்தள் ஒருத்தி - ஒரு கரும்புள்ளி முகத்தில்; முகமெல்லாம் கருகியது ஆயது; கருகியது முழுதுற உதிர்ந்து உள்தோலாம் வெண்தோலே வெளிப்பட்டது. அவள் வீட்டை விட்டு வெளியேற முடியவில்லை. மருத்துவமனை சென்றுதானே ஆகவேண்டும்; அவள்முன் பனிமலராக நின்றால், **தொட - துடைக்க - இயலுமா?** அங்கே **வன்மையை வருவித்துக்** கொள்ள வேண்டிய கட்டாயம்; **அவள்முன் உருகினால் கருகி வெளுத்தவள் நிலை என்னாம்?**

மருத்துவர்க்குக் கட்டாயம் உருகும் உளமும் வேண்டும்; இறுகும் திண்மையும் வேண்டும்; கடையில் வாங்கும் சரக்கா இது;

ஊரல் - உருத்தல் - பொரிதல் - புண் - என வகை வகை நோய்களைப் பார்த்து, அருவறுப்பு துளியளவும் இல்லாமல் பனிமலராக முகம் காட்டிப்பேசிவிடுதல், கடலலை ஏற்றமும் இறக்கமும் போன்றதல்லவா?

ஒவ்வொருவராகப் பார்த்து முடித்தார். முடிக்க முடியாத் துயராகக் கருப்பாயி நெஞ்சில் சூழப்பதிந்திருந்தாள்.

கவிமணி தேசிய விநாயகர்; ஆசியசோதியில் எழுதிய,

"காட்டுப் புலியின் கொடுமை அஞ்சி - நம்
காலடி தங்கிய ஆடுகளை
நாட்டுப் புலியெனக் கொல்வதுவோ - உங்கள்
நான்மறை வகுத்த நீதியையா"

என்பது நெஞ்சில் தவழ்ந்தது.

முதல் வேலை கருப்பாயி பெயரைப் பொன்னம்மை ஆக்குவது;
"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு"

என்பது தானே பொய்யா மொழியார் பொருளுரை. இரும்பு கருப்புப் பொன்னே. அது ஊதுலையில் வேகும்போது பொன் நிறம் - செம்பொன் நிறம் - காட்டுகிறது அல்லவா; பெயரை மாற்றி என்ன பயன்? வாழ்வில் அல்லவோ மாறச் செய்தாக வேண்டும் என்று எண்ணிக் கொண்டு வீட்டுக்குப் போக, குயிலன் செவ்வேள் கையைப் பற்றிக் கொண்டு நின்றான். பனிமலர் தனிப்பெரும் பனிமலரானார். மழலைக் குயிலன், "அம்மா குயில் இசைபாடுமா? என்றீர்களே, என் இசையை அருள் கூர்ந்து கேளுங்கள்! பாட்டி தாமரைக் கண்ணியார் இரண்டு மூன்று முறை பாடினார்; நான் அதனை மனத்துள் வாங்கிக்கொண்டேன். அது தாயுமானவர் பாடல். என் தாயுமானவர் கையைப்பற்றிக் கொண்டு பாடுகிறேன்; என்று காலில்விழப் போனான். தடுத்து நிறுத்திப் பாடு" என்றார்.

"பண்ணேன் உனக்கான பூசை ஒருவடிவிலே
பாவித் திறைஞ்ச ஆங்கே பார்க்கின்ற
மலரூடு நீயே இருத்தி, அப்பனிமலர் எடுக்க மனமும்
நண்ணேன், அலாமல் இருகை தான் குவிக்க எனின்
நாணும் என்னுளம் நிற்றி நீ
நான் கும்பிடும்போது அரைக்கும்பிடு
ஆதலால், நான் பூசை செய்தல் முறையோ?"

என்று பாடினான். இந்த மழலை வாய் மொழியா இது? தாமரைக் கண்ணியார் ஊட்டிய தேன்மொழி - தெய்வத்திருமொழி - எனப் பனிமலரும் செவ்வேளும் அவன் இருகைகளையும் பற்றிக் கொண்டு வீட்டுள் சென்றனர். கருப்பாயி ஓரமாக நின்று கையெடுத்துக் கும்பிட்டுக் கொண்டிருந்தாள். வறண்ட பாலையில் தண்ணீர் கிட்டுமா என அலைந்தவனுக்குக் குடத்தளவு பாலே குடிக்க வாய்த்தது போல எண்ணி வாயிலோரம் நின்றாள்.

பனிமலர், கருப்பாயி இல்லை நீ. இப்பொழுது முதல் பொன்னம்மை; யார் கேட்டாலும் பொன்னம்மை என்றே சொல். கையெழுத்தும் அப்படியே போடு. பெயர் மாற்றமும் அரசாணையாக வரச் செய்யலாம் என்றார்.

"நான் உணவாக்கிக் கொள்ள எல்லா ஏற்பாடும் வெள்ளி செய்துவிட்டார்.

"வெள்ளியினும் பொன்னினும் எங்களுக்கு விருப்பமில்லை. நடமாடும் வெள்ளியும், பொன்னுமாக நீங்கள் இருக்கலாம். அந்த வெள்ளி இரவில் வீடு சென்று விடும். இந்தத் தங்கம், இங்கேயே தங்கும்" என்றார் பனிமலர்.

திக்குமுக்காடிப் போனாள் புதுப் பொன்னி;

௬ ♦ ௰

# 4. நாளைக்குப் பேசலாம்

நாம் உணவை முடித்து மேலே தாழ்வாரம் போகலாம். நாம் தானே பேசினோம். **எங்கள் இருவர்க்கும் எந்த இடைவெளியும் இல்லை. அதுபோல் ஒருவர் செயலில் ஒருவர் தலையீடும் இல்லை. திருமண நாள் தொட்ட முடிவு இது. அவர் வழி அவர் போகலாம்; என் வழி நான் போகலாம்; ஆனால், இருவர் வழியும் நல்வழியாகவே இருக்கும். சேர்த்துப் பார்த்தால் ஒருவழியாகவே இருக்கும்.** ஆதலால், உன்னைப் பற்றி நாங்கள் முடிவெடுக்கத் தயங்காமல் சொல்லலாம் என்று கூறி, "மாடி வாரத்தைக் கூட்டி விரிப்பு விரிக்கச் சொன்னார். உணவில் குயிலனுக்குப் பனிமலர் ஒருவாய் ஊட்டினார். செவ்வேள் ஒருவாய் ஊட்டினார். **"போதும் நான் அம்மாவுடன் உண்டேன்"** என்றான். இருவரும் உண்டு முடித்து மாடி சென்றனர்.

செவ்வேள் கேட்பாளராக இருந்தார். பனிமலர், "பொன், உன் கணவர் பெயர் என்ன?" என்றார்.

அவர் பெயர் **நல்லையா.**

உன்பெயர்க்கும் நிறத்திற்கும் போல, அவர் பெயர்க்கும் அவர் குணத்துக்கும் **ஏன் இந்த முரண்பாடு?**

"அவர் ஒரு பெரிய வீட்டுக் காவலராக இருந்தார்."

"அவ்வீடு நம்வீடுபோல் நாலு மடங்கு இருக்கும். அதன் காவல் வேலை நல்ல வருவாய்;"

அவர் காவல் துறையில் சேர முயன்றிருக்கிறார். உடல் தேர்வு நிறைவாக இருந்தாலும், எழுத்துத் தேர்வில் வெற்றி பெறவில்லை. ஆதலால், வீட்டில் காவலராக அமர்ந்திருக்கிறார். அவரை எனக்கு முன் பின் தெரியாது. உறவும் இல்லை. அங்கே சமையல் வேலைக்கு வருமுன் அவரை எங்கேயும் பார்த்ததும் இல்லை. வேலைக்கு வந்ததும் என் தோற்றம் கண்டு ஏறிட்டு ஏறிட்டுப் பார்ப்பார். நான் குனிந்த தலை

நிமிர்வதில்லை. அவர், "இங்கே வருபவர் எவரும் என் ஆய்வுக்கு ஆட்படாமல் - உட்படாமல் - உள்ளே வரமுடியாது. போகும் போதும் என் ஆய்வுக்கு உட்படாமல் போக முடியாது. **"நல்ல தோற்றத்தில் கேடு புகாது"** என்று எண்ணி உள்ளே போக விட்டுக் கொண்டுள்ளேன்" என்றார்.

ஊரை - வீட்டை - உடன் இருப்பவரைப் படிப்படியே கேட்டார். தோற்றமும் நன்றாக இருப்பார். **வாயலந்து பேசினாலும் ஆளை நெருங்கி வரமாட்டார்.** நேரமான பொழுதில் அவர் வண்டியில் கொண்டு போய் என்னை வீட்டில் விட்டு விட்டு அம்மாவை உறவாக்கிக் கொண்டார். அம்மா தனியாள். முதியவர்; அறிந்து பழகிய இவர்க்குக் கொடுக்கலாமோ என எண்ணி, அவர் வீட்டைப் பற்றிக் கேட்டிருக்கிறார். அவர் வீட்டில் அவரே ஆக்கி உண்ணும் தனியாள் என்பதைத் தெரிந்து அவருக்குள் **"பெண் கொடுக்கலாம்"** என்று பதிவாகியிருக்கிறது. என்னிடம் சொன்னார். அவர் குணம் ஈடுபாடு தோற்றம் ஆகியவை படிப்படியே படிந்து, **அவர் வயமானேன். இதற்குமுன் ஈராண்டு கழிந்தது. எங்களுக்கு மணமும் நிகழ்ந்தது.**

கணவன் மனைவி ஆனபின் **ஒரே வீட்டில் வேலை செய்தல் பின் விளைவு பல ஆக்கும்** எனச் சொல்லி வேலையை விட்டுத் தாமரைக் கண்ணியார் வீட்டுக்குச் சமையலாளாய்ச் சென்றேன்.

அங்கே வேலை செய்யும் போதுதான் குயிலன் பிறந்தான். அம்மையார் அவர்கள் பெற்றதாய் போல் பேணிக் கொண்டார்கள். நான் என் வீட்டுக்குப் போனாலும் குயிலன் அம்மையாரோடு ஒட்டிக் கொண்டான். அவர் தனிமைக்கு இனிமையாக இருந்து, படிப்படியே படிக்கவும் ஆனான்.

நான் பழைய வீட்டில் சமையலை விட்டபின், சமையலுக்கு வந்தவர் ஓர் ஆண். இவர்க்கு நண்பர். அவர் வழியாக அங்கே உள்ளாகக் **கள்ளச் சாராயம் காய்ச்சுதல், ஊர் ஊர்க்குக் கடத்துதல்,** நடைபெற்றிருக்கிறது. உள்ளே வேலை பார்த்தவர் மதுவைச் சமையலருக்குத்தர, சமையலர் இவர்க்குத்தர - **குடியில் நிலை தடுமாறிவிட்டார்.** குடிகாரர் இருவர் மூவரொடு வீட்டுக்கு வரவும்

குடிக்கவும் வாய்க்கு வந்தபடி பேசவும் ஆக, நான் என் அறையைத் திறக்காமல் உள்ளடங்கினேன். அவர் குடித்து விட்டு என்பக்கம் வருவதை உதறினேன். படிப்படியாய் பாடெல்லாம் படுத்தினார்.

ஒருநாள் குடிகாரர் ஒருவர், "உன்மனைவியைச் சுட்டு வழிப்படுத்த முடியாவிட்டால், அவள் வாயைத் திறந்து வலக்காரமாக வாயில் **மதுவை விட்டு விட்டால், அவளே நம்மோடு கூட்டாளியாகி விடுவாள்"** என்றது கேட்டேன்.

**இனித் தப்பமுடியாது, பிள்ளை நிலையும் பெருங்கேடாம்** என்று அவ்விடம் விட்டும் பெட்டியொடு மகளிர் காவல் நிலையத்தைத் தஞ்சம் அடைந்தேன். மருதியம்மா வழிகாட்டலில் இங்கு வந்தேன்" என்றாள்.

நெடிய செய்தியை இடைவிடாமல் கேட்ட பனிமலரும் செவ்வேளும், "அவர் நீ இங்கிருப்பது அறிந்து வரமாட்டாரா என்றார். அதற்கு மருதியார் உரிய பாதுகாவல் செய்வார். வேறொரு காரணத்தாலும் அவர் வரமாட்டார்" என்றார். அதை நாளைக்குப் பேசுவோம் என்றாள் பொன்.

☙♦❧

# 5. அறம் நுழையாப் பள்ளி

விடிவெள்ளி போல், வெள்ளி வந்து விட்டாள். வெள்ளியும் பொன்னும் சேர்ந்து கூட்டிப் பெருக்கி வேலை செய்தனர். பனிமலரிடம், பொன் கேட்டாள், "உணவில்லாமல் எவரும் இருக்க முடியாது. இப்படிப்பட்ட உணவு வேண்டும் என்றால் நான் ஆக்கித் தந்து விடுகிறேன். காலமெல்லாம் சமையல்தானே செய்தேன். நீங்கள் சொல்லியபடி ஆக்கித் தருகிறேன்" என்றாள். பனிமலர் செவ்வேளிடம் கேட்டார், ஆக்கித் தருவதில் தடையில்லை; நாம் வழக்கம்போல் நமக்கு வேண்டுவதை நாமே எடுத்துண்ணும் வழக்கத்தை மாற்றக் கூடாது. நாம் இருவரும் ஒப்ப எடுத்துக் கொண்ட **மகப்பேறு வேண்டா' என்ற முடிவுப்படி இதுவரை இருந்தோம்; அக்கொள்கை நம் அன்பை மிகுத்ததே அல்லாமல் குறைத்ததில்லை. இப்போது எதிர்பாரா வகையில் குயில் வந்துள்ளது.** நாம் பெற்ற பிள்ளையாக உடன்வைத்துக் கொள்வோம்: நாம்மூவர்; அவர்கள் இருவர். ஒருகை எண்ணிக்கை தானே! என்ற செவ்வேள் **அழகான ஒரு செய்தி என்றார்.** பனிமலர் கூர்ந்து கேட்டார்.

**"குயில் முட்டையிடும்; முட்டையைத் தான்பொரியாது; காக்கைக் கூட்டில் அதன் முட்டைகளோடு தன் முட்டையையும் வைத்துவிடும்.** குஞ்சானவுடன்; காக்கை வெருட்டும். குயில் குஞ்சை எடுத்துக்கொண்டு வந்துவிடும். அதுபோல் **கருப்பாயி பெற்றபிள்ளை நம்பிள்ளையாக வளரட்டுமே"** என்றார்.

"ஏன், குயிலே தன் முட்டைக்கு அடைகாத்துக் குஞ்சு பொரிக்கக் கூடாது. காக்கைக் கூட்டில் திருட்டுத் தனமாக வைத்து, காகம் அடைகாத்துக் குஞ்சாகக் குயில் திருட்டுத்தனமாக எடுத்துக் கொண்டு வரவேண்டும்" என்றார்.

செவ்வேள், "காகம் குயில் குஞ்சைத் தன் குஞ்சாக எண்ண முடியாது. குயில் தன் குஞ்சை இழந்து விடமுடியாது. இப்படி இக்கட்டுகள், **இயற்கைசார் வரலாற்று உண்மைகள்** என்றார்."

"இது இயற்கை சார் வரலாறு இல்லை **செயற்கையானதே; ஆனால் இயற்கை வழிவந்த செயற்கை.** இரண்டு பேரும் ஒரு கருத்தையே சொல்கிறோம். ஆனால், சொல்லும் வகை வேறாக உள்ளது என்று செவ்வேள் கூறினார். நாம் இரண்டுபேரும் **தமிழ் இலக்கியக் காதலர்.** காதல் பற்றி நாம் பேசாச் செய்தி எது? **மடலேறல்** வரை கூட நாம் படித்தது தானே! வேறு வேறு துறையினர் நாம் என்றாலும், **தமிழ்க் காதலில்** ஒன்றுபட்டுத்தானே இன்றும் முதுமைக் காதலராக உள்ளோம். மணம், நாம் கொண்டது காதல்மணம். அன்றே கொண்டோம்."

"காதல் காதல் காதல்

காதலுக்கோர் குறையுண்டாயின்

சாதல் சாதல் சாதல்!"

நமக்குக் குறை நேராமையால் காதலராகவே உள்ளோம். **நம் காதலை, ஒரு குழந்தை பெற்று, அது பகிர்ந்து கொள்ளக் கூடாது. களவுக் காதலர் போல் ஊருக்கு அஞ்சி - ஊர்ப் பேச்சுக்கு இடம் தராமல் மணம் கொண்டு - களவுக்** காதலர் போலத்தானே உள்ளோம் என்றார்.

"பொன்னி பெற்றெடுத்த குயிலின் வரவால், **நம் கொள்கையை** விட்டு விட்டோமே நாம்."

"இல்லை! **குயிலினால், நாமும் குயில் வாழ்வைக் கொண்டு விட்டோம். அது தான் ஆழமான செய்தி என்றேன்."**

"சொல்லுங்கள்."

"வெயிலும் உள்ளே புகமுடியாத அடர்ந்த சோலை. தழையும் இலையும் உள்ளிருப்பார் கதிரவனைக் காண முடியாமல் மறைத்து விடும். அத்தகு சோலையில் தான் குயில் வாழும்."

"ஆமாம் நினைவு வருகிறது."

**"வெயில் நுழைபு அறியாக் குயில் நுழை பொதும்பர்** - என்பது மதுரைச் சாத்தர் மணிமேகலையில் பாடியது அல்லவா! மதுரைப்

பக்கத்தே 'பொதும்பு' என்றே ஊர் உள்ளதே! நாம் இயற்கைக் காதல் இணையர் மட்டுமில்லை. **இயற்கை இலக்கியக் காதலரும் தாம்!"**

அச்சோலையின் **தண்மைக் கூட்டில், தான் இட்ட முட்டை இருந்தால் வெப்பத்தால் பொரிக்க வேண்டிய நிகழ்வு, நிகழவாயாவே. அதனால், வெப்பமிக்க மரத்தில் கூடு கட்டுவதும் தன்போல் கரிய நிறத்ததும் ஆகிய காக்கைக் கூட்டில் தன் முட்டையைக் குயில் வைத்து விடுகின்றது;** குஞ்சு பொரித்ததும் எடுத்துக் கொண்டுவந்து விடுகின்றது. **இது குயிலுக்கு இயற்கை கற்பித்த ஓதாக் கல்வி என்றார்.** "நீங்கள் **பொறிஞர்** ஆதலால், குயில் குஞ்சு **பொரிக்கும்** இயற்கை அடிப்படையைக் கண்டீர்கள்! நாமோ கருக் கொள்ளாமலே குயில் வேலை செய்து விட்டோம், **குயிலனை நம்பொறுப்பில் விட்டதால் கருவுற்றுப் பெற்ற கருப்பாயி, குயிலனைத் தந்து மாற்றுக் குறையாப் பொன்னாகி விட்டாள்!".**

"நம் இருவருக்கும் வேலை உண்டு; எதிர்பார்த்தும் பலர் இருப்பர் என்பதை மறந்து விட்டோம்" என்று அவரவர் வேலையை நோக்கினர்.

பனிமலர் பொன்னியைத் தன் துள்ளுந்தில் பின்னே வைத்துக் கொண்டு, **'அன்னை மருத்துவமனை'** சென்றார். குயிலன் வெள்ளியுடன் தோட்டச் செடிகளுக்குத் தண்ணீர் விட்டுக் கொண்டே "அறஞ்செய விரும்பு" முதல் சொல்லத் தொடங்கிவிட்டான். வெள்ளி வியப்பொடு **"இவளைப் பெற்றவள் பேறு மிக்கவள்"** என்றாள். ஏனெனில் **அறம் நுழையாத பள்ளியில் படித்தவள் அவள்!**

௸♦௵

# 6. பாடு! பாடாதே!

பனிமலர், அன்னை மருத்துவமனையுள் நுழைந்தால், நேரே தம் அறைக்குச் செல்வார். அன்று முன்வாயில் பக்கம் நின்று செவிலியிடம், "நீ திருமணம் செய்து வேலையை விட்டுப் போவதால் அந்த இடத்திற்கு இவள் வருகிறாள். சிலநாள் இவளுக்கும் பயிற்சி கொடு. இவள் பெயர் **பொன்னம்மை**" என்றார். **செவிலி திகைத்தாள்.**

"நீங்கள் **திண்டிவனமா** என்றாள்."

"ஆம்"

"உங்கள் பெயர் **கருப்பாயி இல்லையா?**"

"**சிரித்தாள், பொன்**"

"தெருவே பேசும். தங்கக் கடைக்காரன் இவளைத் தங்கம் என்று சொல்லி நிறுத்துக் கொடுத்துவிடலாம். ஆனால், பெயர் கருப்பாயி" என்பதைக் கேட்டிருக்கிறேன். உங்கள் தெருவுக்கு அடுத்த தெரு எங்கள் தெரு. பொன்னம்மை ஆனது பொருத்தமானது. எப்பொழுது இப்பெயர் கொண்டீர்கள்.

"இப்பொழுது, இவர்களால்."

"அம்மா, நான் பார்த்துக் கொள்கிறேன். பள்ளியில் முதன்மையாகத் தேர்ந்தவர் இவர். செங்கற்பட்டு வந்ததாகக் கேள்வி. என்றாள்."

"உறவா என்றார் பனிமலர்."

**"உங்களைப்போல எனக்கு எல்லாரும் உறவானவரே. இங்கே வந்ததால் கருப்பு - பொன்னாகிறது" என்றார்.** பனிமலர் நகைத்துக் கொண்டே தம் அறைக்குள் சென்றார்.

பனிமலர் மணி அடித்தார், முதல் ஆளை உள்ளே அழைத்துச் சென்றாள் **செல்வி செவிலி.** உள்ளே விடுத்து, நில்லாமல் வந்ததைப் பார்த்தாள் பொன். **இது முதல் பாடம்** எனத் தெரிந்து கொண்டார். தலைவாயில் - சீட்டுத்தரல் - மருந்து தரல் - மணியடிக்க வந்தவரை

வரிசையில் விடுதல் - எப்பொழுதும் எவரிடமும் இனிய முகத்துடன் இருத்தல் என்பவை முறைப்பட்ட பணி என அறிந்தாள்.

செல்வி சொன்னாள் “வந்ததும் முற்பகுதி கூட்டல்; நாற்காலி ஒழுங்குறுத்தல்; தண்ணீர் மாற்றுதல்; பற்றி மணம் பரப்பல்; வருவாரை வரிசையில் இருக்க வைத்தல்; மிக முதியவர் எனின் வரிசையில் இருப்பவரிடம் சொல்லிவிட்டு முற்பட விடுத்தல். அவர் ஆய்வை முடித்ததும் தக்கவாறு வெளியே அழைத்துவரல் என்பவற்றைச் சொன்னாள். எளிமையானதும், இனியதும், வேலையே தொண்டாகும் சீர்மையும் எண்ணி மகிழ்ந்தாள் பொன்னி.”

குயிலன் நினைவு ஊடே ஊடே தலை காட்டியது. வெள்ளி இருப்பதை நினைத்து அமைதி கொண்டாள். நேரத்துக்கு உணவு பண்டம் தந்து விடுவாள், அவளும் பிள்ளை பெற்றுப் பேணிவளர்த்தவள் தானே! ஒருமணிபோல் பணி முடிந்தது; மறுபடி ஐந்து மணிக்கு வந்து மூன்று மணிநேரம், நான்கு மணிநேரம் இடை வேளை.

பொன்னி போயவுடன் அரைமணிக்குள் சமையலை முடித்தாள். ஆவி அடுப்பு ஆதலால் ஒரே வேளையில் இரண்டு மூன்று கலங்களை வைத்து ஆக்கலாமே.

வேலையை முடித்து மேடையில், ஆக்கியவற்றையும் தட்டுகளையும் நீர்க்குவளையையும் வைத்துச் சென்றாள் பொன்னி. பனிமலரும் செவ்வேளும் இடையே குயிலனை வைத்து உண்ணத் தொடங்கினர். கண்கொள்ளாக் காட்சியாகப் பொன்னுக்குத் தோன்றியது. செவ்வேள், “குயிலா ஏதாவது இசையெழுப்பேன்” என்றார்.

**பனிமலர், செவ்வேள் இருவரையும் வணங்கி,**

“தடித்த ஓர் மகனைத் தந்தையீண் டடித்தால்
தாயுடன் அணைப்பள்; தாய் அடித்தால்,
பிடித்தொரு தந்தை யணைப்பன்இங் கெனக்குப்
பேசிய **தந்தையும் தாயும்**
பொடித்திரு மேனி அம்பலத் தாடும்
புனித நீ ஆதலால் என்னை

அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்

அம்மையப் பாஇனி ஆற்றேன்"

என்று செவ்வேளைக் குயிலன் வணங்க, அவர் **கண்ணீர் சொட்டச் சொட்ட அழுதார்.**

**பனிமலர் திகைத்தார்;** தம் கைத்துணி கொண்டு கண்ணீரைத் துடைத்தார் "ஏன் இப்படி" என்றார்.

"பனிமலர், உங்களுக்கு **இயல்பான செய்தி.** யான் **என் பெற்றோர் இருவரையும் இளமையிலே இழந்து என் அப்பாவுடன் பிறந்த அத்தை வளர்ப்பிலே வளர்ந்தவன்.** நம் காதலால், அத்தை மகளையும் மணக்க மறுத்துவிட்டவன். இவையெல்லாம் இப் பாடலால் உருகிவழியச் செய்து விட்டது."

**"குயில் இன்னொருமுறை** பாடு" என்றார்.

"குயில் **அப்பா மேலும் அழுது வழியப்பாடாதே; தந்தையடித்தால் தாயணைப்பாள் அல்லவா; தாய் சொல்கிறேன் பாடாதே"** என்றார்.

"அப்பாவுக்கு இப்படியாம் என்றால் பாடியிருக்க மாட்டேன்" என அவர் காலைத் தொட்டான். பனிமலர் அவனை எடுத்து அணைத்துக் கொண்டு தண்ணீர் தந்து செவ்வேளை முகம் கழுவி வரச் சொன்னாள்.

குயிலிடம், **குயில் "இது வள்ளலார் வாய்வழி வந்த சொற்கள் அல்ல. அவர்தம் இளமை வாழ்வின் ஆவணப்பதிவு. நெஞ்சின் வழியாக நேய நெய்யாய் உருகிப் பாடியது ! பெற்றோரை இழந்து அண்ணன் அண்ணியர் அரவணைப்பால் வாழ்ந்தவர் வள்ளலார்"** என்று வரலாற்றைச் சொன்னார். நான் உங்கள் பெயர் வருவதால் **'பனிமலர்'** வரும் **தாயுமானவர்** பாடலைப் பாடினேன்.

அப்பாவும் அம்மாவும் சேர்ந்து இருப்பதால்

**"அம்மை அப்பா"**

என வரும் **வள்ளலார்** பாடலைப் பாடினேன் என்றான். **தாமரைக் கண்ணியார் உன்னிளமை நோக்காது அறிவுக்கூர்மை, மனன**

**ஆற்றல், எடுத்துரைக்கும் திறம் அறிந்தே இத்தகைய பாடல்கள் உள் வைப்பாகச் செய்துள்ளார்.** அவரை ஒருநாள் இங்கே அழைத்து ஒரு பாராட்டுவிழா நடத்துவோம். அவர் முதியர் ஆதலால், அம்மாவினிடம் அவர் இருக்கும் இடம்கேட்டு இசைவு பெற்று நம் வண்டியிலேயே அழைத்துக் கொண்டு வந்து விழா எடுப்போம். **ஆயிரம் கோயில் வழிபாட்டினும் உயர்ந்தது இத்தகையரைப் பாராட்டுவது** என்றபோது,

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான். என்ற ஔவையார் சொற்படி, **இறைவிதாமே அவர்"** என்றான் குயிலன்.

தாங்கள் செய்ய இயலாச் செயலைத் தாமரைக் கண்ணியார் செய்தமை, ஆசிரியப் பணி செய்த அளவில் இல்லாமல் அதனை நிறைபணியாய், இறைபணியாய்ச் செய்தமையாலேயே ஆம் என்றார். அப்போது பலகணிப்பக்கம் நின்று பொன்னும் வெள்ளியும் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தன.

# 7. உயிரின் வேண்டுதல்

"நான் அவலங்களை நாளும் பொழுதும் கண்டு கண்டு **உருகுவதை** விடுத்து வலுக்கட்டாயமாக விடுத்து - **உருக்காகிப்** போனவள்!" என்ற பனிமலர்,

"**உங்கள் உயிரின்** வேண்டுதல் என்று செவ்வேளின் கையைப் பற்றினாள்! **"என்னை நோக்கி முயன்று இறுக்க மாகுங்கள்"** என்றார்.

யாரும் இல்லாமையால் மாறி மாறி அரவணைத்துக் கொண்டனர். பனிமலரும் செவ்வேளும்!

"நானும் முயன்றுதான் பார்க்கிறேன். எதைப் பார்க்கிறேனோ – எதைக் கேட்கிறேனோ – நான் அதுவாகி விடுகிறேன்! இளமை தொட்டே வந்த இந்த நிலையைத் தவிர்க்க எண்ணி எண்ணித் தோற்றுத் தோற்றுப் போகிறேன்! என் தோல்வியால் உங்கள் முன் நான் நாணித் தலை குனியவே ஆகின்றது" என்றார் செவ்வேள்!

**"நம் காதல் நாள் முதல், நீங்கள் உங்களுக்காக வாழாமல் எனக்காக வாழ்ந்தீர்கள். நானும் எனக்காக வாழாமல் உங்களுக்காக வாழ்ந்ததை நெஞ்சார நினைகிறேன்.** ஒவ்வொரு நாளும் நீங்கள் என் உடன் இருந்தாலும் வேற்றூரில் இருந்தாலும் காலையில் எழும்போதில்,"

"இம்மை மாறி மறுமை ஆகினும்
நீயாகியர் என் கணவனை;
யானா கியர்நின் நெஞ்சுநேர் பவளே"

என்னும் **தமிழ் அகம்** தானே, என் **நெஞ்ச மொழி** ஆகின்றது" என்றார்.

"காற்றும் உட்புகா நட்பு (காற்றும் ஊடுபுகா உறவு) " என்று வள்ளுவர் சொன்னால் எத்தகு நுண்ணோக்கர் அவர்" என்று வியந்தார், செவ்வேள்.

பொழுது போவது தெரியவில்லை நம் உரையாடலுக்கு.

**"பாலைவன வாழ்வில் பசுஞ்சோலை போல்வது இத்தகைய பொழுது"** என்று கூறி இருவரும் பணிமேல் சென்றனர். செல்லும்போது,
"நம்மையறியாமலே நம் தலையில் கடமைகள் குவிகின்றன. பொன்னியைத் தேடி அவள் கணவன் திருந்தியவனாய் வாழ்வேன் என வந்தால் என் செய்வது?"

குயிலன் 'கல்விக்கு' என்ன வழி?

தாமரைக் கண்ணியார்க்குப் பாராட்டு என நாமே நேர்ந்து கொண்டோம்.

எல்லாம் பொன்னம்மை சார்ந்தவை. அவளை இன்று ஓய்வில் கலந்து செயல்படலாம் என்று சொன்னார்.

வெள்ளி வீட்டுக்குப் போய் விட்டாள். இரவு உணவு முடிந்தது. மாடி வாரத்தில் அமர்ந்தனர்.

பனிமலர் பொன்னிடம், "உன் கணவன் நல்லையா உன்னைத் தேடிவரக் கூடும் என எண்ணுகிறாயா?"

"வரமுடியாது; வரவாய்ப்பில்லை."

"எதனால்?"

"அவர் காவல்செய்த இடத்தில் கரவாகக் கள்ளச் சாராயம் பல்வேறு மதுவனக உண்டாக்கி அரசு வழியது எனப் போலி முத்திரைத்தாளும் ஒட்டிப் பல்வேறு இடங்களுக்கும் மறைவாக அனுப்பியுள்ளனர். அவ்வேலை நான் பார்த்த சமையல் பகுதிக்கு அப்பால் **நிலத்தடிச் சுரங்க அறையுள்** நடந்துள்ளது. அதனைத் துப்புத் தெரிந்து மதுவிலக்குக் காவல் துறையினர் சுற்றி வளைத்து முதலாளி முதல் அனைவரையும் சிறை செய்துள்ளனர். அவர்களுள், வந்தவர் போனவர் வந்தபொழுது எல்லாமும் பதிவு செய்தவர் இவர். அதனால், முதலாளிக்கு முன்னாகச் சிறைப்படுத்தப்பட்டவர் இவர். ஆதலால் வழக்கு முடியும் வரை இவர் வெளியே வர முடியாது. வழக்கு முடிந்து வந்தாலும், நானாக அவரிடம் வந்தால் அல்லாமல் அவராக என்னைத்

தேடி வர முடியாது. வந்தாலும் **என் உயிர் உள்ள வரை அவரோடு செல்ல மாட்டேன்.** " என்றாள். மேலும்,

"நான் இங்கே வந்திருக்க மாட்டேன்; குயிலனுக்காக வந்தேன்; தாமரைக் கண்ணியார் தாயாகவும், ஆசிரியராகவும், எங்களைத் தாங்கும் தெய்வமாகவும் இருந்தார். இந்நிலையில் மருதிகாட்டிய நன்மொழியின் வழியால் உங்கள் நிழல் எங்களுக்குக் கிடைத்தது. " என்றாள்.

செவ்வேள், "அப்படி அவன் வந்தாலும் நாம் சட்டப் படி சந்திக்கலாம். பெண்கள் காவல் துறையின் உச்சமான பதவிகளில் பலர் உள்ளனர். நீதிமன்றத் துறையிலும் உள்ளனர். **மெய்ச் சான்று அழியா மெய்யிலேயே உள்ளதைப்** பனிமலர் கூறினார். அவனுக்குக்கடும் தண்டம் கிட்டும்; அந்த அளவு வராது" என்றார்.

பனிமலர், "குயிலன் படிப்புக்குப் பக்கத்துள்ள தமிழ்ப் பள்ளியில் சேர்த்து விடலாம். ஆறு வயதுக்கு முதல் வகுப்பிலே தான் சேர்த்தல் சட்டம் ஆத்தி சூடி முதல் திருக்குறள் வரை மனப்பாடம் எண்ணும் எழுத்தும் அறிந்த இவனை அ, ஆ படிக்கத் தொடங்கும் வகுப்பில் சேர்ப்பது முறையா? தேர்வு என்னும் அளவு கோலும் பொருந்தி வராதே! தனிக் கல்வி கற்பவனாக மற்றைப் பாடங்களையும் படித்து நேரே பத்தாம் வகுப்புத் தேர்வு எழுதலாமா? எப்படியும் கல்விச் சான்று வேண்டுமே " என்றார்.

செவ்வேள், "இதனைக் கல்வித்துறையின் வழியேதான் கண்டறிய முடியும். பொது நிலைக் கல்வியில் இடமுண்டா என்றும் பார்க்க வேண்டும்" என்றார். பனிமலர், பொன்னம்மையிடம் "தாமரைக் கண்ணியார் முகவரி உள்ளதா" என்றார். தம் பணப்பையில் இருப்பதை எடுத்துத் தந்தார்.

"அவர்க்கு அகவை என்ன இருக்கும் " என்றார். "எழுபதை ஒட்டி இருக்கும். அவரே வேண்டியதை ஆக்கிக் கொள்கிறார் இயல்பாக நடக்கக் கூடியவர்தாம் "சரி, கடிதம் எழுது. ஒரு நாள் தாங்கள் தாம்பரம் வந்து செல்ல வேண்டும். வண்டிவரும் உடன் குயிலனும் வருவான்"

என்று எழுது. தக்க நாளைத் தேர்ந்து விழா ஏற்பாடு செய்து அந்நாளில் அழைக்கலாம். எழுபது அகவை என்றால், **'முத்து விழா'** அது!"

**"காவல்துறை உயர் அலுவலர் முத்தரசி என்பார் (இ.கா.ப) உள்ளார். அவரை வாழ்த்த வேண்டிக் கொள்ளலாம்"** என்றார். பொன்னோ, குயிலனோ இடையே பேசவில்லை. குயிலன் இறுதியில் சொன்னான். **தாமரைப்பாட்டி** வள்ளலார் பாட்டு ஒன்றைத் தவறாமல் சொல்வார், அது **வள்ளலாரிய முழுதுறு அடங்கல் என்பார்** என்றான்.

"அதைப் பாடு" என்றார் பனிமலர்:

"எத்துணையும் பேதமுறா தெய்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி, உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவரவர் உளந்தான், சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடமென நான் தெரிந்தேன்; அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திட என்
சிந்தைமிக விழைந்த தாலோ!"

எனப் பாடினான்.

"தாமரைக் கண்ணியார் வழியாகக் குயிலனுக்கு **வள்ளலார் ஒளிக்கீற்றுப் புகுந்து ஒளி செய்கிறது"** என்றார் **பனிமலர்.** **"உண்மை உண்மை"** என்றார் **செவ்வேள்.**

௸♦௵

# 8. மணி ஒலித்தது

கலந்து பேசுதல் முடித்துவிட்டுக் கீழே வரும் போது, **வீட்டு வாயில் மணி ஒலித்தது**. இந்நேரம் யார் என்று செவ்வேள் போனார். உடன் குயிலனும் போனான். கதவைத் திறந்தால் முதிய அம்மையார் ஒருவர் நின்றார். திகைத்தார். குயிலன் '**பாட்டி**' என்று அவர் கையைப் பற்றினான்.

"குயில் நலமாக இருக்கிறாயா என்னும் போது, அவர் அறிந்த கருப்பாயி வந்து வணங்கினாள். பனிமலரும் வந்தார். இவர்தாம் நாங்கள், "**நடமாடும் தெய்வம்**" என்னும் **தாமரைக் கண்ணியார்**" என்றாள் பொன்னம்மை!

**தாமரைக் கண்ணியா, தாமரைக் கண்ணியா,** இவர்களைப் பற்றித்தானே பேசிக் கொண்டிருந்தோம். முகவரி அம்மா கேட்டார்கள். கொடுத்து விட்டுக் கீழே வந்தால், அந்த **முகவரித் தெய்வமே முகம் காட்டி நிற்கிறது** என்று உள்ளே அழைத்துப் போனார்கள்.

குயிலனைப் பாலூட்டி வளர்த்த தாயினும் **தெய்வத் தமிழூட்டி வளர்த்த தாயாக நீங்கள் இருந்திருக்கிறீர்கள்**. நீங்கள் அடிக்கடி பாடும், "எத்துணையும் பேதமுறாது" என்னும் வள்ளலார் பாடலைக் குயிலன் பாடக் கேட்டு விட்டே கீழே வந்தோம்" என்றார் பனிமலர்.

"உங்களைப் பிரிந்து வந்து துயர் குயிலன் தாய்க்குப் பெரிது; குயிலனுக்கும் உங்களைப் பிரிந்த ஏக்கத்தை நீங்கள் கற்பித்த பாடலைப் பாடித் தணித்துக் கொள்கிறான். ஆனால் அவன் தாய்க்கு அத்தகைய பேறு இல்லாமையால் தாயைப் பிரிந்த கன்றுபோல், தவிக்கிறாள்" என்றார்.

நான், **பனிமலர்**; இவர் என் கணவர், **செவ்வேள்**; கருப்பாயிக்குப் **பொன்னம்மாள்** என்று பெயரிட்டிருக்கிறோம்" என்றார்.

குயிலன், "அம்மா உங்கள் திட்டத்தைப் பாட்டியிடம் சொல்லலாமே!" என்றான்.

"நீ சொல்லாமல் யார் சொல்வது" என்றார் பனிமலர்

"பாட்டி உங்களுக்கு - உங்கள் பெருங்குணத்துக்கு - எனக்கு அறிவூட்டியதற்கு - வயது எழுபது ஆவதற்கு என எல்லாமும் சேர்த்து ஒரு விழா எடுத்துப் பாராட்ட அம்மா அப்பா தீர்மானித்துள்ளார்கள்; நாளைக்குக் கடிதம் விடுக்க முகவரி வாங்கினார்கள். நீங்கள், பேசிமுடித்துக் கீழே வந்தால் **தெய்வக் காட்சியாய் நிற்கிறீர்கள்**" என்றான்.

பார்த்த பார்வையிலேயே ஏதோ **புதியதோர் உலகத்துக்கு** - இன்ப உலகத்துக்கு - **வந்த மகிழ்ச்சி உண்டாகிறது**. இதுவே போதும்;

**என் மாணவி மருதி**தான், நீங்கள் இங்கே இருப்பதாகச் சொன்னாள். உன்னைப் பாராமல் **உணவும் குறைந்தது; கண்ணுறக்கமும் கெட்டது. காரைக்காலம்மையாக வாழும் எனக்குக், கண்கண்ட தெய்வமாக விளங்கின உங்களைப் பிரிந்த பிரிவுதான் எனக்குத் தாங்க மாட்டாப் பிரிவு** என்று கூறி, குயிலனை மடியில் சாய்த்து வருடினார். பொன்னம்மை முன்னிற்கவே முடியாமல் அகன்றாள்.

**நான் பகல் உணவு மட்டும் உண்பவள்**. இரவில் சிறிய அளவில் பால் பழம் கொள்வேன் என்றார். பனிமலர் பாலும் பழமும் வழங்கினார்.

"குயிலா, அம்மாவோடு போய் இரு. நான் சிறிது கழித்து அங்கே வருகிறேன்" என்றார்.

குயிலன் சென்றதும், தாமரையார், மெல்லெனப் பனிமலரிடமும், செவ்வேளிடமும் சொன்னார்; "சில நாள்களுக்கு முன் **நல்லையா** என் வீட்டுக்கு வந்து, என் மனைவியையும் மகனையும் வீட்டுள் வைத்துள்ளாய். அவளை என் வீட்டுக்கு அனுப்பவில்லையானால் உனக்கு ஏற்படுவதை நான் சொல்ல முடியாது. படித்த ஆசிரியை. பிரிந்தவரைச் சேர்த்து வைப்பர்; நீ கெடுகாலி, உன்வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்டது போல, என் மனைவி வாழ்வையும் கெடுக்கிறாய். வேலைக்கு வந்தால் வீட்டோடு வைப்பதா? யாரோடும் கூட்டி விடுகிறாயா எனச் சொல்லாத சொல்லெல்லாம்

சொல்லி, பக்கத்து வீட்டு ஆணும் பெண்ணும், கம்பும் கூட்டு மாறும் கொண்டு வந்து அறைய,"

"நாங்கள் எல்லாரும் **இது தெய்வம் இருக்கும் குடியிருப்பு"** என்று **கோயிலைக் கண்டு வணங்குவது போல வாயிலைக் கண்டு வணங்கிச் செல்கிறோம்.** நீ மேலும் இங்கு எட்டிப்பார்த்தால் காலோடு கையோடு போகமாட்டாய்" என்று ஓங்கிக் கத்த வெளியே போனான். அவன் மேல் வழக்கு இருக்கிறது. காவலர் சிறையில் இருந்தான். ஆயினும், அடாவடித்தனம் செய்கிறான். குயிலனுக்கும் அவன் அம்மாவுக்கும் என்ன நேரத்தில் எது நேருமோ என்று அஞ்சித் தெரிவிக்கவே வந்தேன். தனியாகப் பொன்னம்மாளை வெளியே விடாதீர்கள். வெறிகொண்டு திரிகிறான். சிறைத்தண்டனை, காவல்சிறை இவற்றுக்குப் போனாலும் அவனுக்கு வெட்கமில்லை. எனக்கு ஏற்பட்ட அச்சத்தால் சொல்லிவைப்போம் என வந்தேன்" என்றார். பொன்னம்மாளுக்குத் தெரிந்தால் மிகக் கவலைப்படுவாள் என்றே குயிலனை அவளிடம் போயிருக்கச் சொல்லி உங்களிடம் பேசுகிறேன்" என்றார்.

"பொன்னம்மா குயிலனோடு பேசுங்கள்" இங்கே படுக்கை அறை விருந்தாளிகளுக்காக உள்ளது; அதில் நீங்கள் தங்கிக் கொள்ளலாம். காலையில் போக வேண்டுமா, அடுத்த நாள் போகலாமா? நான் வண்டியை அனுப்புகிறேன்" என்ற செவ்வேள், "முத்து விழாவுக்குத் தட்டாமல் வரவேண்டும் என முன்னமே நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் ஒருவருக் கொருவர் குழந்தை; இப்பொழுது **குயில் வந்தது எங்களுக்குப் பேரின்பமாக உள்ளது.** " என்றார்.

நான் அவர்களோடேயே தங்கிக் கொள்கிறேன் என்றார் தாமரை. விரிப்பு தலையணை கொண்டு வந்து பனிமலர் அழைத்துச் சென்று பொன்னம்மாள் தங்கியுள்ள அறையில் விட்டார்.

ꙮ ♦ ꙮ

# 9. குட்டையன் என்னும் மொட்டையன்

காலை ஆறு மணிக்கே ஆங்கிலச் செய்தித்தாள், தமிழ்ச் செய்தித்தாள் வந்துவிடும். பால் பையும் வந்துவிடும். தமிழ்ச் செய்தித்தாள்களில் "**குட்டையன் என்னும் மொட்டையனுக்குப் பத்தாண்டுக் கடுங்காவல் தண்டனை**"

"கள்ளச் சாராயம் - மதுக்கலப் படம் - கடத்தல் - ஆகிய கொடுஞ் செயல்களில் ஈடுபட்டு வந்த **மொட்டையனுக்குப்** பத்தாண்டுக் கடுங்காவல் தண்டனையிடப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். அவர் கள்ளச் சாராயக் கரவுத் **தொழிற்சாலைக்கு முத்திரையிட்டுக் காவலர் காவலில் ஆக்கப்பட்டது. அவர் பணம், வாங்கிக் கொண்டு, வைப்பகம் முடக்கப்பட்டன.** "

இதற்குத் தொடக்க நாள்முதல் உடந்தையாக இருந்த **நல்லையன்** என்பாரும் பத்தாண்டுக் கடுங்காவல் தண்டனை பெற்றார். அங்குத் தொழில் செய்த தொழிலாளர்கள் எச்சரிக்கப்பட்டு ஓராண்டு வெறுஞ்சிறையில் தள்ளப்பட்டனர்.

எனச் செய்தியிருக்கக் கண்டார் செவ்வேள். இரவு பேசியதென்ன? நிகழ்ந்ததென்ன? பத்தாண்டளவு நல்லையன் வெளியே வரமுடியாது. அதற்குள் நடக்கப் போகின்ற மாற்றங்கள் எத்தனை எத்தனையோ என்று அவர் நினைக்கும்போது தாமரைக் கண்ணியார் வந்தார். "தீய தொழிலில் ஈடுபட்ட மொட்டையனுக்குத் தண்டனை தர வேண்டியது தான். **அரசு மதுக்கடை நடத்துவதே "குடிக்கும் நாட்டுக்கும் தீராக் கேடு". கள்ளமது கலப்படம் செய்தல் ஆகியவை மிகப்பெருங்கேடு. அரசுக்குப் பொருள் இழப்புப் பெரிதன்று. கடலளவு கொள்ளையில் கடுகளவுக்கொள்ளை. ஆனால் உயிர்கொலையாம் மதுக்கலப்படம் உடன் சாகடிக்கும் நச்சாம்!** ஆயின் காவலன், தொழிலாளர் வயிற்றுப்பாட்டு வேலையர்! அவர்களுக்குத் தண்டனையால் உண்டாகும், **குடும்பத்தவர் எண்ணாத்துயர்க்கு ஆட்படுவர்** என்று தாயுள்ளத்தால் கூறினார்.

பனிமலர், பொன்னி ஆகியோரும் செய்தி அறிந்தனர். பொன்னிக்கு முகத்தில் கவலைக்கோடு தெரிந்தது. "தான் சமையலை விட்டு அவ்வீட்டில் இருந்து வெளியேறியதும் அவரும் வெளியேறியிருந்தால், இத்தகு விளைவுக்கு ஆட்பட்டிரார் " என்றாள்.

"நீ உடன் வெளியேறாமல் இருந்தால், **என் தொடர்பும், மருதி வழிகாட்டலும், இவ்விடத்து வாழும் பேறும் வாய்த்திரா என்று எண்ணிக், "கேட்டிலும் உண்டோர் உறுதி"** என்று கொள்ள வேண்டியதுதான்" என்றார் தாமரை.

பனிமலரும் குயிலனும் அமைந்திருந்தனர்.

நான் புறப்படுகிறேன் என்றார் தாமரைக் கண்ணியார். பல்விளக்கிக் கடன் முடித்துத் தண்ணீர் பருகிவிட்டேன். நானும் குயிலனும் "எத்துணையும் பேதமுறாது" என்பதையும் பாடிவிட்டோம்" என்றார்.

வண்டியில் ஏறுங்கள் உங்களை வீட்டில் இறக்கி விட்டு வருகிறேன். இன்று விடுமுறை நாள். மலர் மட்டும் காலையில் செல்வார். முத்து விழாவுக்கு அழைப்பும் வண்டியும் வரும். அவ்விழாவின் பின் குயிலன் படிப்புக்கு என்ன செய்யலாம் என்பதை எண்ணலாம் என்றார். பொன் நீயும் இன்று மருத்துவமனைக்கு வரவேண்டா. வெள்ளி குயிலனோடு இரு என்றார்.

பனிமலர் மருத்துவமனை சென்றதும் காலையில் உண்ணாமல் பொன்னி படுத்தாள்.

முதிய அத்தையை உடன் வைத்துக்கொள்ள முடியாமை, நல்லையா நல்லையாவாகக் காட்டிய கரவுநிலை. தன் காதல் நிலை, குயிலன் பிறப்புக்குப்பின் ஏற்பட்ட மாறுதல் நிலை, தாமரைக் கண்ணியார் காவல் தெய்வமாக இருந்தநிலை, குயிலன் பள்ளி செல்லாமலே அறிவு பெற்ற பேறு, காவல் நிலையத்தில் மருதி செய்த உதவி, தாம்பரத்தில் கிடைத்தற்கரிய வாய்ப்புத்தனக்கும் குயிலனுக்கும் வாய்த்தமை - என்பவை எல்லாம் **அலை அலையாக வரப் புரண்டாள்.**

செங்கற்பட்டுக்குச் சென்ற செவ்வேள் திரும்பினார். பனிமலரிடம் மட்டும் சொல்லுங்கள். கருப்பாயியின் முதிய அத்தை

இயற்கை எய்தி விட்டார். அப்பொழுது இவள் இருக்கும் இடம் தெரியாததால் நானே முன்னின்று எல்லாக் கடமைகளையும் செய்தேன். என்ன கொடியவன் என்றாலும் குயிலனைத் தந்தவன். அந்தக் கவலை உள்ளாகக் கிளரவே செய்யும்; அதனோடு அத்தை இயற்கை தெரிந்து தவிக்க வேண்டாமே என்று நான் சொல்லவில்லை என்று சொல்லியதைப் பனிமலரிடம் கூறினார். உரியதண்டனை, இயற்கை அழைப்பு என்றாலும், ஒரு நாள் உறவினர் - நட்பினர் - என்றாலும் அசைவு உண்டாக்கல் உலகியல். முத்து விழா முடிந்தபின் சொல்லலாம் என்றார்.

குயிலா, திருக்குறளில் நிலையாமையில் ஒருகுறள் சொல் என்றார் பனி.

"நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை"

என்றான். வியந்தார் பனிமலர். பனித்துளியில் பாருலகை அடக்கிய குறள் அல்லவோ என்று எண்ணினார்.

# 10. இன்றைக்கு மட்டுமில்லை என்றைக்கும்

செவ்வேள் குயிலன் கல்வியைக் கருதினார். **தமிழ்வழிக் கல்வி** நடத்தும் பள்ளிக்கு அழைத்துச் சென்றனர். அவரை அறிந்த தலைமையாசிரியர் வணங்கி வரவேற்று இருக்கச் செய்தார்.

இவன் பெயர் குயிலன். இவன் படிக்க வேண்டும் என்றார். வயது என்றார்.

"ஆறு"

முதலாம் வகுப்பில் சேர்க்கலாம் என்றார்.

குயிலா, 'ஆத்தி சூடி' சொல் என்றார்.

அறஞ்செய விரும்பு முதல் வரிசையாகச் சொன்னான். கொன்றை வேந்தன், நல்வழி, திருக்குறள் எல்லாம் முழுமையாகத் தெரியும் தமிழ் எழுத்துத் தெரியும். கூட்டிப் படிப்பான். ஆங்கில எழுத்து, எண் தெரியும் என்றார். இவனை எவ்வகுப்பில் சேர்ப்பது; இங்கே உள்ளதோ ஐந்து வகுப்பு. நான்குவரை தனிப்படிப்பு என்று போட்டு ஓராசிரியரிடம் சான்று வாங்கி ஐந்தாம் வகுப்பில் சேர்க்கலாம். அதற்கும் கல்வித்துறை ஒப்புகை பெற வேண்டும் என்றார்.

இந்த வயதில் இவ்வளவு புலமை என்றால் வியப்பே. ஆசிரியர்களாகிய எங்களுக்கே இவன் போல் வரிசையாக இத்தனை நூல்களை ஒப்பிக்க முடியாது என்று வியந்தார்.

ஆறுவயதில் ஐந்தாம் வகுப்பில் சேர்க்கக் கல்வித் துறையும் இசையும் என்றும் சொல்ல முடியாது என்றார். ஆங்கில வழிப்பள்ளி என்றால் 'அறம்' என்று கூட வாய்த்திறக்கக் கூடாது. **'அம்மா' என்றாலே பாம்பு படமெடுத்தாடுவதாக நினைப்பர்** என்றார். மேலும் உங்கள் எண்ணம் – மொழிஇனப்பற்று – ஆகியவையும் தெரியும். ஆனால் நான் என்ன செய்வது என்பது தெரியவில்லை என்றார். செவ்வேள் விடைபெற்றுத் திரும்பினார். உடன்வந்த தலைமையாசிரியர்,

வெளிநாடுகளில் **அகவை நோக்காது அறிவை நோக்கிச் சேர்ந்து** படிக்கும் வாய்ப்பு உண்டு. ஆனால், ஆறகவைச் சிறுவனுக்குத் தனியே சென்று படிக்க முடியாதே” என்றார்.

“இங்கேயே தனியே ஆங்கிலம் படித்து அத்தேர்வை எழுதிப் பட்டம் பெறும் வாய்ப்புண்டு” என்றார். அதை எண்ணிக் கொண்டு விடைபெற்றார்.

தமக்கு ஆங்கிலம் கற்பித்த கிறித்தவக் கல்லூரிப் பேராசிரியர் **வில்லியம்** என்பார் நினைவில் வந்தார். அப்பொழுதே ஐம்பது அகவை தாண்டியவர் எண்பதுக்குக் குறையாமல் ஆகியிருக்கும். அவரை எண்ணிக் கொண்டு நேரே கல்லூரி வளாகக் குடியிருப்பில் இருந்த அவரைக்கண்டு வணங்கினார். **“செவ்வேள் இல்லையா? தமிழ் மன்றச் செயலராக இருந்தவன்.** நான் என்ன செய்ய வேண்டும்?” என்றார்.

“இவன் பெயர் குயிலன். தமிழில் சிறந்தவன்; என்வளர்ப்புப் பிள்ளை. தமிழ்ப்பள்ளியில் முதல் வகுப்பில் சேரும் வயதாம். ஆங்கிலம் படித்து மேலைநாட்டில் தேர்வெழுதிப் பட்டம் பெறலாம் என ஓர் ஆசிரியர் கூறினார். இவனுக்குத் தாங்கள் ஆங்கிலம் கற்பித்தால் பெரிய உதவியாம் ” என்றார்.

“செவ்வேள்; **உன் பொறியியல் பட்டத்தால் வேலையா? ஆங்கிலத்தால் வேலையா? என்றார். பொட்டில் பொட்டென்று அடித்தது போல் இருந்தது. “கணினி வகுப்பில் சேர்** ” ஆங்கிலம் தமிழ் எழுத்துக்கள் தெரியுமல்லவா; உலகிலேயே கணினிப் போட்டியில் உயர்ந்து நிற்பதும், புதிது புதிது காண்பதும் **ஆங்கிலமும் தமிழுமேயாம்.** அவ்விரண்டையும் கற்க வயதில்லை. வேலை செய்யவும் வயதில்லை. நிறுவனத் திறமும் வாய்ப்பும் இருந்தால் **கணினிப் பயிற்சியகமே** நடத்தலாம் என்றார். **செங்கதிர் புறப்பட்டது போல் செவ்வேளுக்குப் புலப்பட்டது.** பனிமலரொடு கலந்து கொண்டு முடிவெடுக்க வேண்டும் எனத் திரும்பினார்.

பனிமலர் பணிமுடித்துத் திரும்பும் வரை பொன்னி எழும்பவில்லை. உணவாக்கி வைத்து விட்டுப் படுத்து விட்டாள். என்ன

கொடியன் என்றாலும் கணவன்; மகனை நினைத்து ஆறுதல் அடையலாம்; அதற்குத் தெளிவு வேண்டும்" என்று நினைத்தார்.

செவ்வேள் குயிலனுடன் மகிழ்வோடு வந்தார். பள்ளிகளில் சேர்க்க இவன் நிலைக்கு இடமில்லை என்பதை விளக்கிக் கூறி, **கணினி கற்க வயதில்லை; அதனைக் கற்கச் செய்யலாம்** என ஆங்கிலப் பேராசிரியர் வில்லியம் சொல்லியதைச் சொன்னார்.

பனிமலர் எனக்குத் தெரிந்த 'கனி' கணினிப் பயிற்சி நிலையம் வைத்திருக்கிறார். கவலை இல்லை சேர்த்துவிடலாம் என்று உண்ணப் போனவர், காலையில் உண்ணாமல் உணவாக்கி வைத்துவிட்டுப் பொன்னி படுத்துவிட்டாள் என்றார்.

"வெள்ளி போய் விட்டாளா?"

"ஆம், நான் வந்ததும் போய் விட்டாள்."

"அப்படியானால் நீங்கள் அவளை அழைத்து நீராடச் சொல்லி உண்ணுமாறு கூறுங்கள் என்றார். பனிமலர் தன்னை அழைப்பது கேட்டு முகத்தைத் துடைத்துக் கொண்டே வந்த பொன்னியை, "நீராடிவிட்டு உண்ணுமாறு சொன்னார். **"உன் கவலையால் குயிலனைக் கவலைக்கு ஆளாக்காதே. இது இன்றைக்கு மட்டுமில்லை; என்றைக்கும்"** என்றார்.

❧ ♦ ❧

# 11. எதிர்பாராதது எய்தும்

பனிமலர் குயிலனை வண்டியில் ஏற்றிக் கொண்டு கனியின் கணினியகம் சென்றார். எதிர்பாராச் சந்திப்பு என்றார் கனி. "எதிர்பார்த்தது வராது; எதிர்பாராதது வரும்" இது உலகியல் என்றார் பனி.

"உண்மையிலும் உண்மை; இன்று புதிதாகக் கணினி பயில வரலாமா என்று ஒருவர் தொலைப்பேசியில் கேட்டார். ஆனால், சற்று நேரத்தில், "இன்று வர வாய்க்கவில்லை" என்றார். எதிர்பாரா நீங்கள் வந்துள்ளீர்கள். இவன் குயிலன், வளர்ப்புப்பிள்ளை இவன் கணினி பயில வேண்டும்" என்றார்.

"நகைத்தார்!"

"இவன் முதல் வகுப்புப் பையன்"

"தமிழ் எழுதச் சொல்லுங்கள்"

எழுதினான்.

திருக்குறளில் 'கல்வி' சொல் என்றதும், கல்வி அதிகாரத்தை ஒப்பித்தான். **கனி குயிலைத் தழுவி முத்தும் தந்தார்.**

"இந்த வயதில்..."

"திருக்குறள் முழுவதும் மனப்பாடம்; ஆத்தி சூடி முதல் பல மனப்பொருள்" என்றார் பனி.

**நான் ஒரு கோயில் கோபுரத்தின் முன் நிற்பது போல் உள்ளது**. இவனை நாற்காலியில் அமர்த்தக் கீழே பலகைதான் போட வேண்டும் என்றாள்.

"கணினி கற்றுக் கொள்ள அடிப்படைக் கல்வி; கணினி கற்றுக் கொள்ளும் திறமைதான். பட்டம் பெற - தர- முடியாது. "சட்டமன்ற - நாடாளுமன்ற - அமைச்ச - பதவிகளுக்குத் தகுதி இது எனத் திட்டப்படுத்தாத நாடு இது;" வயதோ அடிப்படைக் கல்வியோ, அரசு வேலைக்கு வேண்டும். தனியார் வேலைக்குக் கணினித் திறம்தான் வேண்டும். இந்த நிறுவனத்தில் மட்டுமில்லை. எந்த நிறுவனத்திலும் இவன்போல் இளையன் கணினி கற்க வந்திருக்க மாட்டான் என்றார்.

"அம்மா! நான் என்றாள் இனியள்; மறந்துவிட்டேன் என்றார் கனி. **நான் இவனைப் பூரிப்புடன் ஏற்றுக் கொள்கிறேன்** என்றார்."

"**பெயர்** : ந. குயிலன்"

"**தந்தை** : நல்லையா"

**திகைத்தார். "நேற்றைத் தாளில்.......**

"ஆம்! அந்த நல்லையாவே!"

"அவருக்கு இப்படிப் பிள்ளையா?"

"**சூழல் கேடு!**"

"சரி,"

"தாய் : பொன்னம்மை"

"முகவரி : மரு. பனிமலர் செவ்வேள்,"

மணிமங்கலம் சாலை.

மூன்றாம் தெரு, வீட்டு எண் 89.

தாம்பரம், சென்னை.

கட்டணம்: "**இறையருள்**" நான் பெறாப்பிள்ளை; உங்களைப் போல்.

**"நான் கட்டணம் வாங்கும் மருத்துவர்."**

**"நானும் கட்டணம் வாங்கும் கணினியளே! சில விதி விலக்குகள் உண்டு!"**

"**குயில் புறப்படுவோம்**; அருட்பாவில் ஒரு பாட்டுப்பாடு"

"கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்**கனிந்த கனியே**
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண்ணீ ரிடைமலர்ந்த சுகந்தமண மலரே;
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே"

என்று பாடினான். முடித்ததும்,

இதை ஏன் பாடினாய்?

**'கனிந்த கனி'** வருகிறதில்லையா?

கனி குயிலைக் கட்டி அணைத்துக் கொண்டார். பனிமலர், கனியினிடம் விடைபெற்றுக் கொண்டார்.

"ஒரு மணிகழித்து இவன் அன்னை பொன்னம்மை வருவர் என்றார். "வரவேண்டா என்னோடு உண்ணச் செய்து, அவனிடம் பாடம் படித்து மகிழ்வேன். மாலை ஐந்து மணிக்கு வந்து அழைத்துக் கொள்ளச் சொல்லுங்கள்" என்றார்.

"நன்றி" என்றார்

"நான்தான் நன்றி சொல்ல வேண்டும்" என்று வணங்கினார். பனி, **என்ன எல்லாம் முரணாக இருக்கிறது. கனியின் கனிவு எப்படி வந்தது; இளமையின் வளமை எவரையும் ஆட்கொள்கிறதே;**

"**எல்லா இளமைக்கும் இந்தப்பேறு இல்லையே; என் இளமையும்** ஆடல் பாடல் மழலை இன்பமே;" என்னவர் இளமையும் அத்தகையதே; என் தந்தை தமிழ்ப் பேராசிரியர், அவர் தந்தை வழக்குரைஞர், குயிலன் இளமை எங்கும் பளிச்சிடுகின்றதே; **மரபு ஆய்வை வந்துபார் என்கிறதே;** காக்கைக் கூட்டில் பிறந்தாலும் குயில் குயில்தான்; சேற்றில் மலராத், தாமரைக் கண்ணிக்கு ஏன் இந்தப் பாசம்? கருப்பாயி பொன்னியானது பொருந்துவதே; இவ்வாறு நினைத்தாலும் **பனிமலராக மருத்துவமனையுள்** புகுந்தார்.

திண்டிவனத் தோழமை எளிதில் எல்லாவற்றையும் அறிந்து கொள்ளச் செய்தது. பொன்னியே வரவேற்க, வரிசையில் அமர்த்த, அழைப்புக்கு அனுப்பி, சீட்டுக்கு மருந்துதர, கணக்கு வைக்கப் பழகிக் கொண்டாள்.

திங்களுக்குப் பொன்னி கணக்கில் ஐயாயிரமும், கனிக் கனியின் காசிலாப் பயிற்சிக் கொடையாக ஆயிரமும் ஆகக்கூடி ஆறாயிரம் போடத்திட்டப்படுத்திக் கொண்டனர். இது பனிமலரும் செவ்வேளும் கலந்து செய்த திட்டம். மாலை 5 மணிக்குப் பொன், குயிலை அழைக்கப் போனார். கனியும் உடன்வந்தது வியப்பாயிற்று.

ஞ♦ஐ

# 12. பனிக் கனி

"என்ன கனி" என்றார் பனி.

"இன்று குயிலுக்குக் கணினி தொடங்கினேன்; **சொன்னவுடன் மீளச் சொல்ல வேண்டாமல் புரிந்து கொள்கிறான். என்னிடம் அவன் கற்றதனினும், அவனிடம் நான் கற்றதே மிகுதி. அதனால், உங்களுக்கு நன்றி சொல்லிவிட்டுப் போக வந்தேன்**" என்றார்.

"யாருக்கு யார் நன்றி?"

**'கனி', நன்றி கூறுவார் என்றா கனிகிறது" என்றார் பனி. "பனியும் நன்றி கூறுவார் என்றா பனிமலையாகக் காட்சி வழங்குகின்றது"** என்றார் கனி.

விரைவில் நானும் கற்றுக் கொள்வேன்; அவனும் கற்றுக் கொள்வான். இன்றுபோல் பயிற்சி முடியும் வரை என்னோடு மாலை 5 மணிவரை இருக்க உதவுங்கள்" என்றார். **அப்படியே ஆகட்டும் என்று கூறிப் பனிக்கனியாகக் கைகுலுக்கிச் சென்றனர்.**

மருத்துவமனைக்கு வந்ததும் பொன்னி, தன்னிலையை மாற்றிக் கொண்டாள். பழைய மகிழ் முகத்தை முயன்று வருவித்துக்கொண்டு செயல்பட்டாள்.

விடுக்க வேண்டியவரை விடுத்தாள்; வருபவரை வரவேற்று இருக்கையில் இருக்கச் செய்தாள். கம்பூன்றிக் கொண்டு **ஒரு முதியவர் வந்தார்**; நடக்கத் தடுமாறினார்; காலில் கட்டுப் போட்டிருந்தார்; குறுகிய உயரமுடைய இரண்டு மூன்று படிகள் தான்; எனினும் ஏறிவரத் தடுமாறினார். ஓடிப்போய் அவர்கையைப் பற்றித்தோளோடு அணைத்துக் கொண்டு வர, இருந்தவர்கள் அவர்க்கு இடம் தரத் தாம் தாமே எழுந்தார்கள். வந்தவர் கால்வைத்த இடமெல்லாம் நீர் வழிந்து சொட்டியது. "அவரை முதலாவது உள்ளே கூட்டிச் செல்லுங்கள்" என்று பரிவுடன் கூறினார். முகம் கண்டதும் பனிமலர் எழுந்து தாமே கைதந்து அழைத்து அமர்த்தினர். ஒரு வட்டத் தகட்டினைக் காட்டி எடுத்து வரச் சொன்னார் பொன்னியிடம். அது வந்ததும், அவர் காலைத் தூக்கி

அதன்மேல் வைத்துக்கட்டை அவிழ்த்து, புண்வழிவைத் துடைத்துவிட்டு, மருந்து வைத்துக் கட்டினார். "பையுள் அவர் கைவைத்தார்" காசு எடுக்க; "ஐயா இருக்கட்டும்" என்று தாமே அழைத்துக் கொண்டு அவர் வந்த வண்டிவரை சென்று அனுப்பினார். வாடகி அது; "இத்தகு முதியரைக் காசுக்கு ஏற்றுவதுடன் கனிவுடன் தொண்டு என்று கைகொடுத்து அழைத்து வந்திருக்கக் கூடாதா?" என்றார், பனி.

"அவரை ஏற்றியதால், வண்டி நாறிவிட்டது; மீளவிட்டுவிட்டுக் காசு வாங்க வேண்டுமே என்பதால் காத்திருந்தேன். நான் இவரை ஏற்ற இறக்கச் செலவளித்த நேரத்தில், **இரண்டு வரத்தை இழந்திருப்பேன்" என்றார் ஓட்டுநர்.**

**"ஐயா உங்களுக்கு வீட்டில் துணை இல்லையா?"**

**"படுத்த படுக்கையில் அம்மா;"**

**"அயல் நாட்டில் மக்கள் பேரர்;"**

கலங்கினார் பனிமலர். வாடகி சென்றாலும் சென்ற திக்கை நோக்கி நின்று கண்ணைத் துடைத்துக் கொண்டு வந்தார். அமர்ந்திருந்தவர்கள் அதிர்ந்தனர். இவர் எனக்குத் **தமிழமிழ்து ஊட்டிய பேராசிரியர்**; என்றார்.

**"என்றைக்கும் உணர்ச்சிவயப்படாத அம்மா, இன்று கண்ணீர் வழிந்து உருகிப்போனார்"** என்று தமக்குள் பேசிக் கொண்டனர்.

பனிமலர் உள்ளேபோய் முகத்தைக் கழுவிக் சரிப்படுத்திக் கொண்டு வந்து மணியடித்தார்.

உள்ளே ஒருவரை விடுத்தார் பொன்னி. இயல்பான பனிமலராக வினவியும் பார்த்தும் மருந்து எழுதித் தந்தும் கடமையில் நின்றார்.

பணிமுடித்து வீட்டுக்குச் சென்றதும், அவர் பேராசிரியராய்த் தமிழ் இலக்கணம் இலக்கியம் ஆகியவற்றை அவை அவையாகவே மாறிக் கற்பித்ததும், வினவிய வினாக்களுக்கு மென்முறுவலுடன் விடைதந்து வினவியரைப் பாராட்டியதும் தென்றலாகவும், வாடையாகவும் தவழ்ந்தன.

"பனி என்ன வாட்டம்;" "வேள், உண்போம்" எனக்கு, "உணர்ச்சி வயப்படுகிறீர்கள்" என்னும் நீங்கள், இன்று உணர்ச்சியில் அழுந்தியிருக்கிறீர்கள்;" என்ன?

"வேள், வேண்டா; உங்கள் வாயைக் காட்டுங்கள்; ஊட்டுகிறார். அவரே ஊட்டிவிட்டார்."

"உங்களுக்கு"? இப்பொழுது வேண்டா; நீராடி வருகிறேன். நீங்களே ஊட்டுங்கள்; பொறுத்துக் கொள்ளுங்கள்;" என்று நீராடப் போனார்.

"வேள், ஏதோ நேரக் கூடாதது நேர்ந்துள்ளது; அவரே சொல்லட்டும்" என்று அமைந்து அவர் வரவை நோக்கியிருந்தார்.

நான் மாச்சில்லும் வாழைப்பழமும் மட்டும் உண்கிறேன். நீங்கள் எடுத்தும் உரித்தும் கொடுங்கள் என்றார். உண்டார்; கட்டிலில் சாய்ந்தார். அவர் எண்ணத்தில், "கண்ணுக்குப்படாமல் தோன்றி, பலரையும் கண்ணீர் வழியச் செய்யும் உருகுதல் நோயே கொடியநோயுள் கொடிய நோய்; நெய்தல் பாட்டுப் பாடியவர்கள் நெய்யாக உருகிய நெஞ்சர்; வள்ளலார் உருக்கமே நட்ட நடு வயதிலேயே ஒளியுருப் பெற்றிருக்கிறது" என்றெண்ணினார். மறக்க நினைத்தாலும் மறையாத் திரையாய் ஓடியது; வேள் அதேகட்டிலில் ஓய்ந்து படுத்திருந்தாலும் ஓர் அசைவின்றி இருந்தார்.

"என்னநேர்ந்தது என அறியத் தவித்தார். வினவ நா எழவில்லை. அவரே சொல்வார்" என அமைந்தார்.

# 13. மணிமங்கலம்

எங்களுக்கு இளங்கலையில் தமிழ் கற்பித்த பேராசிரியர் **அமிழ்தனார்** காலில் புண்ணும் நீருமாய்வந்தார். வாடகியில் வந்தவரை, அவர் நிலைநோக்கி இறக்கித் துணைசெய்ய வாடகியர் வரவில்லை. அவர் நிலைகண்டு பொன்தான் அழைத்து வந்தாள். இருந்த எல்லாரும் இளகியவராய், வரிசை பாராமல் அவரை முன்னே கொண்டு செல்லுங்கள், என்றிருக்கின்றனர். அவரைக் கண்டதும் அதிர்ந்தேன். அதனினும் அதிர்ந்தேன் தோல் கழன்று புண்ணாகிச் சீழ் சொட்டுதல் கண்டு! கால் வைத்த இடம் எல்லாம் நீர் சொட்டல்! மருத்துவம் செய்து கட்டுப் போட்டு நானே வாடகி வரை கொண்டு சென்று ஏற்றி வந்தேன். வாடகிக்காரன் கவலை இவரை ஏற்றியதால் காலத்தாழ்வு ஆயது என்பது. நான் உங்களுக்குத் துணைக்கு யாரும் இல்லையா என்றேன். அம்மா படுத்த படுக்கையாய்க் கிடக்கிறார் என்றார். முன்னரே யான் அறிவேன். அவர்க்கு இரண்டு மக்கள். **பெண் இங்கிலாந்தில் வாழ்கிறாள் - மகனோ அமெரிக்காவில் வாழ்கிறான்.**

“தம்பொருள் என்ப தம்மக்கள்” என வளர்த்துப் பயன் என்ன? அவர்கள் பொருள் வெவ்வேறாக உள்ளனவே! ஆயிரம் ஆயிரம் பேர்க்கு அமுதூட்டிய அமுதர்க்கு கூப்பிட்ட குரலுக்கு ‘என்ன’ என்று கேட்க ஆளில்லை. சிற்றூராக இருந்தால் இந்த நிலை நேராது. பகையானவர் எனினும் ஒன்று நேர்ந்தால் ஓடி வந்து உதவுவர். நகர வாடையால் அதுவும் கெட்டுவந்தாலும் முற்றிலும் கெட்டுப் போகவில்லையே! சிறுபருவத்திலே கேள்விப்பட்ட செல்வி, திண்டிவனம் கருப்பாயி இல்லையா? என்று ஒட்டிக்கொள்கிறாளே! குயிலன் யார்? தாமரைக் கண்ணியார்! பாட்டி பாட்டி எனப்பாசம் பொழிகிறானே! அவரும் குயிலைக் காணாமல் கண்ணுறக்கம் இல்லை. சோறு இறங்கவில்லை என்கிறாரே! குயிலன் நம் ஊடு இருக்க அவனுக்கு ஊட்டி உண்ட இன்பம் நேற்றும் இன்றும் இல்லாமை நம்மை வருத்தாமல் இல்லையே! கனியால் விடமுடியாமல் தானே “ஐந்துமணிவரை என்னோடு இருக்கட்டும்” என்கிறாள்! அவனை, “ஒருமணி நேரம் படித்ததும் வா” என்று சொல்லி,

அவன் கணினிப் பயிற்சிக்குத் தடையாகி விடக்கூடாது எனத் தானே இசைகின்றோம்.

அமுதனார், இருவரைப் பெற்று ஆளாக்கி என்ன கண்டார்? யாராவது ஒருவர் தங்களோடு வைத்துக் கொள்ள வேண்டும். அல்லது அவர்களோடு இருந்து இங்கேயே வேலை பார்த்துக் கொண்டு இருக்க முடியாதா?

இலக்கம், கோடி; கோடி கோடி எனத் தேடும் பணப்பேய் உலகம்; கொண்டு வந்ததென்ன? கொண்டு போவதென்ன?

குழந்தை இன்மையோ, பெற்றுக் கொள்ளாமையோ கேடில்லை. பெற்ற குழந்தை உற்ற துணையாய் இல்லாதபோது, பெற்றால் என்ன பெறாவிட்டால் என்ன?" என இடைவெளி இல்லாமல் பேசினார் பனிமலர்! பேசிமுடிக்கட்டும் என ஊடுபேசாமல் கேள்வியராக மட்டும் இருந்தார் வேள். "குயிலனை நாம் நம்மோடேயே வைத்துக் கொள்ள முடியுமா?" அவனைப் பெற்ற தாய் உண்டே. தீயவன் என்றாலும் தந்தை என ஒருவன் உண்டே. இவன்பாசம் அவர்கள் மேல் செல்லுதல் ஆயின், தவிர்க்க முடியாதே! நம்மோடு பொன் இருப்பதால் சிக்கல் இல்லை! பகலே நம்மோடும் கனியோடும் இருந்தாலும், இரவே பொன்னோடு இருப்பதால் தானே ஈடாகின்றது.

குயிலன் வளர்ந்த நிலையில் அவன் எண்ணப் போக்கை எவர் அறிவர்? நொடி நொடியும் கிளை கிளையாய்த் தாவும் குரங்குமனத்தின் இயல்பை முன்னரே எவரும் அறிவரா? அப்பன் நல்லையா நல்லையாவாகத் தானே இருந்திருக்கிறான்." என்னும் போது, கட்டட மேற்பார்வையாளர் வேளைப் பார்க்க வந்தார். வேள் வெளியே வந்து அமர்ந்தார்.

"இன்று, மணிமங்கலத்தில் பொங்கல் விழா ஆதலால், ஆட்டபாட்டம் மிக்குளது. ஒப்பந்தக்காரர், வேலைக்காரர் எல்லாரும் அந்த விழாவுக்குப் போக விரும்பினர். அதனால், அரைநாள் வேலையாக விடுத்து அவர்களை அனுப்பிவிட்டுத் தங்களிடம் செய்தி சொல்ல வந்தேன். நாளை இயல்பாக விடுமுறை. ஆதலால், நீங்கள் நாளை மறுநாள் வந்தால்போதும். வேலைக்கு வேண்டும் மணல்,

செங்கல், கன்மா என எல்லாமும் உள்ளன என்று சொல்லிவிட்டு அவர்போக, 'வேள்' 'பனி' யினிடம் சென்றார்."

நம் வேலை நடக்கும் பகுதி, மணிமங்கலப் பகுதி. ஆதலால், அங்கே புதிதாக எழுப்பப்பட்டு வரும் **கண்ணகிகோட்ட அரங்கத்தில் முத்து விழா** எடுக்கலாம், என நினைக்கிறேன் என்றார் வேள்.

**"அங்கே கண்ணகி கோட்டம் எழுகிறதா?"**

**"இளங்கோவடிகள் சிலை வைக்கப்பட்டாயிற்று.**"கண்ணகி கோட்டக் கால்கோளும் ஆயிற்று.கண்ணகியார் சிலையும் வடித்தாயிற்று. திறந்த வெளி அரங்கம் உள்ளது. முன்னே வேண்டும் பந்தலும் போட்டுக் கொள்ளலாம். நம் ஆள்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கும் மகிழ்வாக இருக்கும் என்றார்.

**"தனி ஒரு பெண் ஓர் அரசையே கவிழ்த்த வீறு பெரிது; அதுபோல், மனச்சான்றால் உயிர்நீத்த மன்னனும் அவனடி வீழ்ந்த கோப்பெருந்தேவியும் உலக வரலாற்றில் காணரிய செய்திகள்"** என்றார் பனிமலர்.

"கண்ணகி கோட்டம் எடுப்பவர் யார்?"

"அக்கோட்டம் எடுப்பவர் **காஞ்சி அமிழ்த இளவரசர்.**" அக்கோட்டம் எடுக்கத் தூண்டியவர் **சிலம்பொலி சு. செல்லப்பனார்.**

"மணிமங்கலம் பழம் புகழ் வாய்ந்த இடம்; புதுப்புகழும் சேர்கிறது. "யான் காரைக்கால் அம்மை என்ற தாமரைக் கண்ணியார் முத்து விழாவுக்குத் தக்க இடம்தான்" என்றார் பனிமலர்.

"விழாவில் பங்கெடுப்பவர்?"

**காவல்துறையில்** உயர்பதவியராக இருப்பவரும் மாந்த நேயரும் ஆகிய **முத்தரசியார்** இ.கா.ப. தொல்காப்பிய நூல் அரங்கேற்றத் தலைவராகிய அதங்கோட்டு ஆசான் ஊரில் பிறந்து சிறந்து விளங்கும் **நீதியரசர் மகாதேவனார். கல்வித்துறைப்** பதிப்பில் ஊன்றிக் கல்வெட்டுக் கலையிலும் சிறந்து விளங்கும் முனைவர் **அருள் முருகனார்** - என அளவாக, **முப்பால் போல் மூவர்.**

"நீங்கள் வரவேற்பு"

"தாமரைச் செல்வியார்"

"ஏற்புரை"

"குயிலன் நன்றியுரை"

"உங்கள் பங்கு?"

"உங்களோடு இருத்தல்"

என் உள்ளே இருப்பவரும் உடனிருப்பவருமாகிய உங்கள் பங்கு விழாவில் என்ன என்று கேட்டேன்! தவழும் குழந்தையாகிவிட்டீர்கள்.

"மடியில் வேண்டுமானால் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்;"

"நமக்குள் சொல்லிக் கொள்ளலாம்; அவைக்கு ஒப்புமா?" "சரி, எடுபிடி வேலை எல்லாம்;"

"சரி, தட்டை எடுங்கள்; பசிக்கிறது."

"இருவரும் உண்டனர்."

# 14. முத்து விழா

விழா நிகழும் இடத்திற்கு இசைவு பெற்று, முத்து விழாவுக்குரிய தாமரைச் செல்வியார் இசைவு பெற்று, விழாவில் கலந்துகொள்ளும் பெருமக்கள் மூவரிடமும் ஒப்புதல் பெற்று அழைப்பும் அடித்து விழா தொடக்கமானது.

'எடு பிடி என்ற வேள்' நிகழ்நிரல் படி **நீதியரசர்** தலைமை ஏற்பார் என்றும், காவல் துறையரும் கல்வித்துறையரும் வாழ்த்துவர் என்றும், **பனிமலர்** வரவேற்பார் என்றும் கூறிமுடித்து அவர்களை மேடைக்கு அழைத்தார். அவை கை முழங்கியது. முத்து விழாக் கொள்ளும் **தாமரைச் செல்வியரும்** அனைவருக்கும் நன்றி கூறும் செல்வர் **குயிலரும்** பாட்டியும் பேரருமாய் மேடைக்கு வரவேண்டும் என்று கூற அவை முழங்கியது. மேடையில் அனைவரும் அமர்ந்ததும் திருநிறை பனிமலர் வரவேற்பார் என்றார் வேள்.

பனிமலர் ஒலிவாங்கி முன்வந்து அவையோரையும் மேடையில் இருப்பவரையும் வணங்கினார்.

இவ்விழா புகழ்விழா, புகழ்வாய்ந்த மங்கலத்தில், புகழ் வாய்ந்த மங்கல தேவி கண்ணகி கோட்டத்தில் நிகழும் முத்துவிழா;

**முத்து விழா** என்பது எழுபதாம் அகவையில் எடுக்கும் விழா. சங்கில் இருந்து வருவது முத்து. **மென்மணி** அது; தூய **வெண்மணி அது, சுடச் சுடர்வது** அது. அதனைப்போல் வாழும் காரைக்கால் அம்மையாராக வாழ்ந்து கொண்டிருப்பவர் தாமரைக் கண்ணியார். செங்கற்பட்டுத் தாமரைக்குத் தாம்பர மணிமங்கலத்தில் விழா எடுப்பது எவ்வளவு பொருத்தமானது. அவ்விழாவை ஏற்ற அவர்க்கும், தலைமை ஏற்கவும் வாழ்த்தவும் வந்த பெருமக்களுக்கும் பெருந்திரளாகக் கூடியுள்ள அவைப் பெருமக்களுக்கும் நன்றியோடு கூடிய வரவேற்புக் கூறியமைகின்றேன். விழா எடுக்கும் என்னவரைச் சொல்லவில்லை, என்னோடு இருப்பதால் என்றார். அவை பேரொலிசெய்தது. அடுத்து **நீதியரசர்** அவர்கள் விழா நாயகியர்க்குச் சந்தன மாலை அணிவித்து,

முத்தின் அடையாளமாக **வெண்பட்டாடை** போர்த்தித் தலைமையுரையாற்றுவார் என்றார். செவ்வேள்.

"தாமரைச் செல்வியார் ஆசிரியப்பணி செய்தவர். ஆசிரியர்களைத் தெய்வமாகக் கண்ட மண் இது."

"எழுத்தறி வித்தவன் இறைவன் ஆவான்"

என்பது எவரும் அறிந்தது. **கல்வித் தந்தை** ஆவர்; **பண்புத்தாய் அவர்; கற்பிக்கும் குருவர் அவர். வணங்கும் இறைமையுருவர் அவர். அவர் இளமையுளத்தால் முதுமையை வென்றார்.** ஆதலால், குயிலனை ஆழ்ந்தறிந்து ஊட்ட வேண்டிய அறிவுக் களஞ்சியங்களை ஊட்டியுள்ளனர். அவர் வைரம் கண்டு நூறும் காண்பாராக" என்றார்.

அடுத்துக் **காவல் துறை அலுவலர் முத்தரசி அவர்கள்** வாழ்த்துவார்கள், என்றார் வேள்.

"தாமரையாரை வாழ்த்தும்பேறு வாய்த்தது பெரும்பேறு. தாம்பரத்தில் இருந்து செங்கல்பட்டுவரை பார்த்தால் **செம்மலை - செம்மணி**; இதுவோ **மணிமங்கலம்**; நாம் இருப்பதோ" ஒருமாமணியாய் உலகுக்கோங்கிய திருமாமணியாம் **கண்ணகி கோட்டம்**; "இதோ நம் கண் பார்வையில் **இளங்கோ**! இளவயதிலே அரசவாழ்வை நீத்துத் துறவு வாழ்வு பூண்ட பெருமையர். **கண்ணகியாரோ**, சிறுவயதிலேயே பேரறிவு பெற்றவர். பேரறிவனாம் குயிலனை **உலகுக்குக் காட்டிய இவர், வீட்டு விளக்கல்லர். உலக விளக்கு ஆவர். இவர் வாழ்வும் தொண்டும் மேலும் சுடர்வதாக**" என்று வாழ்த்தினார்.

அடுத்துக் **கல்வித்துறைசார் அருள்முருகனார்** வாழ்த்துவார் என்றார் செவ்வேள்.

கல்வித் துறைசார் யான், கல்வித்துறை சார் வீறுடைய தாமரைக் கண்ணியாரை வாழ்த்தும் பேறு பெற்றது மகிழ்வாம். ஒருவர் தம் வாழ்வில், **வேலை கட்டாயம். உண்ணல் பருகல் இல்லாமல் முடியாது**. ஆனால், **அவர்தம் ஓய்வுக் காலத்தைப் பயன்படுத்தும் வகையே அவர்தம் பெருமைக்கு அளவு கோல்.** அவர் குயிலன் இயல்பைக் கூர்ந்து கண்டு தாய்போல் மடியில் போட்டுக் கொண்டு, ஆசிரியை மணியாய்க் கற்பவை கற்கச் செய்து, எண்ணும் எழுத்தும் பண்ணும் பாவும் எனப் **பள்ளியுள் கால்வைக்கும் முன்னரே அறிவுச்**

**செல்வங்களை ஊட்டியவர்.** அந்தப் பெருமையே அவரை விழா நாயகியாய் மேடையில் ஏற்றி இருக்கிறது. அவரைப் போன்றவர் வாழ்வு, உலகம் பெற்றபோது; அவர் நீடு வாழ்வாராக" என்று வாழ்த்தினார்.

ஊடே பனிமலர் எழுந்து வந்து, குயிலுக்குக் கணினி கற்பிக்கும் கனி வந்து வாழ்த்துவார் என்றார். மேடையேறிய கணினிக் கனி, "எதிர்பாராத வாய்ப்பு இது; என்னிடம் கற்கவே வருவர்; **நான் கற்றுக் கொள்ளத் தக்கார் வருவாரா?** ஓடியாடி விளையாடும் பருவத்துக் குயிலன், நான் கற்பிக்கத் தொடங்குமுன் **எனக்கு ஆசிரியர் ஆனான்; அது என் வாழ்வில் கண்ட விந்தையின் விந்தை.** அந்த நிலைக்கு ஆளாக்கிய அம்மை தாமரையார்க்கு முத்து விழா; வயிர விழா நூற்றாண்டு விழா என ஆகுக" என்றார்.

அடுத்துத் **தாமரைக் கண்ணியார்** ஏற்புரை வழங்குவார் என்றார். அவர் ஒலிவாங்கிமுன் வந்ததும் அவை கையொலி செய்தது. அவர், "எதிர்பாரா ஒன்று நிகழ்கிறது; எனக்கு எழுபது ஆனதற்காக விழா இல்லை; குயிலனாம் குழந்தைத் தெய்வம் எனக்குக் கொடுத்த கொடை. அதற்கு அடிப்படையாக இருந்தது **அவனைப்** பெற்ற தாய், என் வீட்டு வேலைக்காக வந்தது. தங்கம் என்றால் **தங்கம்** அவள். அவள் பெற்றபிள்ளை '**வயிரக் கட்டி**' என்பதை இரண்டு வயதளவிலேயே கண்டேன். மழலை வாய்க்குத் தக."

**"பால் பால்!**
என்ன பால்?
**மாட்டுப் பால்!**
என்ன மாடு?
**பசுமாடு!**
என்ன பசு?
**நாட்டுப்பசு!**
என்ன நாடு?
**தமிழ் நாடு!**
என்ன தமிழ்?
**செந்தமிழ்!** "

என்பதைச் சொன்னேன் நான் வாய் மூடவில்லை. அவன், "பால் பால்" எனத் தொடங்கிச் **செந்தமிழ்** என்று முடித்தான். எனக்கு உவப்பானால் உவப்பு. **அந்த ஆற்றல் எனக்கில்லை!** அவன் கையைப் பிடித்துக்

கொண்டு நடந்தேன்! இது என்று **பந்தலைக் காட்டினான்: முல்லைக் கொடி.** இது? **மல்லிகைச் செடி;** இது **"உரோசாப் பூ;" "உங்களைப் போலவும் அம்மாவைப் போலவும் நிறம்;** நடப்பவனைத் தூக்கி மார்பில் போட்டுக் கொண்டு மகிழ்ந்தேன். இது என்ன நிறம்? **பொன்னிறம்** என்றேன். **முல்லை - மல்லிகை - உரோசா - பொன் என்றான்.** விந்தையான பதிவு இவனிடம் உள்ளது எனக் கண்டேன். ஆத்திசூடி தொடங்கினேன். திருக்குறள் முழுதும் மனைப்பொருள் ஆயது. அகவை நான்குக்குள்! பின்னர் **தாயுமானவர்,** வள்ளலார் பாடல்களைச் சொன்னேன். **ஒருமுறை இருமுறை கேட்டால் போதும்** மீளச் சொல்லும் பதிவு; அவனொடு இருக்கும் போது நான் அவனானேன்; எனக்கு, முதுமையை வென்று இளமையாகும் விந்தையைக் காட்டிய தெய்வக் குழந்தை குயிலன். அவனால் பெற்ற பேறு இவ்விழா என்று கூறி, உங்கள் அன்புக்கு மிக நன்றி கூறி விடைபெறுகிறேன்" என்றார்.

செவ்வேள் இவ்விழாத் தூண்டலாக இருந்த **குயிலன்** நன்றி கூறுவான்" என்றார்.

குயிலன் எழுந்ததும் இடைவிடாக் கைெயாலி முழக்கம். "நான் மேடையேறும் வாய்ப்பருளிய பேறு **என் பெற்றோர்க்கு** உண்டு; அடுத்து என்னைக் கண்டு கொண்டு கற்பித்த **தாமரைப் பாட்டிக்கு** உண்டு."

எங்கள் நிலையை அறிந்து தங்கள் குடும்பத்தவராகக் கொண்ட என் தெய்வத் தாய் தந்தை **பனிமலர் செவ்வேள்** அவர்களுக்கு உண்டு. தாயாய் உறவாடி கணினிபயில்வோனாய் ஏற்று, ஆண்டுக்கணக்கு பயிலும் பயிற்சியை, **ஒரு திங்கள் அளவில் ஊட்டிய** அருமை, அம்மை கனி அவர்களுக்கு உண்டு. எவர் தூண்டலும் வேண்டலும் இல்லாமல் முத்து விழாத் திட்டம் மேற்கொண்ட செவ்வேள் அப்பாவை முழுதுறப் பாராட்டும் கடமையுண்டு. எத்தகு பெருமக்கள் தலைமை, வாழ்த்து, கூடிய சுவை, அனைவரையும் பணிவதல்லாமல் சொல்லால் முழக்க அறியேன். **இது என் அருமைப் பாட்டிக்கு விழாவா எனக்கும் சேர்த்த விழாவா - உங்கள் முடிவுக்கே விட்டுவிட்டு என் நன்றியுரையை நிறைவு செய்கின்றேன்,** என்றான் குயிலன்.

பனிமொழியார் அனைவர்க்கும் உணவு உண்டு. உண்டு செல்க என்று கூட்டத்தை நிறைவு செய்தார்.

☙ ♦ ❧

# 15. இது சரியா?

ஒரு மாத அளவில் குயிலன் கணினித் திறம் பெற்றான். இனி அவனே படிப்படியே பலவகை நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வான் என்ற நிறைவில், கனி, பனிமலரைப் பார்க்க வந்தார்.

"என்ன கனி?" என்றார்

"குயில் கணினியில் கற்க வேண்டுவ கற்றுக் கொண்டான். இனி, அவனே கற்பிக்கவும் திறம் பெற்றுவிட்டான். அவனை நான் பயில வருவார்க்குப் பயிற்சி தருபவனாக வைத்துக் கொள்ளலாமா? எனக் கேட்க வந்தேன். **அவனை விட்டுப் பிரிய மனமில்லை. அவனிடம் யான் கற்றுக் கொள்ள வேண்டியவை உண்டு**" என்றார்.

"**அங்கே கற்ற இளைஞன்; அங்கேயே கற்பிப்பவனாக இருப்பது தகுமா**? எனச் சிந்திக்க வேண்டியுள்ளது. நான், அவன் தாய், என் துணைவர், பாட்டி தாமரை ஆகியோரிடம் கலந்து கொண்டே முடிவு செய்ய வேண்டும்; அவனுக்குக் கணினியை ஒரு மாதத்தில் தந்துவிட்ட உங்களைப் பாராட்டச் சொல் இல்லை;"

பெற்ற பிள்ளையாய் உடன் வைத்து, உணவு தந்து, எக்கட்டணமும் வாங்காமல் பயிற்சியும் தந்த உங்களுக்கு இணை நீங்களே; என்றார்.

தலை நாணிய 'கனி' **ஒருவாரம் கழித்து வருகிறேன். நல்ல முடிவு சொல்லுங்கள் என்றார்.** அவர் போனபின், பனியிடம் "**முதலாவது குயிலனை அல்லவா கேட்க வேண்டும்**" என்றார் வேள். ஆமாம்! அவன்தானே போவதா வேண்டாமா என முடிவு செய்ய வேண்டியவன்.

ஓய்வில் கேட்கலாம் எனத் தங்கள் கடமைகளில் ஈடுபட்டனர். பொன், பனி-மருத்துவமனை போயினர். வேள், கட்டட வேலையைப் பார்க்கச் சென்றார்.

விழாவை முன்னிட்டுப் பலநாள்கள் மேற்பார்வையர் பொறுப்பிலே தானே நடந்தது !

**வெள்ளியும் குயிலனும் வீட்டில் இருந்தனர்.** பனிமலர் தந்தையார் தமிழாசிரியராக இருந்தவர். அவர் சேமித்த - எழுதிய நூல்கள் இருந்தன. அவற்றை ஒரு பேழையில் வரிசையுற வைத்து நூற்பெயர் அட்டவணையும் இட்டு வைத்திருந்தார். அப்படியே ஊடே ஊடே தூய்மைப்படுத்தி வைத்திருந்தார். செவ்வேளுக்கும் ஈடுபாடு இருந்ததால் அவர் துறை நூல்களும் கதை நூல்களும் அங்கே ஓர் அடுக்கில் இருந்தன.

மருத்துவ நூலகள் பனிமலர் பயின்றவை, மருத்துவஇதழ்கள் என இருந்தன.

வெள்ளிக்கு உள்ளே கூட்டுதல் கழுவுதல் துடைத்தல் இருந்தாலும், பேழையில் இருந்த நூல்களைப் பற்றி அறியாள். குயிலன் மேல்தட்டைத் தொட்டான். "**தொல்காப்பிய மூலம்**" என ஒரு நூல் இருந்தது.

அப்படி ஒருநூலை அவன் கண்ணால் கண்டது இதுவரை இல்லை. தாமரைப்பாட்டியும் சொல்லவில்லை.

**அதனை எடுத்துப் படித்தான்.**

அவன் தமிழ் படிக்கத் தெரிந்தவன் தானே. அதனால், நூலைத் திருப்பினான்.

**எழுத்ததிகாரம்** என இருந்தது.

முதலாவதாக,

"எழுத்தெனப் படுப
அகரமுதல் கைர இறுவாய்
முப்பஃதென்ப
சார்ந்து வரல்மரபின் மூன்றலங் கடையே"

என்றிருந்ததைப் படித்தான். இரண்டு மூன்று முறை படிக்கவும் மனனம் ஆகிவிட்டது. ஆனால் பொருள் புரியவில்லை; பாட்டி நினைவு வந்தது. அவர் உடனிருந்தால் பொருள் கூறுவார் என நினைத்தான்.

சரி, மனப்பாடம் செய்வோம் என எடுத்தான். போகப் போகத் தொடர்ச்சி இருந்தது. வாய்த்த போது படிக்கலாம். **அம்மா வந்ததும் கேட்டு எடுத்துக் கொள்ளலாம்** என எடுத்த இடத்தில் நூலை வைத்தான். வெள்ளியோடு சேர்ந்து வேலை பார்த்தான். எதிலும் தலையிடாத வெள்ளி, குயில் பாடுவதை காது கொடுத்துக் கேட்கத் தொடங்கினாள். **அப்பொழுது எவரொடும் ஒட்டாத தான் குயிலோடு ஒட்டுதலாவதை உணர்ந்தாள்.** குயிலன் வயதில், தன் பிள்ளை இரண்டாம் வகுப்புப் படிப்பதை எண்ணினாள். அப் படிப்புக்குச் செலவிடும் தொகையையும் எண்ணாமல் இருக்க முடியவில்லை.

பனிமலர்க்குக் கனியிடம் இருந்து தொலைப் பேசிச் செய்திவந்து, "எனக்காகக் குயிலை என்னிடம் ஒரு கால் மணி இருக்க உதவினால் மிக நன்றியுடைவளாக இருப்பேன்"

பனிக்கு வேலை முடியும் நேரம். பொன்னை, மருத்துவமனையில் இருக்கச் சொல்லிவிட்டுக் குயிலை வரச் செய்து, **தம் வண்டியில் கனியிடம் சென்றார்.**

"இங்குப் பயில்வார் **குயில் வரவில்லையா, வரவில்லையா என்று கேட்கின்றனர். நானும் குயிலொடு நண்பகல் உண்பதை அல்லாமல் இரவும் காலையும் தனியே உண்ண முடியவில்லை; நண்பகலும் உண்ணாவிட்டால்;"**

"புரிகிறது; உணவை முடித்து உடன் குயிலை வீட்டுக்கு அனுப்பி வையுங்கள்; **இம்முறை சரியானதில்லை; மறக்க முயலுங்கள்; நண்பகல் உணவை உண்ணுங்கள்**; உங்கள் பழைய இயல்புக்கு வாருங்கள்" என்று சொல்லிவிட்டுப் பனிமலர் வந்து, பொன்னை அழைத்துக் கொண்டு வீடு வந்தார். சொல்லியபடி கனி உணவை முடித்துக் குயிலைத் தன் வண்டியில் வைத்துக் கொண்டு பனிமலர் வீட்டில் விட்டு நன்றி சொல்லித் திரும்பினாள்.

"நாம் குயிலை ஊடுவைத்து உண்ணாத்துயர் கனியையும் பற்றிக் கொண்டுவிட்டது. **இம்முறை சரியா?"** என்றார் பனி.

௸ ♦ ௐ

# 16. வாய் பேசவில்லை

"குயில் வா, உண்ணலாம் " என்றார் பனி.

"உண்ண முடியா அளவு உண்டு விட்டேன்; உங்கள் ஊடே இருந்து உங்களுக்கு ஊட்டுகிறேன்" என்றான்.

அவனே சோற்றைப் பிசைந்து என் அம்மா மூத்த குழந்தை. வாயைத் திறங்கள் என்று ஊட்டினான். அப்பா நீங்களும் அப்படித்தான் 'ஆ காட்டுங்கள்' என்று ஊட்டினான்.

"குயில் உன்னோடு மாதக்கணக்கில் உண்ணவில்லை, நீ ஒருவாய் வாங்கிக் கொள் என்று சிறிது சிறிதாக இருவரும் ஊட்டினர்."

"நாங்களே ஒன்றிய அன்பில் உடனுண்டோம். நீ வந்தபின் நீ இல்லாமல் உண்ண ஒவ்வவில்லை. **ஈருயிர்கள் ஓருயிராக இருந்தாலும், அவற்றின் உயிருக்கு உயிராம் ஒருயிர் வேண்டும் என்பதை உணர்த்தியவன் நீ. காலம் கடந்து உண்டாகிய அறிவு இது"** என்றார்.

குயிலன் தலைகவிழ்ந்து கொண்டு வந்தவன், அவர்கள் இருவரும் படுக்கும் கட்டிலில் இடையே படுத்திருந்தான். பொன்னும் வேளும் இருபாலும் படுக்க இடம் விட்டிருந்தான். குறிப்புணர்ந்த அவர்கள் இருபாலும் படுத்தனர்.

**"மறியிடைக் கிடந்த மான்"**

- பனிமலர் செவ்வேள் நினைவில் நின்றது.

சிறிது நேரம் கழித்து பனியும் வேளும் எழக், குயிலும் எழுந்தான்.

**"அம்மா அப்பா நான் செய்தது சரியா?"**

**"மிகச் சரி;"**

**"இல்லை; இல்லை; உங்கள் பிரியா அன்பைப் பிரித்த பாவி இல்லையா?"**

"என்ன குயில் இப்படிச் சொல்கிறாய். உன்னை நாங்கள் பெற்றிருந்தால்?"

"என்னைப் பெற்றவர்கள் இடையே ஒருநாள் – ஒருமணித் துளிப் போது கூடப் படுத்தறியாப் பாவிநான்; என்னைமடியில் கிடத்தி, யானும் பாடப்பாடச் செய்த பாட்டிக்கு அமைதி தந்தேனா? அவர் ஊணும் உறக்கமும் கெடுக்கத்தானே செய்தேன்;

"ஒரே ஒரு மாதத் தொடர்புடைய கனியம்மை என்னோடு நடுப்பகல் உண்பதை அன்றிக் காலையும் இரவும் உணவு நீத்து மெலியத்தானே செய்தேன்."

"என் பெற்ற தாயையும், தந்தையையும் என்னால் அமைந்து வாழக் காண முடியவில்லையே!"

"ஒரே ஒருத்தி; கணினி படித்துக் கொண்டிருந்தவள்; இனியள் என்னை எட்டி எட்டி, எத்தனை முறை பார்ப்பாள்; "நீ சொல்லிக் கொடு, நீ சொல்லிக் கொடு" என்று என் கன்னத்தைத் தடவிக் கேட்டிருப்பாள்; அவள் வந்து என்னைக் காணாமல் "ஓ" எனக் கத்திவிட்டுக் கணினி கற்க வரமாட்டேன், என் குயிலனைக் "காணவில்லை" என்றதும், கனியின் கன்னத்தில் அறைந்ததாக இருந்ததாமே!

கனி காட்டும் கனிவைக் கண்டு சொக்கிப் போனால், இனியள் காட்டும் ஏக்கத்தை உணர்ந்து போற்றினால், அப்பா அம்மா, உங்களையும் என்னைப் பெற்ற தாயையும், எப்போதாவது காணவாய்க்கும் பாட்டியையும் முழுவதாக இழந்தே போக நேரும்!

எனக்கு ஒரு காட்சி நினைவுக்கு வருகிறது. பாட்டி வீட்டில் ஒரு பசு! அதற்குப் பால் குடிகன்று, கன்று வந்து பால் குடிக்கும் போது அதன்முதுகை அன்பால் நக்கும். குடித்து முடிக்கும் வரை நக்குதலை விடாது. பசு நக்குதலால் முதுகின் மயிர் போயது கன்றுக்கு. தோல் புண்ணாயது; சீழும் வழிந்தது; அந்த ஐந்தறிவு உயிரின் அன்புத் துயரைக் கண்டேன்! தடுக்க முடியவில்லை, யான் கண்ணீர் விடுக்கவே முடிந்தது. பாட்டி, பசுவுக்கு ஒரு வாய்க்கூடு கட்டினார். மேலும் கேடே ஆயது. கழுத்தைத் திருப்பாமல் இருக்க பால் கறவைக் காரர் பசுவின் கழுத்தில்

முக்கவட்டைக் கம்பு கட்டினார். கன்றின் புண்ணுக்கு மருந்து போட்டு ஆற்றினார்.

எந்த ஒன்றற்கும் அளவு வேண்டும்;

கனி, இனியள் பக்கம் போகேன்;

உங்கள் இடையே வாரேன்;

பாட்டியும் தெளிவாகிவிட்டதால், கவலை இல்லை. அம்மாவும் அமைந்துவிட்டார். எனக்குக் கிடையாத வாய்ப்புக் கிடைத்தது என்று!

எனக்கு வாழ்வு தந்தவர்கள் - தருபவர்கள் - தரப்போகின்றவர்கள் உங்களைப் பிரியாமல் இருக்க, நீங்கள் இருவரும் என்மேல் அன்பைக் குறைத்து, உங்கள் இருவர் அன்பைப் பெருக்கிக் கொள்வதே; எந்த ஒன்றிலும் ஈடுபாடு காட்டாத வெள்ளியே நேற்றும் இன்றும், வீட்டுக்குப் போக உருகினார் என்றான். இருவரும் தலை தாழ்ந்து சிந்தித்தனரே அல்லாமல் வாய்பேசவில்லை.

# 17. சிக்கெனப் பிடித்தேன்

அவனை அமைதிப்படுத்தி, அவனாக இருக்க என்ன செய்யலாம் என எண்ணினர்.

குயிலன் வந்தான். "அம்மா, அப்பா பெயர் **செவ்வியனா?**"

"ஆம்"

"வெள்ளி துடைக்கும்போது, அறைக்குள் வந்தேன். புத்தகப் பேழை இருந்தது. அருமையாக அட்டையிட்டு தூய்மையாக இருந்தது. மேல் தட்டின் முதல் நூலை எடுத்தேன். அதில் பெயர் **செவ்வியன்** என்றிருந்தது. தாத்தா பெயர்தான் என எண்ணினேன். அந்த நூல் **தொல்காப்பிய மூலம்**" என்றான்.

"ஆம், நீ சொல்வது சரிதான்! அவருக்குச் சரியான பேரன் ஒருவன் கிடைப்பான் இப்படி என அறியார். அதைத் தொட்டுப் பார்த்த முதல்வன் நீ என்றார்."

திருக்குறளைப் போல,

"எழுத்தெனப் படுப

அகரமுதல் னகர இறுவாய்"

எனத் தொடங்குகிறது. உங்களிடம் கேட்டுக் கொண்டு எடுக்கலாம் என வைத்து விட்டேன் என்றான். "ஏன் என்னிடம் கேட்க வேண்டும்? அவ்வளவும் உன் நூல்கள் தாமே!"

"இப்பொழுது அதைமட்டும் எடுத்துக் கொள்கிறேன் என்றான். குயில் நீயே எந்தத் தமிழ் நூலையும் படித்துக் கொள்ளலாம். ஆங்கிலம் நாம் பார்த்த பேராசிரியர் வில்லியம் அவர்களிடம் கற்கிறாயா?"

"ஏன் நான் உங்களை விட்டு விட்டு வெளிநாடு போகப் போகிறேனா? கனியிடத்திற்கே போகக் கூடாது என எண்ணும் நான் கடல்கடந்த நாடுகளுக்கு வேலை தேடிப் போவேனா? நீங்கள்

வெளிநாட்டுக்குச் சுற்றுலாச் சென்றால் நான் உங்களோடு வருவேன். வேலைக்குப் போகேன்;"

"வில்லியப் பேராசிரியரும், இங்கேயே தங்கிப்படி என்றால்.. அதனை நலமாகக் கொள்வேன்."

**"நீங்கள் நீங்களாக மாற, அந்தக் கடுமருந்து வேண்டும் பொழுது இது."**

"எண்ணித்தான் சொல்கிறாயா?"

"திட்டவட்டமாக எண்ணித்தான் நான் சொல்கிறேன்."

**"இடைவெளியில்லா உங்கள் அன்பு தொடர அந்த இடைவெளி தேவை!"**

"என்ன குயில்?"

**"நீங்கள் கூடியிருந்தவர்கள்; நான் ஊடுவந்தவன்;"**

"இனி அப்படி எண்ணாதே"

"எப்படி எண்ணுவது?"

**"இளைய இனியள்; என்னைக் காணாமல் கணினி கற்காமலே போய் விட்டாள்?"**

குயில் நீ கனிக்கு மட்டும் ஆசிரியன் இல்லை. **"எனக்கு வயதாகும் போது? அவள் பக்கம் சரிந்தால்? எங்களுக்கும் ஆசிரியன் தான்;"**

"நான் சிறுவன்! ஆனால் என்னுள் என்னென்னவோ தோன்றுகின்றன;" அதை ஒளிவுமறைவு இல்லாமல் சொல்கிறேன்.

"என், அம்மையப்பனாக என்றும் நீங்கள் இருக்க வேண்டும்; அந்த ஒன்றே என் வேண்டுதல்."

"அதற்கு ஏதாவது குறைவாகும் என்கிறாயா?"

"யாரறிவார்? நீங்கள்தான் அறிய வேண்டும்."

"ஆங்கிலத்தாள் வருகிறது. ஆங்கில நூல்கள் உள்ளன. நீங்கள்

இருவரும் ஆங்கிலம் அறிந்தவர்கள் தாமே."

"உங்கள் இருவருக்கும் இடையே என்னை வைத்துக் கொண்டு எனக்கு ஓர் அரைமணி நேரம் செலவிடுங்களேன். **வில்லியம் அவர்களைத் தாமரைப் பாட்டி போல் கவலைக்கு ஆளாக்க விரும்பவில்லை;"**

"பெரிய திட்டம்; அரிய திட்டம்; உரிய உயரிய திட்டம்; "

**"எங்களுக்குப் புரியவில்லை;"**

"புரியாமல் இல்லை; என்மேல் வைத்த பாசம் தான் தடை; குயில் இன்று முதல் அம்மாவும் நானும் வேலை முடித்து வந்ததும் மூவரும் அமர்வோம்; இருவர் காலையும் தொடக்குனிந்தான். இருவரும் அவன் கையைப் பற்றினர்; அவன் பாடினான்;"

"பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ
பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
**எங்கெழுந் தருளுவ தினியே!"**

பலகணிப்பக்கம் நின்று அழுது கொண்டிருந்தது பொன் தெய்வம்! உள்ளே கண்ணீர் சொட்டிக் கொண்டிருந்தனர் பனியும் வேளும்;

ஆண்டுகள் பலகடந்தன; பொன்னொளிர் காளையாகப் பொலிந்தான் குயில். தொடர்ந்து ஆங்கிலம் கற்றான்! சேக்சுபியர் நாடகத்தில் **ஒதெல்லோ** என்பது ஒன்று, அதனை முழுவதாக உள்வாங்கினான்!

"நாம் வில்லியம் பேராசிரியரிடம் படிக்கப் போக வேண்டாம்; பார்க்கப் போகலாம் அல்லவா என்றார் வேள்."

"தாராளமாக என்றான் குயில்."

ஃ ♦ ஃ

# 18. இயற்கைப் பாடம்

பேராசிரியர் மிகத்தளர்ந்திருந்தார். துணைக்கு ஒருவர் இருந்தார். ஒருவர் துணையில்லாமல் இயங்க முடியாத் தொண்டு கிழமாக இருந்தார். ஆயினும் மூளைக் கொழுமை மாறவில்லை!

அவர் வீட்டை அடைந்த வேளும், குயிலும், அவரை வணங்கினர். "செவ்வேள் நலமா? உன்னோடு முன்னே வந்த **குயிலன்** இவன் இல்லையா? நன்றாக வளர்ந்து விட்டான்."

"ஆம் ஐயா!"

"என்ன செய்தாய்!"

"கணினியில் சேர்த்தேன்! ஒரு மாதத்தில் கற்றுக் கொண்டான். திருக்குறள் மனப்பாடம் முழுவதாகச் செய்த அவன். தொல்காப்பியத்தையும் மனப்பாடம் ஆக்கிவிட்டான். தாய்மொழி ஆதலால், உரை விளக்கமும் அறிந்து கொண்டான். "

"ஆங்கிலம் படிக்க ஆர்வம் கொண்டான். சேக்சுபியரின் நாடகத்தொகுப்பு முழுவதாகச் செய்யப்பட்டதைத் தொடங்கிச் சில நாடகங்களை மனனம் ஆக்கிவிட்டான். நீங்கள் **ஓதெல்லோ** நாடகம் நடத்தியதும், **அண்டொனி உரைவீச்சும்** இன்றும் அகலாமல் உள்ளது; உங்களிடம் சொல்லி வாழ்த்துப் பெற விரும்பி அழைத்துக் கொண்டு வந்தேன்" என மகிழ்ந்தார்.

அவர் இருந்த இருக்கைப் பக்கம் அழைத்து, 'சொல்' என்றார். தட்டுத்தடங்கல் இல்லாமல் முழுதுறச் சொல்லிமுடிக்க வியப்பிலும் வியப்புற்று; நான் ஆங்கிலப் பேராசிரியன். பாடம் உணர்வொடு நடத்தினேன். **என்கையில் புத்தகம் இருந்தது; இவனுக்கு இவன் நெஞ்சகமே புத்தகமாக உள்ளது. இவனைப்பாராட்டச் சொல் இல்லை; வாழ்த்துகிறேன்;**

ஆங்கிலேயருள் **விவிலியத்தைக்** கவனகம் செய்வார் உண்டு. சேக்சுபியரை இப்படிச் சொல்வார் உண்டா என்பதை அறியேன்! ஒரே ஒரு கருத்து! உனக்குத் தொழில் வளம் நன்றாக உள்ளது அல்லவா; உன்

துணைவி பனிமலர் இல்லையா? "ஆம் ஐயா; அவர் தொழிலும் வளமான தொழில்தானே;"

"ஆம்"

ஒரு குறித்த வயதில் தேடியதுபோதும் என்று முடிவு செய்து, இங்கிலாந்து - அமெரிக்கா - கனடா முதலிய நாடுகளுக்குச் சென்று ஆங்கில நினைவாற்றலால் அவர்களை வயப்படுத்தித் திருக்குறளைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் கவனகம் செய்யலாம்; பொழிவாற்றலாம்; நாடுகாண் நோக்கம் இல்லை; நம் நாட்டையும் நம் மொழி அருமையையும் ஆங்கிலேயர் அறிந்து பரப்பியதால் தானே உலகறிந்தது; அதனை நாமே செய்வதாக மேற்கொண்டால், உலகெலாம் வாழும் தமிழர்க்குத் தமிழர் பெருமை புரியுமே! மற்றவர்களுக்கும் புரியுமே! நான் ஆங்கிலப் பேராசிரியன். ஆனால், என் பிறவி தமிழ்ப்பிறவி; கல்லூரி அளவுக்குப் பயன்பட்டேன்! இவனும் தமிழ்ப்பிறவி, தமிழை உலக அரங்குக்குக் கொண்டு செல்லும் அல்லவா!

ஆமாம் , இவனுக்குத் திருமணம் ஆயிற்றா!

"ஆக வேண்டும்!"

"ஆகி நீயும் உன்துணையும் இவனும் இவன் துணையும் என நால்வராய்ச் செல்லலாமே!"

"செவ்வேள்"

"ஐயா"

"ஒரு நல்ல செய்தி"

"தமிழன் இந்த மண்ணை விட்டு அயல் மண்ணுக்குப் போனால் தான், இந்த மண்ணின் - மொழியின் - இனத்தின் பற்றுடையவனாக இருக்கிறான். ஆதலால், உங்கள் செலவு, பொருட் செலவுக்கும் ஆக்கிவிடாது! ஓர் ஆங்கிலப் பேராசிரியர்க்கு இந்த இனமொழிப் பற்றா என நினைக்க மாட்டாய்!"

ஏனென்றால், நீ செயலனாக இருந்த **தமிழ்மன்றத்தைத் தொடங்கி வைத்தவன் நான்தானே!** அப்பொழுது நான் சொன்னது நன்றாக இன்றும் நினைவில் உள்ளது. "தமிழில் படி, தமிழில் எழுது – தமிழே சிந்தனையில் உணர்வில் உயிரில் பதிந்தது; அதன்பின் உலகத் தொடர்புக்கு ஆங்கிலம் படி: தொழில் திறத்திற்கு வேலையே அல்லாமல், மொழித் திறமைக்கு வேலை இல்லை. மொழி ஒருவனை படைப்பாளி ஆக்கி விடாது; கதை கட்டுரை பாடல் எனப் படைக்குமே அன்றி, வேறு அறிவியல் பொறியியல் மருத்துவஇயல் என்பவற்றைக் கண்டுபிடிக்கும் திறத்தை மொழி தந்து விடாது. நான் ஆங்கிலப் பேராசிரியன். ஒரு குண்டூசி படைக்க முடியுமா? என்று அன்றே தமிழவையில் கூறினேன்."

"பசுமையாக நினைவுள்ளது ஐயா!"

"என்னைப் பார்க்க வந்ததற்கும் இந்த முதுமையில் இளமை இன்பத்தை ஊட்டியதற்கும் நன்றி. பனிமலரிடம் நான் கேட்டதாகச் சொல்" என்றார்.

வேளும் குயிலும் வணங்கிப் புறப்பட்டனர். குயில் சிந்தனையில் ஆழ்ந்தான்;

"என்ன குயில்" என்றார்.

"திருமணம் துணை – என ஏன் சொன்னார்?"

**குயில், இருசிறகு இல்லாமல் குயில் பறக்குமா? இயற்கைப் பாடம் இல்லையா?** என்றார் வேள்.

௸♦௵

# 19. கூடும் கூடும்

பனிமலர் வீட்டில் இருந்தார். ஆவலாக நோக்கினார். "பேராசிரியர் வில்லியம் நலமாக உள்ளார். முதுமைத் தளர்ச்சி மிகுதி. உங்கள் பெயரைச் சொல்லி நலமா என்கிறார்."

"நம் திருமணத்திற்கு வந்து வாழ்த்தியவர்."

"குயிலன் ஒதெல்லோவைச் சொல்ல வியந்து போனார். பிறகு பேசலாம்" என்றார்.

"குயிலன் அம்மாவைப் பார்க்கப் போனான். இருவரும் குயில் கூறியது போல் ஊடு இல்லாமல் கூடி உண்டனர்;"

"ஏதோ இழந்தது போல் தோன்றினாலும், ஏற்கத் தக்கதை ஏற்றுத் தானே ஆக வேண்டும்" என்றார் வேள்.

செய்தித்தாளில் **மொட்டையனுக்கு வாழ்நாள் கடுங்காவல், நல்லையனுக்கு விடுதலை**, என்பது தலைப்புச் செய்தி. மொட்டையன் முன்னமே திட்டமிட்டுப் பணத்தின் ஒரு பகுதியை வேறிரண்டு பேரிடம் தன் தொழில் முத்திரையில் செய்ய வைத்திருக்கிறான் என்பதும், அவன் சிறைக்குள் இருந்தாலும் தொழிலும் தொகையும் முடக்கப்பட்டாலும் தடையில்லாமல் தொழில் நடந்து கொண்டே இருந்திருக்கிறது என்பது கண்டுபிடிக்கப்பட்டதால் அச் சொத்துகளையும் முடக்கி அவனுக்காகத் தொழில் செய்தவர்களையும் குற்றக் கூண்டில் நிறுத்திப் புழல் சிறையில் அடைத்தனர்.

நல்லையாவின் நன்னடத்தையாலும், அவனுக்கும் பின்னே நடத்தப்பட்ட தொழிலுக்கும் எத்தொடர்பும் இல்லாமையாலும் விடுதலை செய்யப்பட்டார், என்ற செய்தி வந்தது.

குயிலனும் பொன்னும் அறிந்தனர். முன்னால் ஏற்பட்ட துயரம் அடுக்கடுக்காக வெளிப்பட எப்பொழுது இங்கு வந்து நிற்பாரோ என்ற கவலை பொன்னம்மைக்கு உண்டாயது. குயிலன் அப்பொழுது இளையவன் ஆதலால் மகிழ்வோ கவலையோ கொள்ளவில்லை; அவன்

கவலை பேராசிரியர் வாழ்த்தொடு 'திருமணம்' செய்து கொண்டு என்றது சிக்கலாக இருந்தது. **கனியும் இனியளும் கனவுபோல் கருத்தில் நின்றனர்.**

"வந்தால் – இருக்கும் இடம் தெரிந்து வந்தால் – பொன்னி என்ன செய்யப்போகிறாளோ என வேளும் மலரும் எண்ணினர்."

"தொடரிக்குத் தண்டவாளம் உண்டு; சந்திப்பு உண்டு; விலகிச் செல்லும் வழியுண்டு. வானூர்திக்கும் தடமில்லாத் தடமுண்டு. வாழ்க்கைக்கு எந்தத் தடமும் போடப்படவில்லையே! போடப்பட்ட தடத்தில் போகவிடாத் தடைகளும் உண்டே" என்று நினைக்கப் பொன்னி கவலையுடன் வந்தாள். பொன்னி, "சிறைக்குச் சென்றதும் கவலை; சிறை மீண்டதும் கவலை; முள்ளைமுள்ளால் எடுப்பது போல், முரணை முரணால் தான் தீர்த்தாக வேண்டும். நாம் கவலைப்படுதல் தீர்வாகாது: எங்கள் பார்வை, **சிக்கல் வருமுன்னே சிக்கலை எண்ணிச் சீர்கெட வேண்டாவே! எங்கள் பொறுப்பில் உள்ளாய். எங்களை மீறி உனக்கு எதுவும் வந்துவிடாது"** என்று எண்ணி நீ அமைதி அடையலாம் அல்லவா; **அலை வருமுன்னே தலைபோனது போல் தவிப்பானேன்;** உன் கவலை குயிலை அசைக்கும் அல்லவா" என்று கூற வாய்பேசாது வந்தவள்.

வந்தால் மருதி வழியாகவோ, திண்டிவனம் செல்வி வழியாகவோ தான் வருவார். செல்வியை அவரறியார். மருதியை அறிவார் என்றாள். அஞ்சல் பெட்டியில் ஒருவர் ஓர் அஞ்சலைப் போட்டுச் சென்றார். அவர் அஞ்சல்காரர் அல்லர்; தலை மொட்டை; தாடி; குல்லா என இருந்தார்.

கருப்பாயிக்கு, நல்லவனாக இருந்து பொல்லாதவனாக மாறித் திரும்ப நல்லையாவாக மாறியிருக்கும் உன் கணவன் எழுதுவது; நான் செங்கல்பட்டிற்குப் போகேன். சிறை சென்று வந்த நான் எவர் கண்ணிலும் பொல்லாதவனாகவே தோற்றம் தருவேன். உனக்கே அல்லாமல், பச்சிளம் பாலனாம் குயிலனுக்கும், உங்களைக் காத்து வந்த தாமரைக் கண்ணியார்க்கும் யான் உண்டாக்கிய கேடு **செந்தட்டிச் செடிபட்டதுபோல் விடாத அரிப்பாக உள்ளது.** ஒரே ஒருமுறை பார்த்து விட்டுக் கண்காணா ஓர் இடத்திற்குப் போய்விடுவேன். நாளைக் காலை

இதேபொழுதில் இதே கோலத்தில் வருவேன். **குற்றம் உணர்ந்த நல்லையா.** வேள் - மலர் - பொன் - மூவரும் எண்ணினார். மருதி காஞ்சிபுரம் மாறி வந்திருக்கிறார். அவரைக் கண்டே இங்கு வந்திருக்கிறார். இது தனிப்பட்ட வரவு; சட்டப்படியான துறை வருகை இல்லை. நல்லையா வந்தால் என்ன செய்வது? என்றார்.

பனிமலர் வேள் மருதி மூவரும் மாடி வாரத்திற்குச் சென்றனர். நாம் இருவரும் கலந்துபேசி பொன்னி பெயரால் திங்களுக்கு ஐயாயிரம் போட்டோம். அது பத்திலக்கம் வரை இருக்கலாம். ஓரிலக்கம் தந்து எங்காவதுபோய் ஒருபெட்டிக் கடை போட்டு வாழச் சொல்லலாம். பொன்னி தலை காட்ட வேண்டா. குயிலுக்கும் தெரிவிக்க வேண்டா. நாமும் சந்திக்க வேண்டுவதில்லை. **என் இளந்தோழி மருதியே இதைச் செய்து அறக்கடன் புரிய வேண்டும்"** என்றார்.

மருதி, உங்கள் செயல் பெரிது. இதனையும் சிறிதுபொழுது இருந்து குல்லா தாடியுடன் வரும் அவரை அப்படியே அழைத்துச் சென்று நல்வழிகாட்டுங்கள். கருப்பாயி ஆகிய பொன்னம்மை கவலையில் மூழ்கியுள்ளாள், என்றார்.

சொல்லியபடியே நல்லையா குல்லாவுடன் வந்தார். தான் ஆவலாக எதிர்பார்த்த கருப்பாயியோ குயிலனோ இல்லாமல் மருதி மட்டுமே வாயில்புறம் நின்று வரக் கண்டார். மருதி முன்னே வந்து நல்லையாவை அழைத்துக் கொண்டு சென்று செய்தியை உரைத்து, எங்காவது எட்டாத் தொலைவு சென்று கடைவைத்துக் கொண்டு வாழ ஓரிலக்கம் தந்தனர்" என்றார்.

நான் சிறைச் சாலையில் செய்த வேலைக்காக ஒரு தொகை தந்துள்ளனர். அது என் பிழைப்புக்கு உதவும். தொகை எதுவும் வேண்டா. அவர்களிடமே தந்துவிடுங்கள்! உங்கள் உயர் தொண்டுக்கு நன்றி.

ஒன்று: **ஒருவன் சூழலால் கெட்டவனாகிப் பின்னர்த் திருந்தினாலும் அவனைக் கெட்டவனாகவே, உரிமை உறவும் கொள்கிறது. இனி, நாளெல்லாம் நல்லையாவாகவே வாழ்வேன்; சூடுபோட்டவன் சூடுபட்டவனாகப் போகிறேன்"** என்று கூறித் திரும்பிப்

பாராமல் போய்விட்டார்". முன்னிருந்த முகம் மாறி இருப்பது பனிமலர்க்குப் புலப்பட்டது. **நல்லையா சொல்லிய சொற்கள் குடைய, அதைப் பனிமலரிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.** அப்பொழுது கணினிக் கனி அங்கே வந்தார்.

மருதி சற்றே நில்லுங்கள். இவரும் உங்களைப் போல் என் இளந்தோழி, கணினிப் பயிற்றகம் வைத்துள்ளார். கனி என்பது பெயர். என இருவரும் வணக்கமிட்டனர். அம்மா இனியளை நினைவு இருக்கிறதல்லவா; குயிலன் வரவில்லையா வரவில்லையா என "ஓ" என்று கதறி வெளியேறினாள். கணினிப் பயிற்சிக்கு வரவே இல்லை என்றீர்களே அவள்தானே!

"ஆம் அவள்தான்: அவள் விடுத்த கடிதம் பாருங்கள் என்றார்."

ஆவலோடு வாங்கிய பனிமலர் படித்தார்! என்ன கொடுமை! பெற்றவர்களே தம்பிள்ளைகளைப் படுத்தும் கொடுமை **பழைய காட்டு விலங்கு வாழ்க்கை மேல் என்று** ஆக்குகிறது என்று, இது மருதியார் பார்வைக்குரியது என்று கடிதத்தைத் தந்தார்.

☙♦❧

# 20. வாய் திறந்தது வழி திறந்தது

மருதி கடிதத்தைப் படித்தார். "என்னை மகளாகப் போற்றிய கனியம்மா, வணக்கம். ஊடே கணினியை விட்டு வெளியேறிய **இனியளாகிய யான், வீட்டுச் சிறைக்குள் அடைக்கப்பட்டுள்ளேன்.** என் தலை மொட்டையடிக்கப்பட்டுள்ளது. கட்டிய உடைக்கு மாற்றும் இல்லை. நாய்க்கு வட்டியில் கஞ்சி ஊற்றுவது போல் உணவு!"

ஏனென்றால், என்னை வலுக்கட்டாயமாக ஒருவனுக்கு மணம் செய்து கொள்ள வலியுறுத்தினார் என் தாய். "நான் மணமெனக் கொண்டால் **குயிலனையே மணப்பேன்;** வேறு எவரையும் மணவேன்" என்றேன்.

"**சிறைக் குற்றவாளி மகனா உன் கணவன்**" என்று முகத்தில் காறித் துப்பினர்; பட்டினிபோட்டனர்; ஓர் அறையுள் தள்ளி உள்ளே கிட என்றனர். நான் மேலும் உறுதி கொண்டேன். 'ஒரேயடியாகக் கொன்று விடுங்கள்' என்றேன். 'உனக்கு அவ்வளவு திமிரா' என மொட்டையிட்டனர். கட்டிய உடையால் தூக்குப்போட்டுச் செத்தாலும் சாவேன் என என் சீலையையும் பறித்துக் கொண்டனர். எனக்கு வயது 18 கடந்து விட்டது; **என் வாழ்வைத் தீர்மானிக்க எனக்கு உரிமை உண்டு. உங்கள் உதவியை நாடி நிற்கும் அவலமிக்க இனியள்.**"

"இது அவள் எழுத்துத்தானே என்றார் மருதி. "ஆம்" என்றார்."

"அவர் சொல்லும் வயது சரியா?"

"சரிதான்;"

"அப்படியானால் நீங்களே இங்குள்ள காவல் நிலையத்தில் சேர்த்து விடுங்கள் கடிதத்தை"

"இதற்குப் படி எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். காவல் நிலையத்தில் கடிதம் சேர்த்த ஒப்பம் வாங்கிக் கொள்ளுங்கள். அதன்படி ஒன்றை என் பெயருக்கு, "மகளிர் காவல் நிலையம், காஞ்சிபுரம் என்னும் முகவரிக்கு அனுப்புங்கள். **இது உடனடிச் சிக்கல். என் தோழி இங்குள்ளார். கடமையில் கருத்தானவர். அவர்க்கு நான் சொல்லிக் கொள்கிறேன்**" என்று புறப்பட்டவர். **இக்கடிதத்தின்**

**ஒளிப்படி இப்பக்கத்திலேயே எடுத்து பனிமலர் அவர்களிடம் கொடுத்து விடுங்கள்.** அவர்களுக்கு வேண்டியதாக இருக்கும்" என்று புறப்பட்டார். படி எடுத்துத் தந்து கனியும் புறப்பட்டார். அவர்க்கு இனியள் முகமும் குயிலன் முகமும் தோன்றின. "நீ எனக்குக் கணினி சொல்லித்தா" என்று கன்னத்தை வருடியதும் குழந்தைத் தனச் செயலாக மட்டும் எண்ணி விட முடியாதே; பாரதியார் இளமைக் காதலில் வீழ்ந்ததைப் பதிவு செய்துள்ளாரே; பிஞ்சிலே பழுத்தது என உதறிவிட முடியாதே?" என்று எண்ணிக் கொண்டே தம் பயிற்றகம் போனார்.

அமைதி ஏற்படவில்லை. தமக்குத் துணையாகப் பயிற்றுவிக்க வைத்திருந்தவரைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, மகளிர் காவல் நிலையம் சென்று, தலைமையரிடம் விண்ணப்பம் தந்தார். அதற்கு முன் மருதி அவர்க்குச் செய்தி தந்திருந்தார் போலும்.

"நீங்கள் கனியா?" "ஆம்"

"கணினிப் பயிற்றகம் வைத்துள்ளீர்களா?" "ஆம்"

"அங்கே பயின்றாரா இனியள்; " "ஆம்"

"செய்திகள் சரியென நம்புகிறீர்களா?"

"முழுமையாக நம்புகிறேன்."

"அவரை சட்டப்படி மீட்டால் எங்கே வைப்பது? காவல் துறையில் இரவில் வைக்க முடியாது பெண்களை! பெண்பகுதிச் சிறையில் வைக்க நேரும்!"

"நான் என் பொறுப்பில் எடுத்துக் கொண்டு, அழைக்கும் போது கொண்டு வந்து ஒப்படைக்கிறேன்"

**அதை எழுதித் தந்து செல்லுங்கள்.**

சொல்லியவாறு எழுதித் தந்து, பயிற்றகம் புறப்பட்டார் கனி. என்னும் கனியம்மை.

பனிக்கும் வேளுக்கும் வேலை நெருக்கடி. இச்செய்திகளை வெளிப்படுத்தாமல் பொன்னை அழைத்துக் கொண்டு பனி சென்றார். வேள் புறப்பட்டார்.

**வெள்ளி கண், குயிலைத் தேடியது;**

குயில் தன் அறையை விட்டு வெளிப்படாது தாடையில் கைவைத்துச் சிந்தனையில் இருந்தது;

வெள்ளி, **"என்ன குயில், கப்பல் கவிழ்ந்த மாதிரி சிந்தனை!"**

"உங்களைப் பார்க்கவில்லை;"

"நான் ஒருத்தியே கூட்டுவேன். தோட்டம் பார்க்கும்போது நீயும் கூட இருப்பாயே!"

**"ஏதோ மன உழற்சி;"**

**"எல்லோர்க்கும் அறிவு சொல்லும் உனக்கு உழற்சியா;"**

"ஆம் அம்மா; **நான் திருமணம் செய்ய வேண்டுமாம்;"**

"வா வெளியே; இதோபார் மூங்கில்! பந்தலுக்கு நட்டது; அதில் துளையிட்டது, **வண்டு.** ஒன்றா இரண்டா? "

**"இரண்டு;"**

பார் முன்னே ஒரு வண்டு பின்னே ஒருவண்டு; உள்ளே போகின்றன, வெளியேறுகின்றன, வட்டமிடுகின்றன;

அந்த மரத்தில் பார் **தூக்கணம் கூடு**; இரண்டு குருவிகள் சேர்ந்து கட்டவில்லையா?

இதோ **பட்டாம் பூச்சி**; ஒன்றற்குப் பின் ஒன்று ஏன்? மேலே பார் **புறாக்கள் இரண்டு** சேர்ந்து பறக்கவில்லையா? **நான்பேசா ஊமை; உன்னோடு பேச ஆசை; எனக்கே வியப்பாக உள்ளது எப்படி மாறினேன். நான் மாறவில்லை; நீ தான் மாற்றி விட்டாய்;** பனியம்மாவிடம் என்னைப் பற்றிக் கேள். **"வருவாள் போவாள்; அவளுண்டு அவள் வேலையுண்டு"** என்பார்.

என்மகனும் உன்னைப் போல் வளர்ந்து விட்டான். பெண் பார்க்கிறோம். **உன்னைத் தாங்குபவர் அம்மா பனிமலரும் ஐயா செவ்வேளும் இல்லையா?** இதுகண்கண்ட காட்சி அல்லவா; **உனக்கேற்ற பெண் வாய்ப்பது அரிது. வாய்த்தால் தயங்காமல் செய்.**

என்னென்னவோ சொல்வாயே திருக்குறள், திருவருட்பா என்று அதில் இதைச் சொல்லவில்லையா?

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை"

"அறத்தால் வருவதே இன்பம்"

"இல்லறம் அல்லது நல்லறம் அன்று"

என்பவை முந்து முந்து வந்தன.

"குயில், **உன் அம்மா இல்லாமல் வானத்தில் இருந்து பொத்தென்று விழுந்துவிட்டாயா? தாய் வயிற்றில் இருந்து தானே வந்தாய்; அப்பா இல்லாமல் அம்மாவாகவே உன்னைத் தந்திருப்பாரா?"**

**"கூட்டும் வெள்ளி ஊட்டும் அமுதா? மருந்தா?"**

"உலகில் நாம் மட்டும் தனியாக வரவும் இல்லை; வாழவும் இல்லை; **வெள்ளி, விடிவெள்ளியானாள்;"**

"அம்மா எளிதாக எனக்கு விளக்கிவிட்டீர்கள்;"

**"இல்லப்பா நான் உனக்கு விளக்கவில்லை; நீ அந்தப் பகுதியைக் கருதவே இல்லை;"**

**"யானை மணி ஓசை காதம் கேட்கும். பக்கத்தில் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருப்பார் காதில் அவ்வோசை விழாது."**

**"இவற்றையெல்லாம் எப்படி அடக்கிக் கொண்டு ஊமை போல் வாழ்கிறீர்கள்?"**

**"பலகுடும்பங்கள் கெட்டது வேலையாள் காதாலும் கண்ணாலும் வாயாலும்; இந்தப் படியில் முதல் நாள் நான் கால்வைக்கும்போதே கொண்டது ."குருடியாய் செவிடியாய் ஊமையாய்," இவ்வீட்டில் நடப்பதற்கும் நமக்கும் தொடர்பில்லாமல் வேலைபார்த்துச் செல்ல வேண்டும்" என்பது, உன்னிடம் நான் தோற்றுப் போனேன் என்று கண்ணீர் விட்டாள். "அம்மா என்று அலறிக் கொண்டு அருகே சென்று தன் கைத்துணியால் துடைத்தான்."**

"பார்; **வாய்திறந்தேன்; உன்னைக் கலங்க வைத்து விட்டேன்."**

**"இல்லை அம்மா, நீங்கள் வாய்திறந்தீர்கள்; எனக்கு வழி திறந்து விட்டீர்கள்"** என்றான்!

௸♦௵

# 21. வளர்ந்துவிட்டாய்

குயிலன் மகிழ்ச்சியாக இருந்தான்.

“வெள்ளி புறப்படுகிறேன்” என்று புறப்பட்டாள். பனி, மருத்துவமனையில் இருக்கும்போதே கனிவந்து காவல் துறையில் ஒப்படைத்த கடிதம் அவர்கள் கூறியது பற்றிக் கூறிவிட்டார்.

எதுவும் தெரியாநிழல் நாடகங்களாகப் பொன்னுக்குத் தெரிந்தது. தாயும் மகனும் உண்ணட்டும் நாம் உண்போம் என்று வேளிடம் சொன்னார் பனி. அவ்வாறே உண்டனர். ஓய்வில் சாய்ந்தார். செல்பேசி ஒலித்தது. “கனி பேசுகிறேன். காவல்துறை உடனே சென்று வீட்டுச் சிறையில் இருந்து மீட்டு இனியளைக்காவல் துறைக்கு அழைத்துச சென்றுள்ளனர். விண்ணப்பித்த என்னை எப்பொழுதும் அழைக்கலாம்! அழைத்ததும்போய் நிலைமையைப் பேசுகிறேன்” என்றார்.

கனிக்கு ஆயிரம் நன்றி சொல்லலாம். **காதலுக்காக முறையான அரசை இழந்து மொட்டை யரசர் எனப்பட்டார், எட்டாம் எட்வர்ட்டு.** இங்கோ ஒருத்தி ஒருகாதலனை மணக்க விரும்புகிறாள் என்பதற்காகப் பெற்றதாய் தன் மகளை மொட்டையடித்து வீட்டுச் சிறைவைத்துள்ளாள் என ஏங்கினார்.

நம் இருவர் காதலும் முட்டுப்பட்டாலும் மொட்டைக்குச் செல்லவில்லை. நாமும் எவர் காலிலும் நில்லாமல் நம் காலில் நிற்கும் தொழிலைக் கொண்டிருந்தோம். “உங்கள் சொத்துத் தேவையில்லை” என்று துணிந்து கூறினோம்” என்றார் பனி.

“ஆனால், “இவர்கள் நிலை” என வேள் சொன்னார்.

“நம் பிள்ளை குயில் என்றால் நம் சொத்து அவனுடையது தானே! இனியள் கல்விநிலை அவளைக் கண்ட பின்தான் அறிய முடியும் என அமைந்தனர்.” குயிலன் வந்தான். “அம்மா அப்பா நீங்கள் உணவு முடித்தீர்களா? உன் விருப்பப்படி உணவை முடித்தோம்.”

“நீயும் உனக்கு வருபவளும் சேர்ந்து எப்பாமுது உண்ணப் போகிறீர்கள்;”

**“நீங்கள் சொல்லும் போது;”**

**“குயிலா மெய்யா?”**

“பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற

செய்யாமை செய்யாமை நன்று”

“தழுவும் வயது கடந்து விட்டது.”

**“என்றும் உங்கள் குழந்தை குயில்**; ‘பனி’ உள்ளே போய்த் தேன் புட்டி எடுத்து வந்தார். வேளும் பனியும் குயிலன் நாவில் தேன் சொட்டு விட்டனர். “அம்மா புட்டியைக் கொடுங்கள். உங்கள் இருவர்க்கும் நான் தேன் சொட்டு விடுகிறேன்; நீங்கள் **முதுகுழந்தைகள் தாமே! ‘முத்து விழா’ நாள்** ஆயிற்றே” என்றான்.

எதுவும் தெரியாமல் மகிழ்வுடன் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் நின்றாள் பொன்.

வெள்ளி வீட்டில் இருந்து வந்து விட்டாள்.

“குயில் ஆழ்ந்த சிந்தனையில் இருந்த நீ எப்படி உடனடியாக இந்த மாற்றங்கொண்டாய்;”

“எல்லாம் அம்மா வெள்ளி, **விடிவெள்ளியாக விளங்க** வைத்தது.”

**“வாய்திறக்க மாட்டாளே; வாய் திறக்காதவர்கள் தாம், பலர்பலர்க்கு வழிகாட்டியிருக்கிறார்கள். ‘மோன குருவர்’** அவர்; **‘இறைநிலை, குருவர் நிலை’** என்பார் இராயப்பேட்டை முனிவர் **திரு.வி.க.** வியந்தவர்களாய் வெள்ளியை அழைத்துக் கேட்க நிகழ்ந்தது கூறினாள்.”

**“எவர் எவருக்குள்ளோ என்னென்னவோ ஆற்றல் உள் அடங்கிக் கிடக்கின்றன மண்ணுள்** பொன்னும் வயிரமும் போல என வியந்தனர் பனியும் வேளும்.”

என்னை மாற்றியது குயில்; அவனை மாற்றவைத்தது தங்கள் அருள்! இங்கு வேலைக்குவந்து முழுநம்பிக்கையோடு வீட்டுத் திறவும் தரும் பெருந்தகையர் விரல்விட்டு எண்ண எவராவது இருப்பரா?

"இதோ தேன்"

"என் குயிலின் மணத்தைக் கண்ணாரக் கண்டேன் என்பது தான் எனக்குத் தேன்!"

"பொன், கண்ணைத் துடைத்துக் கொண்டு தன் அறைக்குப் போனாள். இனியளை வீட்டுச் சிறையில் இருந்து மீட்ட காவலர், அவர்கள் பெற்றோரைக் காவல் கூடம் அழைத்துச் சென்றனர்."

"நீங்கள் - கண்ணே மணியே அமுதே தேனே எனப் பாராட்டிவளர்த்த பிள்ளையை இப்படிச் செய்வது முறைதானா? சிறை வைத்தாலும் இச்சிறுமைகளைச் செய்யப் பெற்ற தாய்க்கும் நெஞ்சம் கற்பாறையாகிப் போனதா?"

துணியையும் பறிக்கும் இழிசெயல் காட்டு வழிப்பறியர்க்கு உண்டு என்ற செய்தி உண்டு. அதுவும் புனைவே; துணியில் வைத்திருந்த பணத்தைப் பறித்ததே அது.

இனியளுக்குத் தன்னுரிமைப் படி வாழும் வயது வந்துவிட்டது. அவளை எக்கட்டாயத்துக்கும் ஆட்படுத்த உரிமை இல்லை; மேலும் அவளுக்குத் தொல்லையோ அவளை மணப்பவனுக்குத் தொல்லையோ உங்களாலோ உங்கள் ஏவலாலோ ஏற்பட்டால் தண்டனைக்கு உரியவர்கள் ஆவீர்கள். இந்த உறுதிமொழிப் படிவத்தில் கையெழுத்திட்டுக் கைவிரல் பதிவும் செய்யுங்கள் என்றார் அலுவலர். "அவளுக்கு எங்கள் சொத்தில் எந்த உரிமையும் இல்லை" என்றாள் காளி, இனியளின் தாய்.

"அது நீங்களோ நாங்களோ முடிவு செய்ய முடியாதது; முறைமன்றம் செய்யவேண்டியது என்று சொல்ல இருவரும் கையொப்பமிட்டு, கைவரியும் வைத்தனர்."

**"இந்தச் செய்தி தந்தது யார்?"** என்றார் இனியளின் தாய் காளி. **உங்கள் கரவு நெஞ்ச வெளிப்பாடு இது. இதுகொண்டே உங்கள் வஞ்ச நெஞ்சம் மாறவில்லை எனத் தெரிகிறது.**

மேலே நீங்கள் தொடர்ந்தால் உங்களைச் சிறைப்படுத்தவோ தண்டிக்கவோ சட்டம் உண்டு என்று கண்டித்துக் கூற வெளியேறினர்.

"இனியள் நீ ஆறுமணிக்குமேல் ஆனால், இங்கே சிறைக்குள் வைக்கப்படுவாய், அல்லது **உன்னைப் பொறுப்பெடுப்பார் வரவேண்டும்"** என்றனர்.

இனியளின் பெற்றோர் வெளியேறுவதை எதிர்பார்த்திருந்த கனி, **செயற்கைக் கூந்தல், புத்துடையோடு வந்தார்.** இனியளைப் பொறுப்பில் எடுத்துக் கொண்டு மீள அழைக்கும் போது, ஒப்படைப்பதாக எழுதித் தந்த படிவத்தில், போட வேண்டிய இடத்தில் ஒப்பமிட்டுத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். வீடும் பயிற்றகமும் அதுவே. பயிற்றகம் அவர் வீட்டின் பகுதியேயாகும்.

இவர்களை எதிர்பார்த்துப் **பொன், வேள், குயில்** மூவரும் கனியின் வீட்டில் இருந்தனர்.

இனியள், **குயிலனைக் கண்டதும், ஓடி** அவன் கன்னத்தைத் தடவி, **வளர்ந்துவிட்டாய்**, **"இனி உன் காலடியில் விழுந்து உயிர் விட்டாலும் மகிழ்வேன்"** என்று உணர்ச்சிவயப் பட்டவளாய், **"உன்னால் எனக்கு ஏற்பட்ட மொட்டை பார்"** என்று செயற்கை முடியை எடுத்தாள்; **மூவரும் கலங்கினர்.** காதல், நிலத்தினும் பெரிதே, நீரினும் ஆழ்ந்ததே, வானிலும் உயர்ந்ததே என்னும் உண்மையை ஒருங்கே உணர்ந்தனர். கனியையும் குயிலனையும் தவிர எவரும் அறியாதவர்தாமே இனியளுக்கு; **"வேறு எங்கும் செல்லக் கூடாது"** என்பது காவல் துறை ஆணை; ஆதலால் என்னோடே இருப்பாள் என்றாள் கனி. நீங்களும் இனி நான் அழைக்கும் வரை எவரும் வரவேண்டா.

**"இந்தச் செய்தி தந்தார் எவர்?"** என்று காவல் துறையில் கேட்டு, வாங்கிக் கட்டிக் கொண்டவர் இனியள் தாய் என்றார் கனி. குயில் வாய் திறக்கவில்லை!

௸♦௵

# 22. ஆணுரிமை பேசுவதில்லை

இனியளின் தந்தை திருமால். அமைதியானவர், அவர் மனைவி காளியோ முரண்டள்; திட்டும் வசையும் அவள் சொந்தச் சரக்கு. **அவள் அண்ணன் மகனுக்கே, இனியளைத் தந்து சொத்தும் அவனைச் சேர வேண்டும் என்ற முடிவில் இருந்தவள். திருமால், "நமக்கு ஒருபிள்ளை. அவளை அவள் விருப்பத்துக்கு வாழ விடாமல் அழப்படுத்த வேண்டுமா"** என, அவரை ஏசிய ஏசல், முற்றிலும் காது கெட்டவனால் கூடத் தாங்கிக் கொள்ள முடியாது; அவள்தான் மொட்டையடிக்கச் செய்தவள். **"நான் செத்துப் போவேன்"** என்று இனியள் சொன்னதால், "உடை இருந்தால் தானே தூக்குப் போட்டுச் சாவாள்" எனப் பறித்துக் கொண்டவள்;

திருமால் பொங்கினார்; பக்கத்து வீட்டார் தெருவார் அறியவருமே என அடக்கிக் கொண்டார்.

காவல்துறையில் **"இச் செய்தி தந்தவர் யார்"** என்று கேட்டபோது துடித்தார்; ஆயினும் அடக்கினார்;

வீட்டுக்கு வந்ததும், கதவை அடைத்துவிட்டு, இனியளைச் சிறைவைத்த வீட்டுள் காளியை உள்ளே தள்ளி, அக் கதவையும் சாத்திக் கூந்தலைப் பிடித்துத் தள்ளிக் கன்னத்தில் மாறி மாறி அறைந்தார். **அவருக்கு இப்படிச் சீற்றம் வரும் என்பதை, அன்றே காளி கண்டாள்!**

"இனி உன் அண்ணன் வீட்டுப்பேச்சை எடுத்தால் உயிரோடு இருக்கமாட்டாய். சொத்தையும் எந்தக் கோயிலுக்காவது மடத்துக்காவது எழுதி வைத்துவிட்டு 'நீ கிட' என்று எங்காவது போய்விடுவேன் என்றார். அடங்கி நடுங்கினாள். **அடிக்க அடிக்க வெருண்ட பாம்பு, திரும்பிப்படமெடுத்துக் கொத்துவதுபோல் அவள் வாழ்வில் முதல் முறையாகத் துடித்தாள்.**"

இனியள் கனியிடம் சொன்னாள், என் தந்தை திருமால் அமைதியானவர். என் அம்மா காளி, அவரை நாளும் பொழுதும்

படுத்தும் பேய்ப்பாட்டுக்கு அளவே கிடையாது. 'ஊர் சிரிக்கும்' என அவர் பொறுத்துப் பொறுத்துப் போனார். உடையைப் பறித்ததை அவர் அறியார் கதவைப்பூட்டித் திறவைத் தன் கையில் வைத்துக் கொண்டாள். என்னைக் காண எனக்கே நாணுதலாய்க் கூனிக்குறுகிக் கிடந்தேன்; என் விருப்பத்துக்கு முற்றிலும் கேடாக இருந்து செய்யாச் சிறுமையெல்லாம் செய்தது என்தாயே;

**பெண்ணுரிமை பேசுகிறோம்; ஆணுரிமை பேசுவதில்லை; வாழ்வுக்கு ஒப்புரிமை வேண்டும்** என்பதே திருக்குறள். **என் குயில் வரும் வரையும், நான் கணினி நன்றாகத்தானே படித்தேன்.** குயில் உங்களிடம் ஒப்பிப்பதும் அவனிடம் கற்பதாகவும் இருந்த பொழுதெல்லாம் தவித்தேன். **உங்களைப் போல் இருந்து கேட்க வாய்க்காதா என ஏங்கினேன். பிழை பிழையாகக் கணினியைப் பயன்படுத்தினேன். நீங்களும் "நடந்த பிள்ளை தவழ்வது ஏன்"** என்று தோளைத் தட்டி விட்டுப் போனீர்கள். நானே, "**குயில் நீ எனக்குக் கணினி கற்றுத் தரமாட்டாயா**" என்று அவன் கன்னத்தைத் தடவியிருக்கிறேன். **அவனுக்கு நான் தக்கவளாக இருக்க வேண்டும் என்று திருக்குறள் முழுதும் மனப்பாடம் ஆக்கிக் கொண்டேன்.** அவனை மீள நான் காணச் செய்த என் அம்மா கனிதான்" என்றாள். இங்கே இருக்கும் போது நான் மீளவும் கணினி கற்றுக் கொள்ள விரும்புகிறேன் என "குயில் அடித்த கணினித்தாளை யெல்லாம் எடுத்து வைத்துள்ளேன். அவற்றை நீ இன்று பார்க்கும் அளவு பார்;"

"எனக்கு இன்பமே அன்றித்துன்பம் இல்லை" என மந்திர மொழியாக மனத்துள் சொல்லிக் கொள்" என்று கூறிப் பயிற்றகப் பக்கம் சென்றார் கனி.

பனியும் வேளும் கனியொடு கலந்து பேச எண்ணினர். நாம் அங்கே வரக் கூடாது என்றிருக்கிறார். நாம் இங்கே அழைப்போம் என அழைத்தனர். அவர் வந்தார்.

மூவரும் மாடியின் வாரம் சென்றனர். "**கனி, இனியள் குயிலன் மணம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்**? என்றார் வேள். நீங்கள் செய்யும் முடிவுதான். நானும் பனியும் "**பதிவுத் திருமணம்**

செய்துவிடலாம்" எனக் கருதுகிறோம் என்றதும், "அது சரியான முடிவு தான்" என்றார் கனி.

"குயிலன் அம்மா, அவனுக்கு ஒப்பம் தரலாம்."

"இனியளுக்கு" என்றார்.

இனியள் அப்பா, "நமக்கு ஒரே மகள்; அவள் விருப்பப்படி மணம் செய்தலே முறை என்றிருக்கிறார். தாய்தான் தன் அண்ணன் மகனுக்குச் சொத்துச் சேர வேண்டும். அதற்கு இனியளை அவன் மணக்க வேண்டும் என்று எல்லாக் கேடும் செய்துள்ளாள். ஆதலால், இனியள் அப்பா திருமால் ஒப்புதல் தர வரக்கூடும். அவரைக் கேட்டு இசைந்தால் போதும். நாம் சான்றுக்கு உள்ளோம். நம் பயிற்றகத்துக்கு விடுமுறை விட்டு விட்டு; பதிவாளரை வரச் செய்து பதிவை முடித்து விடலாம்" என்றார்.

இவர்கள் சந்தித்த இடத்திலேயே பதிவும் நடத்துதல் நலமே. அழைப்பு வரவேற்பு என எதுவும் வேண்டுவது இல்லையே என்றார் பனி. நான் இனியளிடம் எண் கேட்டு அவரொடு பேசி விரைவில் முடிவெடுப்போம் என்றார் கனி. பொன்னை மேலே அழைக்க வேண்டுமா என்றார் கனி.

இல்லை நாங்கள் சொல்லிக் கொள்கிறோம் என அவர் புறப்பட்டார்.

பயிற்றகம் வந்ததும், "ஐயா இனியள் பயின்ற கணினிப் பயிற்றகம் வரமுடியுமா?" என்று திருமாலிடம் வினவினார் கனி.

"அம்மா கனிதானே!"

"உடனே வருகிறேன்" என்றார். உடன் வந்தார். தங்கள் திட்டத்தைச் சொன்னார் கனி.

இப்படிப்பட்ட பெண் தெய்வங்கள் வாழும் நாட்டில் தான் பெண்பேய்களும் திரிகின்றன.

என் இனியளைக் காணலாமா? என்றார்.

"அப்பா" என வந்து கட்டிப் பிடித்தாள்;

"பூனை கண்மூடினால் பொழுது இருண்டு போகாது," நீ அமைந்திரு. **உன் அப்பா அடங்கியவர் அல்லர்; அடக்கியவர்**; என்று தேற்றி விட்டு,

"நான் என்ன செய்ய வேண்டும்" என்றார்.

"இங்கேயே பதிவாளரை வரச் செய்து இனியளுக்கும் குயிலனுக்கும் பதிவுத் திருமணம் நடக்கும்போது **உங்கள் ஒப்புதல் கையொப்பம் வேண்டும். அவ்வளவே**! என்றார்."

**"எல்லோர்க்கும் முன்னாக நான் நிற்பேன்**. மாலை முதலிய ஏற்பாடும் என் பொறுப்பே! அருட் கனி நீங்கள்; நாளை மட்டும், முதல் நாளே சொல்லிவிடுங்கள்." என்று விடைபெற்றுக் கொண்டார். இனியள், அப்பா காலில் விழுந்து வணங்கினாள். **"உன் அப்பாவுக்கு நேற்று வந்த துணிவு முன்னரே வந்திருந்தால், என்னென்னவோ அலங்கோலங்கள் எல்லாம் நடந்திரா"** என்று சொல்லிப் புறப்பட்டார்.

கனி, "இனியள் அப்பா முழுதுற இசைந்து தாமே முன்னின்று செய்வதாக ஒப்பியுள்ளார்" எனப் **பனிமலர்க்குச் சொன்னார்**. "பதிவாளரைக் கேட்டு இசைவு பெற வேண்டிய ஒன்றுதான் நம் வேலை" என்று வேளிடம் பனிமலர் கூறினார். நாளை முடிவு செய்து விடலாம் என்றார் வேள். **குயில் சில நாளில் எங்களைப் போல் நீயும் ஊடுஎதுவும் இல்லாஅன்பில் உண்பாய்** என்று பதிவுத் திருமண ஏற்பாட்டைச் சொன்னார். பொன்னையும் அழைத்துக் கூறினார். **வீடு மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்தது;**

வேள் சொன்னார்: பாட்டி தாமரை, மருதி, வெள்ளி, நாம் இருவர், பொன், திருமால், பதிவாளர், அவருடன் வரும் ஏவலர், குயில், இனியள் எனப் பதினொருவர். தக்க வகையில் பதிவை முடித்து, அங்கேயே உண்ணல் என ஏற்பாடு; சரிதான்; நீங்கள், '**தனதான**' என்றால்; நான், '**தானதன**';

☙♦❧

# 23. தொடக்கவுரை

திட்டப்படி **பதிவு முடிந்தது**. பதிவர் புறப்பட்டார். பாட்டிமட்டும் வாழ்த்தினார். என்பேரன் **"குயில் கூவும், குயிலியுடன் கூவும்" என்றார்;**

**இருவரும் சேர்ந்து;,**

"அகர முதல எழுத்தெல்லாம் தொடங்கி,

பிறவிப் பெருங்கடல் நீந்துவர்" முடியக் கூறினர்.

"**குயில், என்னைக் கேள், எந்த அதிகாரம் சொல்ல**" என்றாள் குயிலி. "அணங்கு கொல்" **தகையணங்குறுத்தல் உனக்கு வேண்டும்;**

**இல்லையா? கேள்;**

"அணங்குகொல்.... அதிகாரம் முடித்தாள். அடுத்து,

"**ஒப்புரவறிதல்**" ....... - கூறிமுடித்தாள்."

"**குயில் நீ சரியான ஆள்; தகையணங்குறுத்தலுக்கும் ஒப்புரவறிதலுக்கும் என்ன தொடர்பு?**"

"**உனக்குத் தெரியுமா?**" "தெரிந்துதான் உனக்குத் தெரியுமா எனக் கேட்கிறேன்!"

- திகைத்தான்;

"**பார் நீ என்னை வென்றாய், நான் உன்னை வென்றேன்! வெற்றி தோல்வி மாறி மாறி வரும்! இன்பம் துன்பம் மாறி மாறி வரும், இரவும் பகலும் போல!**"

"**கேட்கிறாயா?**"

நீர்நிலைப் பக்கம் ஒரு மாமரம். அதன் ஒரு கனி! அது நீர் நிலையில் விழுகிறது; சிறிய அலை வட்டம் படிப்படியே பெரிய வட்டம்; **நம்முள் ஒப்புரவு - விரிவு - உலக ஒப்புரவு** - "காதல் வேண்டும் உலக ஒப்புரவுக்காக;"

"இனியை வென்று விட்டாய்!"

"இல்லை, உன்னிடம் தோற்றுவிட்டேன்! யார் இப்படி இணைத்து வினவ வல்லார்? அறன் வலியுறுத்திய வள்ளல் வள்ளுவர், தலையணாங் குறுத்தல் - காதல் முதலாக வைக்கவில்லையா?"

"நீ முற்ற ஓதியவன்; உன்பக்கத்தில் நிற்பதற்காக மொட்டைத் தலையுடன் கட்டிய உடையும் இல்லாமல் முன்னமே அங்கே மறைத்து வைத்திருந்த திருக்குறளை மனனம் செய்தேன்! என் தூண்டா மணிவிளக்கு நீ!"

நீ என் நாவை அறுக்கமாட்டாய்; "நா என்னும் நலனுடைமை" அறிந்தவன். ஆசிரியனை நினைந்து, அவர் கற்பிக்காமல், தானே கற்றவன் கட்டை விரலைக் காவு வாங்கியவன் போன்றவன், நீ அல்லை! என்னைக் கட்டி அணைத்து வாழவைக்க வந்தவன்! உன் ஈரடியைப் பற்ற நான் கற்ற ஈரடி என்றாள் இனியள்.

இனியள் அழவில்லை;

தாமரைப் பாட்டி முதல் அனைவரும் அழுதனர்; "இனியள், கனியைக் கூறினாள், இந்தக் கனியை எவ்வளவு ஆழ்மனத்துக் கொண்டு மாங்கனியை எடுத்துக் காட்டினள்! தொடக்கமும் நிறைவும் கனிமுன் தானே! "குயிலனுக்கு ஏற்ற குயிலி" என்றார் பனிமலர்.

கருப்பாயி பொன்னம்மை ஆனாள்; கனி கனிவின் வடிவானார்; தாமரையோ குவிதல் விரிதலற்ற தாமரை. 'மருதி' பாடு புகழ்பெற்ற பெருமையர்; வெள்ளியோ விடிவெள்ளி; திருமாலோ, "நீர் செல நிமிர்ந்த மாலாம்" வான் கொடை; இக்கூட்டு ஒப்புரவுக் கூட்டு; என்றார்;

"ஏன், பனிமலர் வண்டும் புகா மலர் இல்லையா?

புறப்படும் செங்கதிர் தானே செவ்வேள்?"

இவ்வெல்லாம் சேர்ந்த கூட்டுத் தேன் பதிவு தானே,

நாம் நடத்திய பதிவுத் திருமணம் என்றார் இனியளாம் குயிலி;

"குயிலா, நீ விரும்பாமலே - எதுவும் புரியாமலே விழிக்க, உன் கன்னம் தடவி எனக்குக் கணினி கற்றுத் தரமாட்டாயா என்று கனியம்மா முன்னேயே கேட்டவள் நான்!"

இனி, **மறுக்காமல் - பொய்க்காமல் - கல்லாதவற்றை யெல்லாம் கற்பிப்பாய் அல்லவா;** பொறுத்துக் கொள்; உன்னை ஆறு வயதாக எண்ணிக் கொண்டே பேசுகிறேன்; இனி உங்களை என்கிறேன்;

"வேண்டா நீ, நீ என்றே சொல்; நானும் உன்னை நீ என்றே சொல்கிறேன் **ஒப்புரிமை சொன்னவள் நீதானே;" "இல்லை, என் அம்மாவும் அப்பாவும் போல்,** நீங்கள் என்றே இருவரும் சொல்லிக் கொள்வோம்."

நாம் வாழ்த்துப் பெறவேண்டும்; ஒப்புரவாக இவர்கள் அனைவரும் நிற்க நாம் வீழ்ந்து வணங்கி வாழ்த்துப் பெறுவோம் என்றான் குயிலன்;

**தாமரைப்பாட்டி, திருமால், பொன், பனி, வேள், மருதி, கனி, வெள்ளி,** - எண்மரும் வரிசையாக நின்றனர்.

"கோளில் பொறியில் குணமிலவே **எண்குணத்தான்**

தாளை வணங்காத் தலை"

"குயிலி, நான் நினைத்த குறளையே நீங்கள் எப்படி எடுத்தீர்கள்?"

**"நீங்கள் அதையே எடுப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும்;** குயிலன் சொன்னான் "**உள்ளத்தால் ஒன்றல், முதல் ஒன்றல். உரையால் ஒன்றல், அடுத்த உயர்நிலை; செயலால் ஒன்றுதல், நிறை நிலையாம் இறைநிலை**" என்றான்.

குயிலி சொன்னாள்:

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்

உள்ளத்துள் எல்லாம் உளன்"

"நாம் அடுத்த நிலையை - **செயற்பாட்டைத் தொடங்கத் தொடக்கவுரை**" என்றார் வேள்.

"குயிலன் குயிலொடு, வேளும் நானும் நம்மொழி இனப் பண்பாட்டை உலகெலாம் பரப்புதலாம் கடப்பாடு அது" என்றார் பனிமொழி!

௸♦௵

# 24. தேன் நிலவு

"குயில், இனி விருந்தினர் அறை உங்கள் அறை.

"நாங்கள் விருந்தினரா?"

"குயிலி புது வரவுதானே"

"அப்படிப்பார்த்தால் எனக்கு முன்வரவு குயிலி; அவர் அன்பின் முதிர்வு, இளநாளிலே கொண்டுள்ளார்! நான் விளையாட்டாக எண்ணினேனே அல்லாமல் அவரைப் போல் ஆழமாக எண்ணவில்லை;

"குயில் நீ எனக்குக் கணினி கற்றுத் தரமாட்டாயா? என்று கணினிக் கனியம்மா முன்னரே கேட்டதையும் இயல்பாகவே கொண்டேன்; வன்படியான துயரையும் தாங்கி என்னையே நினைந்து எனக்குத் தக்கவளாக இருக்க வேண்டும் என்று ஒரே முடிவாகத் திருக்குறளை முற்றும் கற்றார் என்றால், யார் முந்தியவர். நான் வெள்ளியார் தூண்டல் இல்லாவிட்டால், உங்கள் இருவரையும் எடுத்துக் காட்டாகக் காட்டாவிட்டால் நானார், இனியர் யார்? எங்கள் காதலில் முன்னுரிமையர் இனியரே; யானே விருந்தாளி; ஆதலால், **விருந்தாளி விருப்பத்துக்குத் தகத் தேன்நிலவு கொண்டாட நீங்கள் இசைய வேண்டும்.**"

"உன் விருப்பு என்ன?"

"இன்று **கூட்டாஞ்சோறு** ஐவரும் ஒருங்கே அமர்ந்து உண்ணல்;"

"அம்மா வேண்டுவ ஆக்குவார்; அவர் வேலையே சமையல் தானே; நாம் வழக்கமாகக் கலந்து பேசும் மாடி வாரத்தில் வட்டமாக அமர்ந்து அவரவர்க்கு வேண்டுவதை அவரவரே எடுத்துப் போட்டுக் கொண்டு உண்போம்" என்றான்.

"எனக்கு வேலை இல்லாமல் ஆக்குகிறாய்" என்றார் பனி.

"பனி உருகுதல் தான் கங்கைப் பெருக்கு;"

"அந்த உருகுதல் ஆக்கம்; நாம் அப்படி உருகிக் கொண்டு நின்றால் செயலற்றுப் போவோமே!"

"அம்மா அந்த உருக்கம் பலரை **உருக்காக்கிச் செயலூக்கியாய், செயலாக்கியாய் ஆக்கும் என்பதை வள்ளலார் அண்ணியார் வடித்த கண்ணீர் மெய்ப்பிக்கவில்லையா?"**

"உங்களுக்கு உருக்கம் இல்லையானால், எங்களுக்கு இந்தப் பேறு வாய்க்குமா? மருதியார்க்கும் கனியம்மைக்கும் இருந்த உருக்கம்தானே 'குயிலனொடு குயிலி' கூடியிருப்பது என்றான். மாடிக்குச் சென்றனர். குயிலி, பொன்னுக்கு உற்ற உதவியள் ஆனாள்;"

பொன்னி, **"நீ புதுப்பெண் அவர்களோடு இரு"** என்று குயிலியைச் சொன்னாராம்.

**"நான் புதுப்பெண் இல்லை; உங்கள்** மருமகள்" என்றிருக்கிறார். அம்மாவுக்குப் பூரிப்பு என்றான் குயிலன். குயிலன் விருப்பப் படி **கூட்டாஞ்சோறு** முடிந்தது. எல்லாப் பொருள்களும் கீழே கொண்டு வரப்பட்டன. வழக்கமாக அமரும் இடத்தில் நால்வரும் அமர்ந்தனர்.

அம்மாவுக்கும் அப்பாவுக்கும் ஒரு வேண்டுதல். உங்கள் தேன்நிலவு எப்படியோ? **எங்கள் தேன்நிலவு நான் குயிலியைப் புரிந்து கொள்ள வேண்டும்; குயிலி என்னைப் புரிந்து கொள்ள வேண்டும்; புரிதல் இல்லாத நட்பு, வேலையாள், பங்காளர்-கேடு பெரிது; கேட்டில் எல்லாம் பெருங்கேடு புரிதல் இல்லாத வாழ்வு; ஆதலால், நாங்கள் இருவரும் கலந்து பேச வேண்டும்;**

மாடிவாரத்தில் ஒருவிரிப்பு; இரண்டு தலையணை மட்டும் தந்தால் போதும். பாட்டிக்குத் தந்த விரிப்பும் ஒருதலையணையும் அங்கே உள்ளது. ஒரே ஒரு தலையணை மட்டும் வேண்டும் என்றான்.

குயிலி மாமியிடம் சொல்லி விரிப்பும் தலையணையும் பெற்று விரித்தாள். குயிலன் ஒரு தலையணையோடு மாடி போனான்.

வாரத்தில் விரித்துப் படுத்தனர்.

**"குயிலி என்னைப் பிடித்தது ஏன்?"**

“உங்களைப் பிடிக்கவில்லையே; கன்னத்தைத்தானே தடவினேன்.”

“குறும்புக் காரி;”

“எல்லாம் நினைவிருக்கும். நீங்கள் செய்தது மட்டும் நினைவிராது.”

“அது என்ன?”

“கணினிக்கு வந்த மறுநாள், முதல் நாள் இடையே தண்ணீர் குடிக்கப் போனீர்கள். நான்அறிந்தேன். மறுநாள் புட்டியில் வெட்டி வேர் போட்ட குளிர்நீர் கொண்டு வந்தேன். நீங்கள் எழுந்ததும், நான் புட்டியை நீட்டினேன். நீர் குடித்துவிட்டு, “அருமையாக உள்ளது” என்றீர்கள்; அது நீரையா, என்னையா?”

“தண்ணீரைத்தான் சொன்னேன்.”

“தண்ணீர்க்குக் காதுண்டா, அறிவுண்டா?”

“தயிர்க்குழம்பு தாளிட்டு ஒருத்தி படைக்க, ‘இனிது’ என்றது குழம்பையா அவளையா? குழம்பு முகம்மலர்ந்து புன்முறுவல் பூக்குமா?”

“நான் திரும்பத் திரும்பப் பார்க்கும்போது பாராமல் குனிந்து, பாராத போது பார்த்தது மறந்து விட்டதா?”

“அப்பா!”

“நான் உங்களைக் கன்னம் தொட்டேனா?”

“நீங்கள் வெளிப்படுத்தா அரங்கர்;”

“நம் தேன் நிலவு இது தானா?”

“புரிதல் தானே நம் தேனிலவு!”

“அப்படியானால்,”

“என் மொட்டை நீங்கி, பழைய இனியளாகும் வரை புரிதல் மட்டுமே நம் தேன் நிலவு.”

“என்னைச் சொல்லிவிட்டேன்! உங்களைச் சொல்லவில்லையே!”

"என்னை வருத்தும் துயர்கள், உங்களைப் பொறுத்த அளவில் **இரண்டு உண்டு!"**

**"அப்பப்பா! இரண்டு தானா?"**

"குயில் நீ எனக்குக் கணினி கற்றுத் தரமாட்டாயா என்பதைக் கேட்டுச் செய்யாதது **ஒன்று."**

"நான் கணினியகத்திற்கு வாராமையால், நீங்கள் கணினி கற்பதை விட்டு விட்டுப் போகக் காரணமாக இருந்தது **மற்றொன்று;"**

**"மரத்துப் போன கட்டை;"**

**"துடிப்போடு ஒருத்தி போனாளே என்ன ஆனாள்"** என்று கணினியம்மாவினிடம் கேட்டு ஒருநாளாவது எட்டிப் பார்க்க எண்ணம் வந்ததா? **உடல்தானே வளர்ந்தது; உளம்? "மேல்நிலை படிக்க வீட்டை விட்டு வெளியே போனேனே என்றாவது கண்ணில் பட்டதுண்டா? என்னைப்போல் சிறையா?"**

**"எதுவும் தெரியாமல் நான் என்ன செய்ய முடியும்?"**

"**தொல்காப்பியத்தை துருவி எடுக்கத் தெரிகிறது; இது தெரியாதா? உங்களையே எதிர்பார்த்துக் காத்துக் கிடப்பவளைக் காணத் துப்பில்லை;"**

**"நான் என்ன செய்ய வேண்டும்?"**

"உங்களால் போடப்பட்ட மொட்டை வளரும் வரை கிட்ட நெருங்கக் கூடாது; **'அணங்குகொல்' கேட்கத் தெரிகிறது; பார்க்கத் தெரியவில்லையே;"**

"நான் காலில் விழுந்து பொறுத்துக் கொள்ளக் கேட்கவா?"

**"அந்தப் பாவம் வேறா?"**

"நாம் வெளிநாடு போக நேர்ந்தால்"

"இருக்கவே இருக்கிறது ஒட்டுமுடி; **கனியம்மை கனிவுக்கொடை, பக்கம் பார்த்தாவது பரிவு வரக் கூடாதா? என்பது என்வினா.** வெள்ளியம்மா காட்டிக் காட்டித் தானே நீங்கள் காவியாடை கட்டாமல் இருக்கச் செய்திருக்கிறார்."

"நமக்குத் தான் திருமணம் ஆயிற்றே;"

"அம்மா பனிமலரும் ஐயா செவ்வேளும் திருமணம் ஆனவர்கள் தாமே; பயன்மரம் உள்ளூர் பழுத்ததாக வாழாவிட்டால் இந்த அருட்குடியில் நாம் கால்வைத்திருக்க முடியுமா?"

"ஒப்புரவு" சொல்லவைக்க முடிகிறது; ஒப்புரவு கண்ணேரில் உருவமாக நிற்கிறதே; உலகத்திற்கு வள்ளுவ ஒப்புரவைக் கொண்டு சேர்ப்பதைத் தலைக் கடனாகக் கொள்வோம்;

"என் குயில் குயிலிதான்;"

"குயிலனோடு பறக்கக் குயிலியும் வேண்டும்தானே; நம் தேன் நிலவு. அதுவே தான்!"

- ❖ "இயற்கை இயங்கியல் உலக முதல் மொழி" தமிழ்.
- ❖ "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்னும் பெருநெறி கொண்டது தமிழ்.
- ❖ "பொதுவுடைமை - சமனியம்" - என்பவை தோற்ற முறாக் காலத்தேயே, ஒப்புரவு கண்ட மொழி தமிழ்.
- ❖ "ஒளிவழிபாடே உலக ஒருமைக்குரிய வழிபாடு" எனக் கண்ட மண், தமிழ் மண்.
- ❖ "மாந்தன் ஆற்றலை விஞ்சிய இயற்கை ஆற்றல் ஒன்றுண்டு; அதற்கு இயவுள் என்பது பெயர்" எனக் கண்ட மண் தமிழ்மண்;
- ❖ "இயற்கை ஆற்றல் ஆக்கமும் செய்யும்; அழிவும் செய்யும்; ஆனால் அவற்றைப் பொதுமையாய்ச் செய்யும். அதற்கு ஊழ் என்பது பெயர் என்றும்"
- ❖ அவரவர் கடமையைத் தவறாது செய்வதே தவம் என்பது என்றும் தெளிந்த மண் தமிழ் மண் என்றும் இவற்றின் மூலவைப்பகம் தமிழ் மொழி என்றும் உலகுக்கு விளக்க வேண்டுவதே நம் தேன் நிலவு.

என்றான் குயிலன்; 'ஓம்' என்றாள் குயிலி;

௸♦௵

# 25. தமிழுலா

**பனிமலர்**, தம் மருத்துவ மனையைத் தம்மையடுத்திருந்த மருத்துவர் பொறுப்பில் ஒப்பிக்கவும், **செவ்வேள்**, தம் நம்பிக்கைக்குரிய **மேற்பார்வையர்** பொறுப்பில் கட்டுமான வேலையை ஒப்படைக்கவும், **வெள்ளியார்** பொறுப்பில் வீட்டை ஒப்படைக்கவும், **பொன்னியை** மூத்த பாட்டியார் **தாமரைச் செல்வியார்க்கு உற்ற உதவியராக இருக்க வைக்கவும்** முடிவெடுக்கும் போது, **திருமால்** வந்தார்.

'**காளி**' நான் செய்த கொடுமைகளை எல்லாம் மறந்துவிடுங்கள். "அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவ மாட்டார்கள்" என்பதை அறிந்து கொண்டேன். என் இனியளை அவள் கணவனுடன் நான் பார்க்க வேண்டும். நீங்கள் என் குற்றங்களைப் பொறுத்த குணவான். **என்னைத் திருத்தவே அறைந்தீர்கள்**; நாம் இனி ஒருமையுடன் மணமக்களை வரவேற்பதாக ஏற்பாடு செய்யுங்கள். அவர்களை மாலையும் கழுத்துமாக நான் காணவேண்டும் என்கிறாள்; நான் இனியளிடமும் மருகனிடமும், உங்கள் இருவரிடமும் கேட்டு வருவதாகச் சொல்லி வந்தேன்" என்றார்.

"அப்பா என்று இனியள் வந்து கையைப் பற்றினாள். **நானும் குயிலரும்**, குயிலும் குயிலுமாக வீட்டுக்கு வரவேண்டு மென்று எண்ணினேன். அம்மா தம் இயல்பை மாற்றாமல், '**இங்கே நுழையாதே**' என்றால், குயிலர் மனம் நோவும் என்பதால், மலரம்மாவோடு இங்கே வந்தேன். இல்லையானால் உங்களோடு அன்றேவந்து அம்மாவைப் பார்த்தே திரும்பியிருப்பேன். என்ன கொடுமை செய்தாலும் என்னைப் பெற்றவர் அல்லவா;

"அடித்தாலும் அன்னா என்னும் குழவி" என்னும் **குலசேகரர்** வாக்கு **திருமாலாம்** நீங்கள் கனிந்து கனிந்து பாடுவதுதானே; நீங்கள் அம்மாவோடு இங்குவர வேண்டா; நாங்கள் எல்லாரும் அங்கு வருகிறோம்; வந்து திரும்பும்போது, 'அம்மாவையும் அப்பாவையும்' எங்களோடு இங்குவந்து செல்ல இப்போதே வேண்டிக் கொள்கிறோம்" என்றாள்; அவர் வரவு கண்டதும் **மலர், வேள், பொன்** மூவரும்

வந்துவிட்டதால், ஐவரும் வருவதாகவும் எழுவராகத் திரும்புவதாகவும் ஏற்றுக் கொண்டனர்.

கனிக்கும் மருதிக்கும் இந்த நற் செய்தியைத் தெரிவித்தனர். மருதி, மலரிடம் அம்மா நல்லையா எண் என்னிடம் உள்ளது. அவர் எங்கும் போகவில்லை. திருமணத்தையும் அவர் மறைந்து நின்றே கண்டு சென்றதைச் சொன்னார். அவர்க்குச் சொன்னால், **"பிரிந்தவர் கூடிய பேறு வாய்க்குமே"** என்றார். மிகமிக நல்லது என்றார் பனி.

திருமால் வீடு சென்றார். நீங்கள் மட்டும் வருகிறீர்கள்; என்றார் காளி. எல்லாரும் சேர்ந்து வருவார்கள்; நாம் ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும் அல்லவா என்றார்.

"நாளை மாலை **'மருவீட்டு' அழைப்பு** எனக் கொண்டு, மேளதாளத்தோடு நாம் வரவேற்க ஏற்பாடு செய்யலாம் என நினைத்து உன்னோடு கலந்து பேசி முடிவெடுக்க வேண்டும் என வந்தேன்" என்றார்.

இனி, **எல்லாம் உங்கள் முடிவுதான்; நான் நீங்கள் சொல்வதைச் செய்வேன்** என்றாள் காளி. மாலைக்கு ஏற்பாடு செய்தனர்; மேளம் குழலிசைக்கு ஏற்பாடு செய்தனர். வேண்டும் இருக்கைகள் அமைத்தனர். அனைவரும் குறித்த பொழுதில் வர, மேளதாளம் முழங்கக் **காளி** இனியைக்கும் **திருமால்** குயிலனுக்கும் மாலை சூட்டி வரவேற்றனர். இனியளும் குயிலும் அவர்களை வணங்கினர். நல்லையா தாடி தலைப்பாகையோடு வந்தவர்; அப்பாகையை எடுத்து உள்ளே வைத்திருந்த மலர்களை, மணமக்களுக்குத் தூவி, கருப்பாயி காலைத் தொடப்போக, அவள் கையைப் பிடித்தாள்; மின்வெட்டுப்போல் நில்லாமல் மறைந்து விட்டார். மருதி, மலர், பொன் மூவர் மட்டுமே இதனை அறிந்தவர். மணமக்கள்போல் அமர்ந்ததைக் கண்ட காளி, பனிமலரிடம் வந்து, அம்மா இருவரையும் **"மாலை மாற்றச் சொல்லுங்கள்"** என்றார். அவ்வாறு அவர்கள் செய்ய, இருந்தவர்களிடம் உதிர்மலர் தந்து தூவச் சொல்லிக் கண்டு களித்தார்;

காளி ஒருபையை எடுத்து இனியளிடம் தந்தாள். அதைத் திறந்தால் "கற்றை கற்றை" உருவாத் தாள்கள். தங்கத் தொடரி எனப்

பல; "அம்மா உங்கள் அண்ணன் மகனார் திருமணத்துக்குச் செய்யுங்கள். எங்களுக்கு இந்த அழைப்பே அரிய பேறு" என்றாள்.

இனி, அண்ணனாவது அண்ணன் மகனாவது; எங்களுக்கு ஒரே பிள்ளை நீ; ஆதலால்; உனக்கே என்றார். "அம்மா உங்கள் கையில் வைத்திருங்கள்; வேண்டும் போது வாங்கிக் கொள்கிறேன்" என்று அவர்கையில் திணித்து விட்டாள் இனியள்.

மகிழ்வாக வரவேற்பை முடித்து அனைவரும் பனிமலர் இல்லம் எய்தினர். வெள்ளி முன்னரே வந்து கற்கண்டுப்பால் காய்ச்சி வைத்திருந்தார். அனைவரும் பருகினர். அவரவர் பணியை நினைந்து விடை பெற்றுக் கொண்டனர்.

தமிழுலாச் செல்லும் ஏற்பாட்டில் பனிமலரும், செவ்வேளும் ஒன்றினர்.

வாழிய நலனே! வாழிய நிலனே!



# ஆகநல் பள்ளி

**பதின்மம் மற்றும் மேல்நிலைக் கல்வி**

இது ஒரு
கொடைமாட்சி அறக்கட்டளையின் அங்கம்
அப்புத் தோட்டம், கொங்கணாபுரம்-637 102